www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

இதழ் 10
ஜுன்-ஜுலை-ஒகஸ்ற், 1993
Price: £2.00

# பனிமலர்



இந்திய இராணுவத் தலையீட்டுக்கான முயற்சிகளை எதிர்ப்போம்!

கிழக்கைத் துண்டாடும் சர்வஜன வாக்கெடுப்பை நிராகரிப்போம்!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பனிமலர்
வாசகர் மன்றம்

# முஸ்லிம் மக்கள் தமிழ்த்தேசிய இனத்தினுள்ளே உள்ள தனித்துவமான சில தன்மைகளைக் கொண்ட ஒரு மதச்சிறுபான்மையே

-ஈஸ்வரன்

முரளியின் விமர்சனம் பார்த்தேன். பின் சுபாவின் கட்டுரையும் படித்தேன். சுபாவின் கட்டுரையில் ஒரு தவறு உள்ளது. "தமிழ்த்தேசிய இனத்திலிருந்து வேறுபட்ட இஸ்லாமியத் தமிழர்" எனக் குறிப்பிட்டுள்ளது. (பார்க்க பனிமலர்இதழ் 7, பக். 11) அவர்களை வெறுமனே தமிழர் மட்டுமே எனக்கூறி பிரச்சனை உள்ளதைத் தட்டிக்கழிக்க முடியாது. அவர்களுக்கு தனித்துவமான பிரச்சனை உண்டு என்பது சரி. அது தேசிய இனத்திலிருந்து வேறுபட்ட தனிப்பிரிவு என்றாகிவிடுமா?

ஒரு நூற்றாண்டாகவே மதரீதியாக அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது தெரியும். அதனால் மதவழி அரசியல் சேர்வது, பிரிந்து நிற்பது தூண்டப்பட்டது. கடந்த 40, 50 ஆண்டுகளாக சிங்கள அரசு திட்டமிட்டே முஸ்லிம்களுக்கு அரசியல் சலுகை வழங்கி வந்து முஸ்லிம் பிளவைத் தூண்டி வந்தது. பிரித்தாள்வது மோதவிடுவது என முரண்பாடுகளைத் தூண்டுவது மூலம் ஒன்றிணைய விடாது தடுத்தும் - பகைமையைத் தூண்டி மோதவிட்டும் வந்தது. இதனால் இலங்கைத் தமிழ் மக்களிடையே ஒரு மதப் பெரும்பான்மையும், மதச்சிறுபான்மையும் நிலவுகின்றது. தமிழ்த்தேசிய அரசியல் உணர்வு மதப்பெரும்பான்மையிடமே அதிகம் வளர சிறுபான்மையிடம் பின்தங்கிய மத உணர்வுகளே நிலவின. அரசு சாதி, பிரதேச பிறசாத்தியமான எல்லா முரண்பாடுகளையுமே தூண்ட முனைந்து பார்த்துத் தோற்ற கதை தெரிந்ததுதானே! இது மட்டுமே வெற்றியளித்துள்ளது.

மேலும் தமிழர் ஒரு தேசிய இனமாக - முழுக்க முழுக்க - உள்ளார் என்பது சரியல்ல. தேசிய இன உருவாக்கம் நிகழ்கிறது. இது சமூக பொருளாதார பண்பாட்டுப் பிணைப்புக்களையொட்டிய ஒரு அளவு மாற்றம். இனி ஒரு பண்பு மாற்றம், அதாவது; அரசதிகாரத்தைக் கைப்பற்றி தேசிய அரசமைத்தல் - ஏற்பட்டாலே தொடர்ந்து வளர்ச்சியை முன் கொண்டுபோய் நிறைவு செய்ய முடியும். இந்நிலையிலேயே போராட்டம் வெடிக்கிறது. எனவே தேசிய இனம் என்னும்போது இன்னமும் வளர்ச்சியில் உள்ள ஆனால் basic developement ஐ அடைந்துவிட்ட ஒன்றாகவே புரிந்துகொள்ள வேண்டும். தாவிப் பாய்ச்சலுக்கான பண்பு மாற்றத்துக்கான process இலேயே பிரச்சனை நிலவுகிறது. சமூக பொருளாதாரப் பிணைப்புகளில் அல்ல.

முஸ்லிம் மக்கள் காலனித்துவ அரசினால் மதஅரசியல் அணியாகத் திரட்டப்பட்டனர். சிங்கள அரசின் பிரித்தாளும் - மோதவிடும் தந்திரத்தால் தவறான அரசியலைப் பின்பற்றுகிறார்கள். மதவாத ஏகாதிபத்திய சார்பு, அரை நிலப்பிரபுத்துவ சார்பு அரசியலின் செல்வாக்கில் உள்ளனர். முஸ்லிம் மதமே ஒரு முதலாளிய ஜனநாயக சீர்திருத்தப் போராட்டத்தால் மாற்றியமைக்கப்படல் வேண்டும். இத்துடன் நிலவும் ஏகாதிபத்திய சார்பு அரசியலை எதிர்த்த தேசிய சுதந்திர அரசியலை முன்கொண்டு போகவேண்டும். இந்த இரு தளத்திலுமான 'எதிர்ச் சிந்தனை' வளர்ச்சியைப் பொறுத்தே அவர்கள் தேசிய இனத்தில் கலப்பது சாத்தியம். இதில் கட்டாயம் (பலவந்தம்) கூடாது. அரசியல் பிரச்சாரமே வழி. மதச்சீர்திருத்தம் அவர்களுக்குள்ளிருந்தே வரவேண்டும். அதை வெளியேயிருந்து திணிக்க முடியாது. அவைகளை கடந்த கால அச்சங்களிலிருந்து மீட்க, தம் நலன்களைப் பாதுகாக்க உத்தரவாதமளிக்கவே 'சுயாட்சி' வடிவம். சுயாட்சி உத்தரவாதமும் அரசியற் பிரச்சாரமும் சேர்ந்து அவர்களை எதிர்காலத்தில் சரியான வழிக்குக் கொண்டுவரும். காட்டுமிராண்டிப் பண்பாட்டை எதிர்த்த மதச்சீர்திருத்தமும் தோன்றி வளர்ந்தால் இந்த அரசியல் ஒன்று கலப்பு புனிதமாகும். இல்லாவிடினும் அவர்கள் எதிர்நிலையைவிட்டு நடுநிலைக்காவது வருவது நிச்சயம். [தேசிய இனங்களை மதரீதியாகப் பிரித்தாள்வது இன்று பரவலாக உள்ள போக்கு என்பதைக் கவனிக்கவும்].

முரளியின் விமர்சனம் கிறுக்குத்தனமாக உள்ளது. (தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பயன்படுத்தவும் மேலாதிக்க நோக்கிலுமே முஸ்லிம் மக்களைப் பார்க்க, சிந்திக்க முடியும் என்று உறுதியாக உள்ளார். மார்க்சியவாதிகள் என்று ஒரு பிரிவுள்ளது. அது வேறுமாதிரியானதென்று அவருக்குத் தெரியவில்லைப் போலும். அவருக்கு மதம் போல இனமும் ஒரு உணர்வு மட்டுமே எனத் தோன்றுகின்றது..... .கலாச்சாரம் போன்ற அம்சங்களால் தோன்றும் ஒரு எண்ணம், இது மக்களை ஆட்டிப் படைக்கிறது. ஆக இது அவரது கருத்து முதல்வாதப் பார்வையைக் காட்டுகிறது. தேசிய இனம் என்பது ஒரு சமூகம். முதலாளித்துவ சமூகம் 'சமூக பொருளாதார அமைப்பு' என்ற பொருளாயத நிலைமையிலிருந்து தோன்றும் உணர்வாகவே இன உணர்வு உள்ளது என நாம் கூறுவதை - பொருள் முதல்வாதப் பார்வையை - அவர் சோவியத் யூனியனின் கருத்துக்கள் (மார்க்சிய லெனினிய சிந்தனையல்லவாம்) என்று நிராகரிக்கிறார். இவருக்கு திரிபுவாத கிழக்கு ஐரோப்பாவின் மாற்றம் வீழ்ச்சி (தென்னை மரத்தில் தேள் கொட்ட பனை மரத்தில் நெறி கட்டியதாம்!), சுயநிர்ணய உரிமையை பகிடியாக்கிறதாம். உலகம் முழுவதும் சுயநிர்ணய உரிமை என்ற முழக்கம் போராட்ட முழக்கமாக இருக்க இவருக்கு மட்டும் பகிடியாகிறது. புரட்சிகர விடுதலை உணர்வாக இனஉணர்வைக் காணமுடியாமல் அதை பின்தங்கியதாகக் காண்பது 'முன்னேறிய ஏகாதிபத்திய உணர்வுக்கு' இவர் எந்தளவு ஆட்பட்டுள்ளார் என்பதையே காட்டுகிறது. முதலில் மார்க்சிய லெனினியம் சொன்னவற்றைப் புரிந்துகொள்ளட்டும். பின்பு திருத்தும் வேலையைப் பார்க்கலாம்.

முஸ்லிம் மக்கள் தம்மை எப்படி வரையறுக்கிறார்கள் என்பதைக் கணக்கிலெடுக்கவில்லையாம். ஒருவர் தன்னைப் பற்றி என்ன சொல்லிக்கொள்கிறார் என்பதை வைத்து அல்ல, அவர் என்னவாக இருக்கிறார் என்பதை வைத்துத்தான் மதிப்பிட வேண்டும். இதுதான் நாம் கற்ற பாடம் (அரசியல் பொருளாதார விமர்சனம் பக். 9) இங்கே எப்படி ஆராய்வது, பொருள்முதல்வாத வழியிலா? அல்லவா? என்பதே பிரச்சனை.

சுபா 'முஸ்லிம்களை தமிழ்தேசிய இனத்தினுள்ளே உள்ள சில தனித்துவமான தன்மைகளைக்கொண்ட ஒரு மதச்சிறுபான்மை' என வரையறுத்துக் கொள்வதே சரியானது. அதன்மீது இதர கருத்துக்கள்அனைத்தையும் சீராகத் தொகுக்கலாம். இதர கருத்துக்கள் எல்லாம் சரியானவை. வரையறுப்பை சரியாக வைக்காததாலேயே குழப்பங்களுக்கு இடமுண்டாகிறது.

www.tamilarangam.net

# இலங்கை மீது இந்திய இராணுவத் தலையீட்டுக்கான முயற்சிகளை எதிர்ப்போம்!

# கிழக்கைத் துண்டாடும் சர்வஜன வாக்கெடுப்பை நிராகரிப்போம்!!

கடந்த மே மாதம் இடம் பெற்ற பிரேமதாசாவின் கொலை இலங்கை நாட்டை ஒரு அரசியல் திருப்பத்திற்கு இட்டுச்சென்று கொண்டிருக்கிறது. பிரேமதாசா, ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதித்துவம் செய்யும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் கீழ்மட்டப் பிரிவினரின் அரசியல் பிரதிநிதியாக இருந்தார். மேல் மட்டத்தினரின் அரசியல் தலைவராக ஜே.ஆர்.விளங்கி வருகின்றார். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த இந்த இரண்டு அணிகளுக்குள் ஜே.ஆர். அணி ஏகாதிபத்திய கல்வியறிவு பெற்ற கற்றறிந்தோர் குழாமாகவும், இந்திய ஆதரவாளராகவும் விளங்கியது. இவர்களுடனான தனது அணியின் போராட்டத்திற்கு சமூகச் செல்வாக்கைத் தேடிக்கொள்ள பிரேமதாசா ஏழை களின் தொண்டனாகவும், இந்திய எதிர்ப்பாளனாகவும் விளங்கினார். ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் இலங்கையின்மீது இந்திய மேலாதிக்கத்தைத் திணிப்பதை எதிர்த்து ஜே.வி.பி. இன் தலைமையில் நடந்த எழுச்சி ஜே.ஆர். ஐ பதவி யிலிருந்து அகற்றியது. இந்திய மேலாதிக்க எதிர்ப்புணர்வு பெரும் போராட்ட அலையாக வீசிக்கொண்டிருந்த நேரத்தில் பிரேமதாசா ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். தமிழ்-சிங்கள மக்களின் இந்திய மேலாதிக்க எதிர்ப்புப் போராட்டத்திற்கு பணிந்துவர நிர்ப்பந்திக்கப்பட்டார். இந்தியப்படையை வெளியேறுமாறு கோரினார். இவ்வாறு கோரியதன் விளைவாக இந்திய ஆளும் வர்க்கத்திற்கும், இலங்கை ஆளும் வர்க்கத்திற்கும் இடையில் முரண்பாடு தோன்றியது. இந்தியப்படையை இலங்கையிலிருந்து திரும்பப் பெறவேண்டிய நிலைக்கு இந்திய அரசு தள்ளப்பட்டது.

ஜே.ஆர்.-ராஜீவ் ஒப்பந்தத்தின் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒழித்துக்கட்டும் இராணுவக் குறிக்கோள் நிறைவு பெறாமல் இந்தியப்படை வெளியேற்றப்பட்டதில் ஜே.ஆர். அணி திருப்திப்படவில்லை. பிரேமதாசா, ஏறத்தாள ஒரு இலட்சம் சிங்கள மக்களை வேட்டையாடி ஜே.வி.பி.ஐ ஒழித்துக்கட்டியதுபோல விடுதலைப் புலிகளையும் தனது சொந்த இராணுவ வல்லமையைக் கொண்டு ஒழித்துக்கட்டி விடலாம் எனக் கனவு கண்டார். இந்தக் கனவு பொய்த்துப் போனதை கடந்த இரண்டு ஆண்டுகளின் அனுபவம் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு உணர்த்தியுள்ளது.

இந்தியப்படை வெளியேற்றப்பட்ட போதும், இலங்கையின்மீது தனது மேலாதிக்கத்தைத் திணிக்கும் முயற்சியை இந்திய அரசு தொடர்ந்து வந்தது. "இந்தியப்படை வெளியேறினாலும் இந்திய இலங்கை ஒப்பந்தம் இலங்கையில் அமுலில் இருப்பதாகவும்", "இலங்கையின் உள்விவகாரங்களில் **மூன்றாம்** நாடுகள் தலையிடுவதை இந்தியா அனுமதிக்காது" என்றும் இந்திய அரசு கூறிவருகிறது. ஈழத்தமிழினத்தின் விடுதலை யுத்தம் நீண்ட யுத்தமாக இருப் பதன் காரணமாக ஒருவரையொருவர் வெல்லமுடியாத நிலையில் விடுத லைப்புலிகளிடமிருந்தோ அல்லது இலங்கை அரசிடமிருந்தோ தனது தலையீட் டிற்கான கோரிக்கைக்குக் காத்திருந்தது. ராஜீவ் கொலை முதல்வாய்ப்பை தடை செய்ததால் இலங்கை அரசிடமிருந்து தலையீட்டிற்கான கோரிக்கையைத் தூண்டும் முயற்சியில் இறங்கியது.

பனிமலர் - 10
ஜூன் - ஜூலை - ஓகஸ்ற் 1993

தொடர்புகளுக்கு:
BM PANIMALAR
LONDON
WC 1N 3XX
U.K.

எழுத்துப் பதிவு,
வடிவமைப்பு:
கிருஷ்ணராஜா

அச்சுப்பதிப்பு:
SET LINE DATA LTD



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரேமதாசாவை நேரடித் தலையீட்டிற்கான தடையாகக் கருதியது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும், பிற சிங்கள ஆளும் வர்க்கங்களுக்குள்ளும் இருந்த முரண்பாட்டைப் பயன்படுத்தி அவரது ஆட்சியைக் கவிழ்க்க அரசியல்ரீதியாக முயன்றது. இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரேமதாசாவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எதிர்க்கட்சிகளும் EPRLF உம் இந்தியாவை ஆதரித்து பின்வரும் குற்றச்சாட்டுகளை வைத்தன. 1. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்கத் தவறியது, 2. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது, 3. தமிழ்த் தேசிய இராணுவத்தை ஒழித்துக்கட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியது. எனினும் இந்த அரசியல் முயற்சி தோற்கடிக்கப்பட்டது.

கடந்த மே மாதம் பிரேமதாசா சதித்தனமான முறையில் கொல்லப்பட்டார். ஏகாதிபத்திய அடிவருடியும், இன ஒடுக்குமுறையாளனும், கொடிய பாசிச அரக்கனுமான பிரேமதாசா ஆளும் வர்க்கங்களுக்குள்ளேயே எழுந்த முரண்பாட்டால் பலியானார். இதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள மேல் தட்டுப் பிரிவினர் அதிகாரத்தைக் கைப்பற்றி உள்ளனர். அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள இந்த அணியின் நலன்கள் காரணமாக இலங்கை ஒரு அரசியல் திருப்பத்தையும் அதன்விளைவாக அரசியல் கட்சிகளின் அணிசேர்க்கையில் ஒரு மாற்றத்தையும் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

ஆட்சியில் அமர்ந்த கையோடு 1994 ஆம் ஆண்டுக்கென 840 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய "உதவி"யைப் பெறவுள்ளனர். இது இந்த ஆண்டைக்காட்டிலும் 15 மில்லியன் அமெரிக்க டொலர் அதிகமானதாகும்! இவ்வாறு கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ள இலங்கை அரசுக்கு முன்னால் இரண்டு அபாயங்கள் இருக்கின்றன. ஒன்று, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை யுத்தம் தோற்கடிக்கப்பட முடியாமல் தொடர்கிறது. மற்றொன்று ஏகாதிபத்திய பல்தேசியக் கம்பெனிகளின்சுரண்டலுக்குப் பலியாகிவரும் சிங்கள மக்களின் தோள்களில் இந்த யுத்தத்தின் சுமை சுமத்தப்படுவதை எதிர்த்தும், பாசிச அடக்குமுறைகளை எதிர்த்தும் மீண்டும் ஜே.வி.பி. தலைதூக்குவதற்கான வாய்ப்புக்கள். இந்த அபாயங்களைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றன சிங்கள ஆளும் வர்க்கங்களும் அவற்றின் அரசும். இதனால் தமிழ்த் தேசிய இனத்தின் மீது மேலும் குரூரமான அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடத் தயாராகிறது. தமிழீழ விடுதலை முழக்கத்தின் பௌதீக அடிப்படையாக விளங்கும் பிரதேசத் தொடர்ச்சியை வேரறுக்க முயல்கிறது. கிழக்கு மாகாணத்தைத் துண்டாட "சர்வஜன வாக்கெடுப்பு" நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

விடுதலை யுத்தத்தின் தீவிரத்துக்கும், ஜே.வி.பி. அபாயத்திற்கும் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒழித்துக்கட்டும் இராணுவச் செலவுக்கு இலங்கையின் பொருளாதார நிலமை அனுமதிக்காது என்பதால் இந்திய இராணுவத் தலையீட்டைக் கோருகிறது. தமிழ்த் தேசிய இனத்தை ஒடுக்கியும் சிங்கள மக்கள்மீது பாசிச அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்தும், முழு இலங்கை நாட்டையுமே இந்திய மேலாதிக்கத்திற்கு அடகு வைத்தேனும், தனது அரசையும் அதிகாரத்தையும் காப்பாற்றிக்கொள்ள சிங்கள ஆளும் வர்க்கங்கள் மீண்டும் துணிந்துவிட்டன.

அண்டைநாடுகள்-குறிப்பாக பாகிஸ்தான்-உடனான உறவுநிலையையும், உள்நாட்டு நெருக்கடிகளையும், சர்வதேசச் சூழ்நிலையையும், இலங்கை மக்களின் இந்திய மேலாதிக்க எதிர்ப்புணர்வையும் கவனத்திலெடுத்து இத் தலையீட்டிற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தையும் வடிவத்தையும் தேர்ந்து கொள்வது குறித்து இந்திய இலங்கை அரசுகள் தீவிரமாகச் சிந்தித்து வருகின்றன.

தமிழர் கூட்டணியும்,EPRLF உம் பாராளுமன்றத் தெரிவுக்குழு அம்பலமானதிலிருந்து இந்தியத் தலையீட்டைக் கோரிவந்தனர். EPRLF புது டெல்லியின் ஆலோசனைகளோடும், விஜேதுங்காவின் அனுசரணையோடும் கிழக்கு மகாணத்தில் முகாமிட்டுள்ளது. இந்திய அரசு கவர்ந்து சென்ற வரதராஜப்பெருமாள் கொழும்பு திரும்பி "அரசியலைத் தொடருவார்" எனப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இந்திய இலங்கை ஒப்பந்தப்படி சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு உதவுவது என்ற போர்வையிலோ, அல்லது பிரபாகரனைக் கைதுசெய்ய என்று கூறியோ எதன்பேரிலும் எந்த வடிவிலும் வந்தாலும் இந்தத் தலையீடு எதிர்க்கப்படவேண்டியதாகும். ஏனெனில் இது இந்திய மேலாதிக்கத்தை இலங்கையின்மீது நிறுவும்பொருட்டு இலங்கையின் இன ஒடுக்கல் அரசை நிலைநிறுத்துவதும் தமிழ்த் தேசிய இன விடுதலை யுத்தத்தை நசுக்குவதுமான அநீதியான குறிக்கோளைக் கொண்ட அந்நியத் தலையீடாகும். இதற்கான முயற்சிகள் எதிர்க்கப்பட வேண்டியவையாகும்.

இலங்கை இந்திய அரசுகள் தமது அடக்குமுறைக்கும் தலையீட்டுக்குமான மேற்கண்ட காரணங்களை முடிமறைத்து, தாம் மக்களின் நலன்களைச் சார்ந்தவர்களாகக் காட்ட நடத்தப் போகும் கிழக்கு மாகாண சர்வஜன வாக்கெடுப்பு நிராகரிக்கப்பட வேண்டியதாகும்.

**PANIMALAR-10**
**June- July- August 1993**

**A Tamil Magazine**

**BM PANIMALAR**
**LONDON**
**WC 1 N 3XX**
**U.K**

**Type Set &**
**Layout by:**
**Krishnarajah**

**Printed by:**
**SET LINE DATA LTD.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

As of July 13, Chairman Gonzalo has been held in complete isolation for........




# 275 DAYS

Last October, Chairman Gonzalo-leader of the Maoist Communist Party of Peru-was sentenced to life imprisonment by hooded military judges. Since then, he has been seen outside his jail cell only once-on April 3 as he was being transferred in an iron cage to a concrete dungeon on a navy base. The fascist regime in Peru is holding this revolutionary leader of the Peruvian people under very brutal conditions. He is being denied visits by lawyers, doctors and relatives and deprived of his medicine. People who support the revolution in Peru and anyone who opposes injustice around the world have an urgent task-to create an international political climate which compels the Peruvian government to provide Comrade Gonzalo basic rights as a ploitical prisoner. And the reactionary regime must be prevented from killing Chairman Gonzalo by bringing back the death penalty or by other means.











ஈழத்தமிழ் மக்களே!

- கீழைத்தேசங்களின் தேசிய விடுதலைப் புரட்சிகளிற்கு முன்னோடியாக விளங்கும் பெருவிய மக்கள் யுத்தத்தை ஆதரியுங்கள்!
- பெருவிய புரட்சியினதும், கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைவர் தோழர் கொன்சாலோவின் உயிரைப் பாதுகாக்கும் இயக்கத்தை வலுவூட்டுங்கள்.
- ஒடுக்கப்படும் தேசங்களின் விடுதலைப் புரட்சிகளோடு ஒன்றுபட்டு ஈழதேச விடுதலைக்காகப் போராடுங்கள்!!!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒடுக்கும் சிங்கள தேசிய இனத்தின் பரந்துபட்ட மக்கள் பற்றி

சிறிலங்கா சிங்கள பேரினவாத அரசு தன்னை சிங்கள மக்கள் மத்தியில் நிலை நிறுத்திக் கொள்ள இனவாதத்தையும் பௌத்த மதவாதத்தையும் தூக்கிப் பிடித்துள்ளது. சிங்களப் பெரும்பான்மை மக்களின் சமுக, அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு காரணம் சிங்கள முதலாளிவர்க்கமும் ஏகாதிபத்தியமும் என்பதை மறைத்து, மற்றைய தேசிய இனங்களே எனக் காட்டுவதும், ஏனைய தேசிய இன மக்களுடன், தொழிலாளி, விவசாய வர்க்கங்களுடன் பெருந்தேசிய இனத்தின் சுரண்டப்படும் சிங்கள மக்கள், தொழிலாள விவசாய வர்க்கம் ஐக்கியப்பட்டு விடாதபடி தடுப்பதும் முக்கிய அம்சம். இதில் சிங்கள ஆளும் வர்க்கமும் அரசும் தொடர்ந்து வெற்றி பெற்றே வந்திருக்கிறது. "சிங்கள பௌத்த பேரினவாதம்" சிங்கள மக்கள் மத்தியில் ஒரு ஜனரஞ்சகவாத நிலையிலேயே தன்னை ஸ்திரப் படுத்தியுள்ளது. இனவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் இடது வலதுகள் உட்பட எல்லோரும் 'ஜனரஞ்சகவாதத்திற்கு' பலியாகி விட்டார்கள் என்பதுதான் வரலாறு. சிறிலங்காவில் உள்ள புரட்சிகர இடதுசாரி சக்திகள் இது விடயத்தில் தெளிவாக இருக்கின்ற போதும் மிகவும் பலவீனமாகவே இருக்கின்றார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டும். இன்று பரந்துபட்ட சிங்கள மக்கள் இனவாதத்துள் மூழ் கடிக்கப்பட்டுள்ளார்கள். தங்கள் சமுக வளர்ச்சிக்கு, தேசிய



சுயாதிபத்தியத்திற்கு உண்மையான எதிரிகள் யார் என்பதைக் கண்டுகொள்ள முடியாமல் தடுமாறுவதும் தங்கள் எதிரிகளுக்கு எதிராகப் போராடும் ஒடுக்கப்பட்ட தமிழீழத் தேசிய இன மக்களது போராட்டத்தையே எதிரியாக காண வைக்கப்பட்டுள்ளார்கள். அரசாலும் ஆளும் வர்க்கத்தாலும் இனவாத, மதவாத மந்திரக் கோல்களால் நேர்த்தியாகக் கட்டப்பட்டுள்ளார்கள். சிறிலங்கா அரசு தமிழீழ தேசியஇன மக்கள் மேல் தொடுத்திருக்கின்ற இனவாத யுத்தத்தை ஒரு புனித யுத்தமாக, சிங்கள மக்களின் விடுதலை யுத்தமாக முழு நாட்டின் அமைதிக்கான இறுதி யுத்தமாகக் காட்டி அப்பாவி சிங்கள மக்களை சிறிலங்கா அரசும் ஆளும் வர்க்கமும் ஏமாற்றுகிறது. யுத்தவரியை அறவிடுவதன் மூலமும் யுத்தத்திற்குத் தேவையான மனித வளத்தை சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதனுடன் தனது ஆளும் வர்க்க நலனை அந்நிய ஏகாதிபத்திய சார்பை, பரந்துபட்ட சிங்கள மக்களின் நலனாகக் காட்டி முதலாளிவர்க்க அரசயந்திரத்தை காக் கிறது. உண்மையில் பரந்துபட்ட சிங்கள மக்களை இன் னமும் இன, மதவாத மாயைக்குள் அழுத்தி வைத்திருப்பதன் மூலம்தான், தமிழீழ தேசிய இன மக்கள் மீது தொடர்ந்து ஒரு தேசிய ஒடுக்குமுறை யுத்தத்தை நடத்த முடிகிறது. தமிழீழ தேசிய இன மக்களின் விடுதலைப் போராட்டத்தை தொடரும் சக்திகள் ஒவ் வொன்றும், பரந்துபட்ட சிங்கள மக்களுக்கு சிறிலங்கா ஆளும் பேரினவாதிகளினதும், ஏகாதிபத்தியங்களினதும் முகத்திரையை அகற்றிக்காட்ட வேண்டும். இது இரண்டு வழிகளில் செய்யப்பட வேண்டும். முதலாவது அரசியல் கொள்கைரீதியாக சிறிலங்கா அரசும் ஆளும் வர்க்கமும், ஏகாதிபத்தியங்களும் எமது எதிரிகள் என்பதையும், சிங்கள மக்கள் எமது நண்பர்கள் என்பதையும், எமது எதிரிகளே அவர்களதும் உண்மையான எதிரிகள் என் பதையும் புரிய வைத்து எதிர்த்துப் போராடும்படி கோரவேண்டும்.

இதை நாம் எல்லா நிலைகளிலும் மேற்கொள்ளும் பிரச்சாரங்கள், கிளர்ச்சிகள் மூலம் சிங்கள பரந்து பட்டமக்களின் உணர்வு நிலையில் மாற்றத்தைக் கொடுக்கும்படி செய்ய வேண்டும். இரண்டாவது, அரசுடன் நாம் நடத்தும் யுத்தத்தின் விளைவாக அரசு சிங்கள மக்கள்மேல் நடாத்தும் பொருளாதார நெருக்கடிகளையும் யுத்த்தில் ஏற்படும் மனிதவள இழப்பும் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணும். இதன் ஆழமான தன்மையை பரந்துபட்ட சிங்கள மக்கள் புரிந்து, சிங்கள அரசு மீதும், ஏகாதிபத்தியங்கள் மீதும் மக்கள் எதிர்ப் புக்களை தெரிவிக்கும் போராட்டங்களை வழிநடாத்த வேண்டும். இது தொடர்ச்சியான யுத்தத்தின் நிகழ்ச்சிப் போக்கில் நடக்கும். ஆனால் இதை வழிப்படுத்தி அர சுக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண் பாட்டைக் கூர்மைப்படுத்துவது என்பதும், அவர்கள் எதிரியை எதிர்த்து நடாத்தும் போராட்டங்களை ஆளும் வர்க்கத்தின் வேறு பிரிவுகள் பயன்படுத்திவிடாது, புரட்சிகர திசைவழியில் வளர்ப்பதும், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஆதரிக்கச் செய்வதும், இறுதியில் தமழீழத் தேசியப் போராட்டத்தில் நிற்கும் தேசபக்த புரட்சிகர சக்திகளுடன் ஒன்றுபட்டு போராடுவது என்பதும் திட்டமிட்ட அரசியல் அமைப்பு வழியில் இருந்து செய்யப்பட வேண்டும்.

நமது கடந்த பத்தாண்டு யுத்த அனுபவம் தந்திருக்கும் பாடம் வேறு ஒன்றாக இருக்கிறது. சிறிலங்கா அரசை எதிர்த்து, யுத்தத்தில் முழுப்பங்கு வகித்து வரும் விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசுக்கும் சிங்கள பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொண்டு செயற்படவில்லை. இங்கும் தமிழ் தேசிய வெறி யாகவும் குறுக்கு வழித்தந்திரங்களாகவுமே வெளிப்பட்டது. அப்பாவிச் சிங்கள மக்களை படுகொலை செய்வதன் மூலம் அரசுக்கு நெருக்கடியை உண்டாக்கலாம் என நம்பிச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது சிங்கள மக்கள் அரசுமேல் வெறுப்படைய ஒரு வேகமான வழி என நினைக்கின்றது. எல்லைப் புறங்களில் உள்ள தமிழ் மக்கள் அரசை எதிர்த்து கிளம்புவதற்கும் கெரில்லாக்களாக மாறுவதற்கும் கூட சிங்கள மக்கள் மேலான தாக்குதல்கள் பயன்படுத்தப்படுகின்றது. மொத்தத்தில் சிங்களக் குடியேற் றங்களை தடுக்கும் ஒரே வழியாக குடியேற்றச் சிங்களவர்களை கொலை செய்வதே வழி என பல குறுக்கு வழி நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. ஆனால் இவை எதுவும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன் தள்ளிச் செல்லவுமில்லை, தமிழீழ மக்களின் போராட்டம் நியாயமானது என்ற உணர்வை சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்து விடவுமில்லை. உள்ளபடியே சிறிலங்கா அரசுக்கு எதிராக சிங்கள மக்களைத் திட்டமிட்டு திருப்பி விடவுமில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு முற்போக்கு தேசிய இயக்கமாக கூட உள்நாட்டு மக்களும், வெளிநாட்டு மக்களும் அங்கீகரிப்பதற்குப் பதில் ஒரு தமிழ் இனவாத இயக்கமாகவும் பாசிசப் புலிகளாகவுமே அங்கீகரித்து இருக்கின்றனர். LTTE யின் சிங்கள மக்களைப் பற்றிய குறுகிய பார்வையும் அதன் குறுக்கு வழி சுயநல

➡20



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**1983 — 1993**

# பத்தாண்டு ஈழப்போர்: படிப்பினைகளும் பாதையும் பணிகளும்.

*1983 ஜூலை 25 ஆம் நாள் இலங்கை என்கிற பவளத்தீவு பற்றி எரிந்த நாள். காலனியாதிக்கவாதிகளின் பிரித்தாளும் தந்திரத்தாலும் சிங்கள - தமிழ் ஆளும் வர்க்கங்களின் ஏகா திபத்திய - ஜனநாயக விரோத நலன் காரணமாகவும் கட்டி வளர்க்கப்பட்ட இனக்குரோதம் காட்டுத்தீயாய் தமிழர்களைச் சுட்டெரித்த நாள்.*

இந்த இன அழித்தொழிப்பு அதுவரை நிலவிவந்த அரசியற் சூழ்நிலையில் ஒரு திருப்பமாக அமைந்தது. இத் திருப்பம் பின்வரும் நிகழ்ச்சிகளால் வெளிப்பட்டன.

1). தமிழ் மக்கள் பிரிவினை கோருவதைத் தேசத்துரோகம் என அறிவிக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தம் சட்டமாக்கப்பட்டது.

2). ஜே.வி.பி.அமைப்பு தடை செய்யப்பட்டது.

3). சமரசவாத கூட்டணித் தலைமை மக்களிடமிருந்து தனிமைப்பட்டு ஈழத்தமிழர் பிரச்சனையில் இந்தியத் தலையீட்டிற்கு அழைப்பு விடுத்தது.

4). இன ஒடுக்குமுறையில் இருந்து ஈழத்தமிழர்களைக் காப்பாற்றப் போவதாக இந்திய அரசு முழங்கியது.

5). ரசிய சமூக ஏகாதிபத்தியம் இந்திய அரசின் முயற்சியை ஆதரித்தது.

6). தமிழ்நாட்டின் தி.மு.க., தி.க. ஆகிய கட்சிகள் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற இந்திய இராணுவத்தை அனுப்புமாறு கோரினர்.

7). தமிழ் நாட்டின் புரட்சிகர சக்திகள், 'தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்போம்', 'இந்திய இராணுவத் தலையீட்டை எதிர்ப்போம்', 'தமிழகத்தை பின்புலமாக்குவோம்', என்ற முழக்கங்களின் அடிப்படையில் விடுதலைப் போராளிகளை ஆதரித்து, தமிழக மக்களிடையே பிரச்சாரம் செய்தனர்.

8). தமிழ் மக்களிடையே பாராளுமன்றப் பாதையும், சீர் திருத்த முறைகளும் செல்வாக்கிழந்து போராளிக் குழுக்கள் தீர்மானகரமான சக்தியாக உருவெடுத்தன. மலையக, முஸ் லிம் மக்களிடையே இருந்தும் கணிசமான இளைஞர்கள் போராளிக் குழுக்களில் இணைந்தனர்.

9). ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் உள்நாட்டு யுத்தம் என்ற வடிவத்தை எடுத்தது.

10). தனித் தமிழீழ நாடு கோரி இலங்கை அரசுக்கெதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஈழப்போராளிக் குழுக்கள் இந்தியாவை - குறிப்பாகத் தமிழகத்தைப் பின்புலமாக்கிக்கொண்டன.

இந்த வரலாற்று நிகழ்ச்சிகளுக்குப் பின்னே தொழிற்பட்ட வர்க்க சக்திகள் அடிப்படையில் இரண்டு முகாம்களைச் சார்ந்தவை. அமெரிக்க ரசிய ஏகாதிபத்தியங்களும், இந்திய இலங்கை அரசுகளும், தமிழர் கூட்டணி மற்றும் திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திய திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒடுக்கும் முகாமைச் சார்ந்தவை. தமிழர் கூட்டணி, தி.மு.க., இந்திய திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகியவை அதிகாரம் உள்ளபோது நேரடியாகவே மக்களை ஒடுக்குகிறவையாகவும், இல்லாதபோது ஒடுக்குமுறையை எதிர்த்த மக்களின் போராட்டங்களை சமரசப் பாதையில் திசை திருப்பி ஆளும் வர்க்கங்களையும் அவர்களது அரசுகளையும் பாதுகாக்கும் பாத்திரத்தை ஆற்றுபவை.

தமிழ் மக்களும் (போராளிக் குழுக்களும்), சிங்கள மக்களும் (ஜே.வி.பி.அமைப்பும்), மலையக முஸ்லிம் மக்களும், தமிழக மக்களும் (தமிழக புரட்சிகரசக்திகளும்) ஒடுக்கப்படும் முகாமைச் சார்ந்தவையாகும்.

ஈழமக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சனை தன்னளவில் இலங்கை நாடு தழுவிய ஒரு உள்நாட்டுப் பிரச்சனை மட்டுமல்ல. ஏகாதிபத்திய உலகப் பொருளியல் அமைப்பு நிலவும் இன்றைய காலகட்டத்தில் இத்தகைய தனித்த உள்நாட்டுப் பிரச்சனையாக மட்டும் ஒன்று இருத்தல் இயலாது. மேலும் 1983 ஜூலை இன அழித்தொழிப்புடன் ஈழத்தமிழர் பிரச்சனையில் இந்திய ஆளும் வர்க்கம் தலையிட்டதும், போராளிக் குழுக்கள் தமிழகத்தைப் பின்புலமாக்கிக் கொண்டதும் ஈழத்தமிழர் பிரச்சனையை பிராந்திய, சர்வதேச நிலைமைகளோடு நேரடியாகத் தொடர்புபடுத்திற்று.

அன்றைய சர்வதேசிய, பிராந்திய, தேசிய சூழ்நிலைகளில் ஒடுக்குவோரின் முகாமுக்கும், ஒடுக்கப்படுவோரின் முகாமுக்கும் இடையேயான முரண்பாட்டையும், ஒடுக்கும் முகாமுக்குள்ளேயும், ஒடுக்கப்படும் முகாமுக்குள்ளேயும் நிலவிய முரண்பாடுகளையும், ஈழவிடுதலைப் போராட்டத்தின் வெற்றியை நிச்சயப்படுத்தும் வகையில் எவ்வாறு கையாள வேண்டும் என்பதே 1983 ஜூலையில் ஈழத்தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்சனையாகும். கடந்த பத்தாண்டுகால ஈழப் போராட்டத்தின் வரலாற்றை அறிந்துகொள்வது என்பது இம்முரண்பாடுகள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதையும் அதன் சரியான, தவறான தன்மைகளையும் அறிந்து கொள்வதாகும்.


இம்முகாம்களைச் சார்ந்த வர்க்க சக்திகளுக்கு இடையேயான போராட்டமே கடந்த பத்தாண்டுகால வரலாற்றின் உந்துசக்தியாக உள்ளது. இவ்வர்க்க சக்திகளுக்கிடையேயான அரசியல் போராட்டம் பல்வேறு இடைக்கட்டங்களைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாண்டி வந்திருக்கிறது. இந்த இடைக்கட்டங்கள் ஒவ்வொன்றும் அதன் அரசியல் சக்திகளின் அணிசேர்க்கையில் உள்ள வேறுபாட்டின் காரணமாகவும், அதன் இராணுவ நடவடிக் கையில் உள்ள வேறுநாட்டின் காரணமாகவும் வேறுபட்டன. எனவே விடுதலைப் போராட்டத்தின் இவ்வெவ்வேறான கட் டங்களின் அரசியல் குறிக்கோளும் முழக்கங்களும் வேறு



பட்டன. ஒவ்வொரு கட்டத்திலும் விடுதலைப் போராட்டத்தின் முன்னேற்றத்திற்குப் பொருத்தமான குறிக்கோள்களும் முழக்கங்களும் முன்வைக்கப்பட்டனவா, அவற்றைப் பின்பற்றி மக்கள் மத்தியில் அரசியற் பிரச்சாரக் கிளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதைப் பொறுத்தே விடுதலைப் போராட்டத்தின் முன்னேற்றமும் அரசியல் கட்சிகளின் வெற்றி தோல்வியும் தீர்மானிக்கப்பட்டன.

### 1983 ஜுலை எழுச்சிக்கு முந்தைய கட்டம்:

சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களிடையே அரசியல் செல்வாக்கு வகித்து வந்த தமிழ் ஆளும் வர்க்க கூட்டணித் தலைமை மூன்று முக்கிய முழக்க ங்களின் மீது தமிழ் மக்களைத் தன்பின்னால் திரட்டியிருந்தது. அவையாவன: 1). தமிழ்க்குறுமி னவாதம், 2).சமரசவாதம், 3) பாராளுமன்ற சட்டவாதம்.

பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் சுதந்திரம் என்ற பெயரால் சிங்கள - தமிழ் ஆளும் வர்க் கங்களுக்கிடையே கைமாற்றிக்கொண்ட அதி காரத்தை, சிங்கள ஆளும் வர்க்கங்கள் தமது ஏகபோகமாக்கிக்கொள்ள - மலையக மக்களின் வாக்குரிமைப் பறிப்பு - முயன்ற போதுதான் தமிழ் ஆளும் வர்க்கத்தினருக்கு 'இனப்பற்று' வந்தது. இதனால் இந்த இனப்பற்று இலங்கை மக்களை ஒடுக்குவதற்கான அதிகாரத்தில்- அரசில் தாமும் ஒரு பங்கைப் பெற்றுக்கொள் வதற்காக சிங்கள ஆளும் வர்க்கத்துடன் நடத் திய போராட்டத்திற்கு ஒரு சமூக அடிப்படையைத் தேடிக்கொள்வதற்கான கருத்தியலாக அமைந்தது. சிங்கள ஆளும்வர்க்கங்கள் மைய அதிகாரத்தை தமது ஏகபோகமாக்கிக் கொள்ளும் பொருட்டும், அதை மக்கள் கைப்பற்றிக்கொள்வதைத் தடுக்கும் பொருட் டும் சிங்களப் பெருந்தேசிய இனத்தை சிறுபான்மை இன மக்களுக்கு எதிராகத் தூண்டின. இதற்காக 'சிங்கள பேரினவாத பௌத்த மதவாத' கருத்தியலை தமது சித்தாந்த ஆயுதமாக எடுத்துக்கொண்டன. தமிழ்,மலையக, முஸ்லிம் மக்கட் சமுகங்களின் ஆளும் வர்க்கங்கள் தமது அதிகாரப் போட்டியை மூடி மறைக்கவும், மக்களைக் கூறு போடவும் இனவாதப் பாதையையே பின்பற்றினர். இவ்வாறு தமிழ்க் குறுமினவாதம் ஒரு அரசியற் சிந்தனைப் போக்காக தமிழ் மக்களிடையே வளர்க்கப்பட்டது. இந்தப் பிரச்சாரம் தமிழர் களிடையே வாக்குவேட்டையாடப் பயன்படுத்தப்பட்டதே தவிர, இலங்கை அரசின் தேசிய இன ஒடுக்குமுறையை தடுப்பதையோ மாற்றுவதையோ தனது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

சிங்கள ஆளும் வர்க்கத்துடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் தமது வர்க்கத்தின் தேவையையே தமிழி னத்தின் அனைத்து ஒடுக்கப்படும் வர்க்கங்களின் தேவையாகவும் கூட்டணித் தலைமை பிரச்சாரம் செய்தது. இதனால் தேசிய இன ஒடுக்குமுறைக்கு முடிவு கட்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வுகாணக் கோருவதற்குப் பதிலாக,அதிகாரப் பகிர்வு என்ற சமரசவாத சீர்திருத்த கோரிக்கையை முன் வைத்து வந்தது. இதை அடைவதற்கான வழிமுறையாக பாராளுமன்றவாதத்தையும் சட்டவாதத்தையும் மக்களிடையே விதைத்தது.

இந்த நச்சுவிதைகளை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தி தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை புரட்சிகரப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கான முயற்சிகள் முளைவிட்ட நேரத்தில், இலங்கை அரசின் பாசிச தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்த நாடுதழுவிய பேரெழுச்சி 1983 ஜுலையில் தமிழ் மக்களிடையே வெடித்தது. அந்தத் தன்னியல்பான குறுந்தேசியவாத எழுச்சியின் தீவிரத்தால் பாராளுமன்றவாதமும் சமரசவாத சீர்திருத்த முறைகளும் செல்லாக்காசாகின. கூட்டணித் தலைமை மக்களிடமிருந்து தனிமைப்பட்டது.

போராளிக் குழுக்கள் தீர்மானகரமான சக்திகளாயினர். 1983 ஜுலையின் தன்னெழுச்சி, ஆரம்பத்தில் சுட்டிக்காட் டப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களும், தேசிய இன ஒடுக்குமுறை யாளர்களுமான ஒடுக்கும் முகாமுக்கும், இவர்களை எதிர்த்த ஒடுக்கப்படும் முகாமுக்கும் இடையேயான அர சியல் போராட்ட அரங்கத்துக்குள் போராளிக் குழுக்களைத் தூக்கி வீசியது.

இந்த எதிரிகளையும் நண்பர்களையும் பற்றிய சரியான கணிப்பும், விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு உகந்த முறையில் இவற்றைக் கையாள்வதற்கான திட்டமும், இத்



திட்டத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட அரசியல் கட்சியும், அதன் தலைமையில் அமைப்பு ரீதியாக திரட்டப்பட்ட மக் கள் சக்தியும் இல்லாமலேயே அன்றைய சூழ்நிலையை போராளிக்குழுக்கள் எதிர்கொண்டனர்.

### 83' ஜுலை எழுச்சியிலிருந்து - 85' திம்புப் பேச்சுவார்த்தைவரை:

83 ஜுலை நிலைமைகளைப் பயன்படுத்தி 'தமிழ் மக் களின் காவலன்' என்ற போர்வையில் இலங்கையின்மீது தனது மேலாதிக்கத்தை நிறுவ இந்திய அரசு முயன்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரசிய சமூக ஏகாதிபத்தியம் இலங்கையைத் தனது ஆதிக்க மண்டலத்துக்குள் கொண்டுவரும் பொருட்டு தனது பிராந்திய ஏஜென்டான இந்திய அரசின் இந்த முயற்சியை ஆதரித்தது. எனவே ஏகாதிபத்திய நலனிலிருந்தும், இந்திய விஸ்தரிப்புவாத நலனிலிருந்தும் இலங்கையின் மீது தலையிட மூன்று உபாயங்களைக்கொண்ட ஒரு மேலாதிக்கக் கொள்கையை இந்திய அரசு பின்பற்றியது. அவையாவன:

1. இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையென்ற வழக்கமான ராஜதந்திர முறைகளைக் கையாள்வது.

2. போராளிக் குழுக்களுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கி மறைமுகமாகத் தலையிடுவது

3. இறுதியாக இந்திய இராணுவத்தின் மூலம் நேரடியாகத் தலையிடுவது.

இந்த மேலாதிக்கக் கொள்கையை நிறைவேற்றும் பொருட்டு போராளிக்குழுக்களை அணுகிய இந்திய அரசை, 'இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்தல்' என்ற கொள்கையிலிருந்து போராளிக் குழுக்கள் அணுகினர். மேலும் விடுதலைப் புலிகள் நீங்கலாக ஏனைய குழுக்கள், ரசிய சமூக ஏகாதிபத்தியம் சோசலிச அரசென்றும், அதற்கும் இந்திய அரசுக்குமிடையிலான உறவு முற்போக்கானதென்ற கருத்தையும் கொண்டிருந்தனர்.




அரை அடிமை நாடான இலங்கையின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் சிங்கள ஆளும் வர்க்கங்களுக்கும் அவர்களது அரசுக்கும் எதிரானதாக இருப்பது மட்டுமல்லாது அது ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இந்திய ஆளும்வர்க்கத்தின் விஸ்தரிப்பு வாதத்திற்கும் எதிரானதாக இருக்கிறது என்பதை இக்குழுக்கள் உணரவில்லை. இதன் காரணமாக இந்திய அரசு பாகிஸ்தானில் தலையிட்டு வங்காள தேசத்தைப் பிரித்தது போல் இலங்கையில் தலையிட்டு ஈழதேசத்தைப் பிரித்துத் தரவேண்டும் என முழங்கினர்.

இலங்கை ஆளும்வர்க்கங்களுக்கும் இந்திய ஆளும் வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாட்டை பயன்படுத்த 'ஈழத்தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும்' என்ற கொள்கையை அடிப்படையாகக் கொள்ளவில்லை. இது இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான முரண்பாட்டை கவனத்திற் கொண்டு விடுதலைப் போராட்டத்தின் முன்னேற்றத்திற்கு மறைமுகமாகப் பயன்படுத்திக்கொள்வதற்குப் பதிலாக நேரடியாகவே இந்திய ஆளும் வர்க்கத்தைச் சார்ந்திருக்க வழி கோலியது. இவர்கள் இந்திய இலங்கை ஆளும் வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாட்டைப் பயன்படுத்த முயற்சித்ததைப் போலவே, இந்திய ஆளும் வர்க்கத்தினரும் இந்திய அரசும் போராளிக் குழுக்களுக்கும் இலங்கை அரசுக்கிடையேயுள்ள முரண்பாட்டையும், போராளிக்குழுக்குழுக்கிடையேயுள்ள முரண்பாட்டையும் தமது மேலாதிக்க நோக்கத்திற்காகப் பயன்படுத்த முயற்சித்தன.

இதன் விளைவாக பின்புலத்தில் தமிழக மக்களையும், புரட்சிகர சக்திகளையும் சார்ந்து நிற்பதற்குப் பதிலாக TELO, EPRLF, PLOT ஆகிய அமைப்புக்கள் இந்திய மத்திய அரசைச் சார்ந்து நின்றன. விடுதலைப் புலிகள், EROS ஆகியவை தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரை நம்பிச் செயல்பட்டன. EPRLF உம் EROS உம் இந்திய திருத்தல் வாதக்கட்சிகளை நட்பு சக்திகளாகக் கண்டன. விடுதலைப் புலிகள் தமிழக முதல்வரை நம்பியிருப்பினும் தமது சொந்த இராணுவ வன்மையை வளர்த்துக்கொண்டு இலங்கை அரசின் பாசிஸ தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்துத் தீவிரமாகப் போரிட்டனர். இத்தருணத்தில் 'மக்கள் புரட்சி' நடத்தப் போவதாகக் கூறிய ஏனைய குழுக்களின் தலைமைகள் தம்முடன் இணைந்துகொண்ட ஆயிரக்கணக்கான போராளிகளை இந்தியப் பயிற்சி முகாம்களில் 'ஆயுதத் தவத்தில்' இருத்தியிருந்தனர். இதனால் விடுதலைப் புலிகள் உள்நாட்டு யுத்தத்தின் முதன்மையான சக்தியாக வளர்ந்து அப்போரைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் மாறினர்.

1985 ஆம் ஆண்டு ஜுன் மாதம், இந்திய அரசு தனது மேலாதிக்கக் கொள்கையை அமுலாக்கும் பொருட்டு 'திம்பு'வில் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தது. இலங்கை அரசு, இந்திய அரசு, ஈழப்போராளிகள் சம்பந்தப்பட்ட இப்பேச்சுவார்த்தையில், 'இலங்கை அரசிலிருந்து - ஒடுக்கும் சிங்களத் தேசிய இனத்திடமிருந்து ஈழத்தமிழ் தேசிய இனம் பிரிந்து செல்லாமலும், இராணுவ வழியில் அல்லாமல் அரசியல் வழியிலும் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என இந்திய அரசு வற்புறுத்தியது. மேலும் சுயநிர்ணய உரிமைக்கு மாற்றாக, இந்தியாவில் மாநிலங்கள் பெற்றிருப்பதைப் போன்ற அதிகாரத்தைக் கீழ்மட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் 'சுயாட்சி அதிகாரம்' (Self Rule) என்கின்ற தீர்வை இந்திய அரசு முன்வைத்தது.

இலங்கையின்மீது தன் மேலாதிக்கத்தைத் திணிப்பதற்கும், அதற்கு ஏற்றாற்போல தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் உகந்த முறையில் இந்திய அரசு முன்வைத்த தீர்வை போராளிக் குழுக்கள் ஏற்கவில்லை. எனினும் பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாமல் இருப்பதற்கு இலங்கை அரசைக் காரணமாக்கினரே தவிர, இந்திய அரசு முன்வைத்த தீர் வையோ, அதை ஏற்றுக்கொள்ளச் செய்ய கொடுத்த நிர்ப் பந்தங்களையோ அம்பலமாக்கவில்லை. அதுமட்டுமல்ல இந்திய அரசு சுயநிர்ணய உரிமையை ஏற்க மறுப்பதையும், தனது மேலாதிக்கத்துக்கு உகந்த தீர்வைத் திணிப்பதையும் நியாயப்படுத்தவும் செய்தனர். எடுத்துக்காட்டாக;

"இந்தியா தன்னுடைய நலனிலிருந்தே பேச்சுவார்த் தையை எம்மீது திணித்தது என்று வைத்துக் கொள் வோமே. அதில் என்ன தவறு?

முதலாவதாக, ஈழவிடுதலை அமைப்புகள் இந்தி யாவின் நட்புறவை மீறிச் செயற்படும் பட்சத்தில் சர்வதேச முற்போக்கு ஜனநாயக, பாட்டாளிவர்க்க சக்திகளின் ஆதரவைப் பெறமுடியாது என்பதோடு ஈழமக்களும் அதை விரும்ப மாட்டார்கள்.

இரண்டாவதாக, ஈழமக்களின் நலனும் இந்திய நலனும் இன்றைய காலகட்டத்தில் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவையாக, ஒன்றுக்கொன்று முரணற்றவையாக உள்ளன.

இவ்வாறான நிலைமையின்போது ஈழவிடுதலை அமைப்புக்கள் இந்தியாவின் நட்பை மீறி செயற் படுமாக இருந்தால் இது இன்றைய எதார்த்தத்தின் தேவைக்கு முரண்பாடானதாகவே இருக்கும்...." என தனது பாசமிகு தேச மக்களுக்கு EPRLF அறி வித்தது.

இவ்வாறு ஈழத்தனிநாடு காண்பதற்கும், அதற்காக ஆயுதமேந்திப் போராடவும் இந்திய அரசைப் பயன்படுத்தப் போவதாகச் சொல்லிக்கொண்ட போராளிக் குழுக்கள், அந்த இலட்சியங்களுக்கு எதிராக இந்திய அரசு வந்து நின்றபோதும் அதன் "நட்பைமீறிச் செயற்பட" தயாரற்று இருந்தனர். இந்த எதார்த்தத்தின் தேவைக்கு முரண்பாடான நிலையை எடுத்துக்கொண்டதின் காரணமாக இவர்கள் மக் களுக்கும் விடுதலைப் போராட்டத்திற்கும் துரோக மிழைத்தனர். இப்போது வேண்டுமானால் 'விடுதலைப் புலிகள் தம்மை அழித்ததால்தான் இலங்கையில் புரட்சி தடைப்பட்டு விட்டது' என இவர்கள் கூறிக்கொள்ளாலாம். தமது தேசத்துரோகத்தை முடிமறைக்க விடுதலைப் புலி களின் பாசிஸப் போக்கைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் இவர்களின் தேசத்துரோகத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் தமது ஏகபோகத்தை நிலைநாட்டிக் கொண்டார்கள் என்பதே உண்மை.

இதற்கான களத்தையும் இந்திய அரசு உருவாக்கிக் கொடுத்தது. தனது மேலாதிக்கக் கொள்கையை போராளிக் குழுக்களின்மீது திணிக்கும் பொருட்டு இந்திய அரசின் உளவுப்படையான RAW போராளிக்குழுக்களிடையான முரண்பாடுகளைப் பயன்படுத்தி அவற்றைத் தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தது. இக்குழுக்கழுக் கிடையில் "சகோதர யுத்தங்களைத் " தூண்டிவிட்டது. விடுதலைப் புலிகளுக்கெதிராக EPRLF, PLOT, TELO ஆகிய அமைப்புக்களை ஒரு முன்னணிக்குள் கொண்டுவந்தது. இவ்வமைப்புகளுக்குள்ளேயிருந்த இந்திய எதிர்ப்புணர்வு கொண்ட ஜனநாயக சக்திகளை ஒழித்துக்கட்டியது. அது வரையிலும்கூட போராளிக்குழுக்கள் தம்மிடையேயான முரண்பாடுகளை பகைமையான வழிகளிலேயே தீர்த்துக் கொண்டிருந்தாலும் எந்தவொரு ஆளும் வர்க்கத்தினரும் கைப்பாவையாக இருக்கவில்லை. இந்த நிலைமாறி EPRLF, PLOT, TELO ஆகிய குழுக்கள் இந்திய அரசின் கைப்பாவைகளாக மாறி துரோகக் குழுக்களாய் ஆயின.

விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தக் காலகட்டத்தை தனது முதலாளித்துவத் தொலைநோக்கிலிருந்து வேறுவிதமாகக் கையாண்டது. இந்திய அரசு தொடர்பாக சந்தர்ப்பவாத உறவைக் கடைப்பிடித்து வந்தாலும் ஆயுதப் பயிற்சிக்கும், ஆயுதங்களுக்கும் இந்திய அரசையே நம்பியிருக்கவில்லை. திம்புப் பேச்சுவார்த்தையில் இந்திய அரசின் நிர்ப்பந்தங்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தத் தவறியிருந்தாலும் திம்புப் பேச்சுவார்த்தையால் எச்சரிக்கை அடைந்தது. விடு தலைப் புலிகள் அமைப்பையும், அதன் அணிகளையும் இந்திய அரசுக்கெதிராக தயார்ப்படுத்தியது. தமிழீழ விடு தலை இலட்சியத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் கைவிடப்பண்ணும் இந்திய அரசின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிய மறுத்தது. இந்தியாவின் நட்பை மீறியும் இந்த இலட்சியங்களைப் பாதுகாக்கத் தயாராகியது. இலங்கை அரசின் பாசிஸ தேசிய இன அடக்குமுறை யுத்தத்தை எதிர்த்து உறுதியாகப் போரிட்டது. விடுதலைப்போராட்டத்தை சமரசப்பாதையில் சீரழிக்க முயன்ற கூட்டணி சமரச வாதிகளுக்கு எதிராகத் தொடர்ந்து தாக்குதல் தொடுத்தது. விடுதலைப் போராட்டத்தை ஒழித்துக்கட்ட இந்திய அர சால் ஏவப்பட்ட துரோகக்குழுக்களை பாசிஸவழியில் தோற் கடித்தது. இதன்மூலம் விடுதலைப் போராட்டத்தின் ஏக போக சக்தியாகவும் தீர்க்கமான சக்தியாகவும் தன்னை நிலைநிறுத்திக்கொண்டது. இவ்வாறு இந்திய அரசானது ஒருபுறம், விடுதலைப் போராட்ட முகாமிலிருந்து தனக்குச் சார்பான ஒரு துரோக அணியை உருவாக்கிக்கொண்டு, மறுபுறம் இலங்கை அரசை எதிர்த்து தமிழ் மக்கள் - குறிப் பாக விடுதலைப் புலிகள் நடத்திய ஆயுதப் போராட்டத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசை நிர்ப்பந்தித்து அதன்மீது ஓர் ஒப்பந்தத்தைத் திணித்தது.

## திரும்பிப்பார்த்துத் திருத்திக்கொள்வோம்

"திம்பு பேச்சுவார்த்தையானது இவ்வாறு கலைந்துபோனபின் மீண்டும் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகவும் இனப் பிரச்சனைக்குச் சுமுகமான தீர்வு காணப் போவதாகவும் (அரசியல் தீர்வு) கூறிக்கொண்டே **சிறீலங்கா அரசு** திம்புப்பேச்சு வார்த்தையின்போது அனைத்துப் போராளிகள் அமைப்புக்களும் இணைந்து முன்வைத்த பேச்சுவார்த்தைக்கான அடிப்படையான விடயங்களை நிராகரித்தது.

போராளிகளால் முன்வைக்கப்பட்ட அடிப்படை அம்சங்கள்:

1. தமிழினமானது சுயநிர்ணய உரிமையுள்ள தேசிய இனமாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
2. வடக்குக் கிழக்குப் பிரதேசம் தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
3. தமிழும் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
4. பிரஜா உரிமை அற்றிருக்கும் மலையக இலங்கையை தாயகமாக ஏற்றுக்கொண்ட அனைத்து மக்களுக்கும் குடியுரிமை வழங்கப்படல் வேண்டும்."

*(புதியபாதை- மே, 1987)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம்:



இந்த ஒப்பந்தம் இந்திய இலங்கை அரசுகளுக்கிடையே செய்யப்பட்ட ஒப்பந் தமாகச் சொல்லப்பட்டாலும், ரசிய சமூக ஏகாதிபத்தியம் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒப்புதலுடன்தான் செய்யப்பட்டது. அவற்றின் ஒப்புதலுடன் தான் இந்திய அரசு தனது "அமைதி காக்கும்" படையை இலங்கைக்கு அனுப் பியது. இந்த ஒப்பந்தத்தின் நோக்கம்;

1.இலங்கையின் அரைக்காலனித்துவ அரசமைப்பை நிலை நிறுத்துவதும்,

2.தமிழ்த் தேசிய விடுதலை இயக் கத்தை நசுக்குவதும்,

3.இலங்கையின்மீது இந்திய மேலாதிக்கத்தை நிறுவுவதுமே ஆகும்.

இத்தலையீட்டில் இரண்டு அம்சங்கள் அடங்கியிருந்தன. ஒன்று, இலங்கை முழுவதன் மீதும் தனது மேலாதிக்கத்தைத் திணிப்பது. மற்றொன்று, இலங்கையின் ஜனநாயக விரோத அரசமைப்பை நிலை நிறுத்தும் பொருட்டுத் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலை இயக்கத்தை நசுக்குவது - இந்திய மாநிலங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும் ஜனநாயக விரோத சீர்திருத்த முறையைத் திணிப்பது.

ஆகையால் இத்தலையீடு தமிழ் மக்களுக்கு மட்டும் எதிரானது அல்லாமல் முழு இலங்கைக்கும் எதிரானது ஆகும். இதனால் இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்போர் அனைவரையும் ஐக்கியப்படுத்துவதற்கு தமிழ்மக்களின் கோரிக்கை தடையாக இல்லாதிருக்கும் பொருட்டு, தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றாக சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை இச் **செயல் தந்திர காலகட்டத்தின்** கோரிக்கையாக மாற்றியமைத்துக் கொள்வது அவசியமானது.

எனவே இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பதும், தமிழ்த்தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை கோருவதும் இக் கால கட்டத்தின் செயல் தந்திரத்தின் உள்ளடக்கமாயிற்று. இவை யிரண்டிலும்கூட முதலாவதற்கு இரண்டாவதை உட்படுத்திப் பார்ப்பது அவசியமாகும்.

இந்திய ஆக்கிரமிப்புப் படை இலங்கையில் தலையிட்டு, இந்திய மேலாதிக்க ஒப்பந்தத்தை ஏற்கும்படியும், 'மகாணசபை' என்ற அடிமைத்தனமான தீர்வை ஏற்று இலங்கை அரசுக் குப் பணிந்து போகுமாறும், ஆயுதங்களை ஒப்படைத்து விடவும் ஆணை பிறப்பித்தது. விடுதலைப் புலிகள் அமைப்பு ஒப்பந்தத்தை நிராகரித்து ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்தது. தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போர் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்த விடுதலை யுத்தம் என்ற புதிய கட்டத்துக்குள் சென்றது.

இக்கட்டம் 1983 ஜூலை எழுச்சிக்குப் பிந்திய நிலைமை யிலிருந்து வேறுபட்டது. இக்கட்டத்தில், இந்திய இலங்கை அரசுகள் கூட்டாக தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்கின. விடுதலை இயக்கம் இரண்டாகப் பிளவுபட்டு ஒன்றையொன்று எதிர்க்கும் இரு அணிகளாக அமைந்தன. ஒன்று இந்திய மேலாதிக்கத்தை எதிர்க்கும் அணியாகவும், மற்றொன்று மேலாதிக்கத்தை எதிர்த்த போரில் இந்திய ஆக்கிரமிப்புப்படைக்கு சேவகம் செய்யும் ஒரு அணியாகவும், இந்தியப்படை நடத்திய ஒரு போலித்தனமான தேர்தலில் பங்குகொண்டு, வடக்கு கிழக்கு மகாண அரசாங்கத்தில் அமர்ந்து மக்களை ஒடுக்கிய அணியாகவும் மாறியது.

இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்த போராட்டம் தமிழர்கள்மீது சிங்களவர்கள் கொண்டிருந்த பகை மனப்பான்மையை ஓர ளவுக்கு மாற்றியமைத்தது. சிங்கள மக்களிடையிலும் இந் திய மேலாதிக்கத்திற்கும் இலங்கை அரசின் பாசிஸத்திற்கும் எதிரான உணர்வைத் தட்டியெழுப்பியது. ஜே.வி.பி. இலங் கை அரசை எதிர்த்து ஆயுதப்போராட்டத்தைத் துவக்கிற்று.

## USA WELCOMES PEACE AGREEMENT

Robert Peck, a senior official of the US State Department, in testimony before the House Foreign Affairs Sub-Committee on Asia and Pacific Affairs on 6 August, inter alia, said:

"I am very pleased to appear before you today to discuss the situation in Sri Lanka. In past appearances before this Committee we have discussed the tragic ethnic conflict in that island nation and how the United States could best assist in bringing about a peaceful settlement. I am happy to report that Sri Lankan President Jayawardene and Indian Prime Minister Gandhi signed an agreement to end the conflict in Colombo on July 29. As a good friend of Sri Lanka, we welcome the agreement. President Jayawardene...Prime Minister... both have shown the vision to focus on the long term interest of their countries..."

(Source: Sri Lanka Review 15 August 1987)

## SOVIET UNION'S VIEW ON AGREEMENT.

Reflecting Soviet Union's official view, the 3rd August issue of 'Pravda' said that the agreements between New Delhi and Colombo aimed to frustrate the plans of imperialist powers that try to use the Sri Lankan crisis in their interests and refuse to give the Trincomalee base to a third country, to limit and control activities of the Voice of America radio station, to recall Pakistan and Israeli military advisors.

"The Sri Lankan crisis played a rather important role in the far reaching plans to destabilise India and encircle it by hostile regimes. Fully aware of it, Delhi tried to put out the fire of internecine war, looked for a political solution to both problems....The Indo-Sri Lanka Accord....paved the way for ending bloody ethinic conflict which has been tearing this island republic for years".

( Source: Sri Lanka Review 15 August 1987)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறு இந்திய அரசின் மேலாதிக்கத்தை எதிர்த்து இரண்டு நிகழ்ச்சிப் போக்குகள் இலங்கையில் தோன்றின. ஒன்று, இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்த தமிழ்தேசிய இனத்தின் விடுதலை யுத்தம் மற்றொன்று, இந்திய மேலாதிக்கத்தையும், இலங்கை அரசின் பாசிஸ அடக்குமுறைகளையும் எதிர்த்த சிங்கள மக்களின் போராட்டம். இவ்விரு சக்திகளும் ஐக்கியப்பட்டு ஓரே அணியில் நின்று போரிடாமல் தனித்தனியாகப் போரிட்டன. விடுதலைப் புலிகள் அமைப்பின் குறுகிய தேசியவாதம் ஒரு காரணமேயெனினும் இதற்கான பிரதான காரணம் ஜே.வி.பி. அமைப்பின் சிங்கள பேரினவாதப் போக்கேயாகும். ஜே.வி.பி. அமைப்பு இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தபோதும் வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கத்தை இந்தியாவின் துணையில் இலங்கையைத் துண்டாடுவதற்கான முயற்சி என்றே சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தது. தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தை இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் துணை கொண்டு தமது ஆளும் வர்க்கம் ஒடுக்கிக்கொண்டிருக்கிறபோது அதனை எதிர்க்கவும், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணக் கோரவும் ஜே.வி.அமைப்பு தயாராகவிருக்கவில்லை. இதுவே இரு தேசிய இனமக்களதும் இந்திய மேலாதிக்க எதிர்ப்பு இயக்கம் ஐக்கியப்பட முடியாமற்போனதற்கும், ஜே.வி. அமைப்பு பேரழிவுக்குள்ளானதற்குமான பிரதான காரணமாகும்.

எனினும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தை இந்திய ஆக்கிரமிப்புப்படைகளின் துணைகொண்டு நசுக்கி தமது பாசிஸ அரசைக் காப்பாற்றிக்கொள்ளும் சிங்கள ஆளும் வர்க்கங்களின் எண்ணத்திற்கும், இதன்மூலம் தனது மேலாதிக்கத்தை இலங்கையின்மீது நிறுவும் இந்திய ஆளும் வர்க்கங்களின் விஸ்தரிப்புவாதப் பேராசைக்கும் இப்போராட்டங்கள் பேரிடியாய் அமைந்தன. இலங்கை அரசை நிலைகுலையச் செய்யும் அளவுக்குப் போராட்ட அலை வீசியது. மக்களின் கோரிக்கைக்குப் பணிந்துவர பிரேமதாசா நிர்ப்பந்திக்கப்பட்டார். இந்திய ஆக்கிரமிப்புப்படையை இலங்கையைவிட்டு வெளியேறுமாறு கோரினார். அவ்வாறு கோரியதன் விளைவாக தமிழ்தேசிய இன விடுதலை இயக்கத்தின் எதிரிகளின் முகாமில் முரண்பாடுகள் தோன்றின. அரசியல் சக்திகளின் அணி சேர்க்கையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இந்திய ஆக்கிரமிப்புப்படையை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையின் மீது பிரேமதாசா அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் உடன்பாடு கண்டனர். தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை இந்திய மேலாதிக்க எதிர்ப்புப் போராட்டத்திற்குக் கீழ்ப்படுத்திப் பார்த்து பிரேமதாசாவுடன் விடுதலைப் புலிகள் உடன்பாடு கண்டது சரியானதேயாகும். இதன் விளைவாக இந்திய ஆக்கிரமிப்புப்படை இலங்கையைவிட்டு வெளியேற்றப்பட்டது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஓர் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

## மூன்றாவது ஈழப்போர் (ஜூன் 1991)

பிரேமதாசா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பின்வரும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக பிரேமதாசா ஒப்புக்கொண்டார்.

1. அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது.

2. வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கத்தைக் கலைத்து அதற்கு தேர்தல் நடத்துவது.

3. வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுவதைக் கைவிடுவது

இவை தமிழ்மக்களின் தாயகத்தைப் பாதுகாத்து, பிரிவினை கோருவதற்கு தமிழ் மக்களுக்குரிய உரிமையை அங்கீகரித்து, அரசியல் வழியில் தமிழ் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணக் கோரும் கோரிக்கைகளாகும். நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட இக்கோரிக்கைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை. அளித்த வாக்குறுதிகளுக்கு மாறாக மாகாண அரசாங்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டு *EPRLF*மற்றும் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்க மறுத்தது. ஆயுதங்களை ஒப்படைத்தபின்னர்தான் தேர்தல் நடத்த முடியும் எனக் கூறியது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தைக் குவித்து யுத்தத்திற்குத் தயாரானது. இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளின் அனுமதியின்றி முகாம்களைவிட்டு வெளியேவர முயன்று போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியது. ஜூன் மாத ஆரம்பத்தில் இலங்கை அரசு மீண்டும் தமிழ் மக்களுக்கெதிரான பாசிஸ தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டது. இதன்விளைவாக தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் அடுத்த புதிய கட்டத்திற்குச் சென்றது.

இந்திய அரசு 1983 – 1987 காலகட்டத்தில் கடைப்பிடித்த மூன்று அம்ச மேலாதிக்கக் கொள்கையை தற்போதைய கட்டத்தில் அப்படியே பயன்படுத்த முடியாது. ஏனெனில் அந்த நான்கு ஆண்டுகளிலும் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட சக்திகளிடையே தனிநாட்டுக் கோரிக்கையில் இருந்த ஊசலாட்டத்தைப் பயன்படுத்தி மாகாணசபையுடன் திருப்திகொள்ளச்

## திரும்பிப்பார்த்துத் திருத்திக்கொள்வோம்

சர்வதேச உள்நாட்டு காரணிகளின் விளைவாக இந்தி யாவைப் பொறுத்தவரையில்,
1.இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை அங்கீகரித்தல்.
2.பேச்சுவார்த்தை மூலமாக ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்த முயற்சித்தல் என வெளிப்படுத்தப்பட்டு வரும் கொள்கைகளை **நாம் தவறாக விளங்கிக் கொள்ளவில்லை.** ஆனால் அதேவேளை இந்தியாவானது:

1. ஈழமக்களின் சுயநிர்ணய உரிமையையும்
2. ஆயுதந் தாங்கிப் போராடும் அமைப்புக்களின் கூட்டமைப்பே ஈழமக்களின் நியாயாதிக்கமுடைய ஒரே பிரதிநிதித்துவம் என்பதையும்
3. எந்த வகைப்பட்ட ஒப்பந்தமும் ஈழமக்களின் மத் தியில் நடத்தப்படும் ஒரு பொது வாக்கெடுப்பு முறையிலான சம்மதத்துடனேயே அமைய வேண்டும் என்பதையும்
4. பேச்சுவார்த்தை என்னும் விடயத்தை ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது யுத்தத்தின் ஒரு தந்திரோபாயமாகக் கொள்கின்ற படியினால் அவ்வாறானதொரு விடயத்திலும் நாம் ஈடுபடுவதற்கு முன்னர் எமக்கு ஆயுத ரீதியில் உதவி எம்மை இராணுவரீதியில் பலப்படுத்த வேண்டும் என்பதையும் அங்கீகரித்தல் வேண்டும்.

*(போர் நிறுத்தமும் பேச்சுவார்த்தையும் - ஜூன் 1985)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

செய்து இலங்கையின்மீது தனது மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளச் செய்தது. இன்றைய கட்டத்தில் விடுதலைப் புலிகள் மட்டுமே யுத்தத்தில் நிற்பதாலும் இந்த யுத்தத்தின் குறிக்கோள் தனிநாடு காண்பதாக இருப்பதாலும் அன்றைய



உபாயங்களை இன்று பயன்படுத்த முடியாது எனக் கருதுகிறது. இதனால் இந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகள் தமிழகத்தைப் பின்புலமாகப் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. ராஜீவ் கொலையைக் காரணம் காட்டி இன ஒடுக்குமுறை யுத்தத்தின் இரண்டாவது போர்முனையை தமிழகத்தில் துவக்கியது.

ஆனால் வரதராஜப்பெருமாளைக் கவர்ந்து சென்று பாதுகாத்தது. EPRLF மற்றும் துரோகக் குழுக்களின் உறுப்பினர்களை அகதிமுகாம் என்ற பேரில் தமிழகத்தில் தனது கண்காணிப்பில் வைத்திருந்தது. இந்தியப்படை வெளியேறினாலும், இந்திய இலங்கை ஒப்பந்தம் இலங்கையில் அமுலில் இருப்பதாகவும் இலங்கையின் உள்விவகாரங்களில் **மூன்றாம்** நாடுகள் தலையிடுவதை இந்தியா அனுமதிக்காதென்றும் இந்திய அரசு கூறிவந்தது. இவையனைத்தும் மீண்டும் ஒரு நேரடித்தலையீட்டுக்கான வாய்ப்புக்கு இந்திய அரசு காத்துக்கொண்டிருந்ததைக் காட்டுகின்றது.

கூட்டணிச் சமரசவாதிகளும், இந்தியாவின் அரசியல் தரகனான EPRLF உம் மீண்டும் இந்திய அரசு தலையிடுவதற்கான அரசியல் தயாரிப்பில் ஈடுபட்டனர். இதன் பொருட்டு மக்களைத் தம் பின்னால் திரட்ட இன ஒடுக்குமுறை யுத்தம் மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் துன்பங்கள் குறித்து கவலையும் கண்டனமும் தெரிவித்து வந்தன.

PLOT, TELO, EPDP ஆகியவை இலங்கை இராணுவத்தில் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களாக இணைந்து எட்டப்பர்களாகவும் எதிரிகளாகவும் செயற்பட்டனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பு பிரேமதாசா அரசாங்கத்துடன் போர்நிறுத்த உடன்பாடு கண்டதாயினும், இலங்கைப் பேரினவாத அரசுக்குப் பணிந்து போகவில்லை. சிங்கள பேரினவாத அரசு சுயநிர்ணய உரிமையை மறுத்து, அரசியல் வழியில் தீர்வுகாணத் தயாரற்று, சுயநிர்ணய உரிமைக்கான இயக்கத்தை ஒடுக்க இராணுவ வழியில் தீர்வு காணும் பொருட்டு இன ஒடுக்குமுறை யுத்தத்தைக் கட்டவிழ்த்தது. இதனை எதிர்த்து தமிழ் மக்கள் அரசியல் சுதந்திரம் அடையும் பொருட்டு தனிநாடு அமைப்பதற்கான விடுதலை யுத்தத்தில் ஈடுபட்டது.

## விடுதலைப் புலிகளின் தற்கொலைப் பாதை:

கடந்த பத்தாண்டுகால அனுபவத்தை 'காய்தல் உவத்தலின்றி' தொகுத்துப்பார்த்தால், தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்காக - தனிநாட்டுக் கோரிக்கைக்காக அதன் எதிரிகளான இலங்கை, இந்திய அரசுகளை எதிர்த்து விடுதலைப் புலிகள் அமைப்பு விடாப்பிடியாகப் போரிட்டு வருகின்றது என்பது தெளிவாகும். எனினும் தமிழீழ விடுதலையை அடைவதற்குத் தடையாக விடுதலைப் புலிகளின் பின்வரும் தவறான கொள்கைகளை செயலாக்கி வருகின்றனர்.

1. ஒரு படையின் சர்வாதிகாரம் என்ற பாசிஸக் கொள்கையை செயல்படுத்தி வருகின்றனர்.

2. மக்கள் கமிட்டிகளுக்கு அதிகாரம் என்ற ஜனநாயக ஆட்சிமுறைக்கு மாறாக ஒரு, இராணுவ அதிகாரவர்க்க ஆட்சிமுறையைச் செயல்படுத்துகின்றனர்.

3. நிலச்சீர்திருத்தம் மற்றும் உழைக்கும் மக்களின் வாழ் நிலைமைகளை அபிவிருத்தி செய்வது பற்றி அவர்கள் கவலைப்படவேயில்லை.

4. இன்னமும் எஞ்சியிருக்கும் சாதிய ஒடுக்குமுறையை ஒழித்துக்கட்டுவதில் அக்கறை காட்டவில்லை.

5. சிங்கள உழைக்கும் மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கும், மலையக முஸ்லிம் மக்களை தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் ஐக்கியப்படுத்துவதற்கும் மாறாக அவர்களை அந்நியப்படுத்தினர். தமது குறுந்தேசிய வெறியின் காரணமாக சிங்கள மக்கள் மீதும், முஸ்லிம் மக்கள் மீதும் இராணுவத் தாக்குதல்களைத் தொடுத்தனர்.

6. விடுதலைப் புலிகள் தமது அயலுறவுக் கொள்கையை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைத்துக்கொள்ளாமல், ஏதாவதொரு வழியில் உதவியைப் பெறுதல், அல்லது எதிரிகளுக்கிடையிலானகெதிரான முரண்பாட்டைப் பயன்படுத்

## திரும்பிப்பார்த்துத் திருத்திக்கொள்வோம்



● பாராளுமன்றப் பிரவேசம் மூலம் தமிழ் பேசும் மக்களினது பிரச்சனைகளுக்கு பரிகாரம் கிடைக்காது என்பதை கடந்த காலங்கள் எமக்குச் சுட்டிக்காட்டியுள்ளதை நாம் மறந்துபோகவில்லை. இதனாலேயே நாம் இத் தேர்தலை பாராளுமன்றம் செல்லும் நுழைவாயிலாகக் கருதி வேட்பாளர்களை நிறுத்தவில்லை. பதிலாக புதிய சக்திகளின் போக்கு தவறானது என்பதைச் சுட்டிக்காட்டவும் அவர்களின் கெடுபிடிகளை எதிர்கொள்ளவுமே இத்தேர்தலைப் **பயன்படுத்த** முன்வந்துள்ளோம்.

● தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளாத இவ்வொப்பந்தம் இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பை **மட்டுமே** உறுதிப்படுத்திக்கொண்டது. தமிழ் பேசும் மக்களது பிரச்சனையை வெறுமனே மொழிப்பிரச்சனையாகவும் வடக்கு-கிழக்குப் பிரச்ச னையாகவும் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய பிரச்சனை யாகவும் இது சித்தரிக்கிறது. இவ்வொப்பந்தம் ஏற்பட்டபோது இது **தற்காலிக ஆறுதல் தரவல்லது** என்றும் எமது பிரச்சனைகளை இது தீர்த்து வைக்கவில்லை என்றும் எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி இருந்தோம். இவ்வொப்பந்தம் **திருத்தப்பட** வேண்டியதொன்று என்பதே எமது நிலைப்பாடாக இன்றும் விளங்குகின்றது.

(பா.ம. பொதுத்தேர்தல் எமது-EROS- நிலைப்பாடு, பெப்ரவரி, 1989)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துதல் என்ற வகையில் அமைத்துக் கொள்கின்றனர்.

இத்தவறான கொள்கைகள் விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்கத் தடையானவையாகவும், சமரசத்திற்கு பணிந்துபோகும் வாய்ப்பை உருவாக்குபவையாகவும் உள்ளன. தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பாரதூரமான தீங்குகளை ஏற்படுத்தியுள்ளன. தேசிய இன ஒடுக்குமுறையை அல்லது இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பதற்கான மக்கள் பலத்தின் வளர்ச்சியை பாரதூரமாகத் தடைப்படுத்தி தேசிய விடுதலை இயக்கத்தின் வெற்றியின் அளவைக் குறைத்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இவை தேசிய விடுதலைப் போராட்டத்தில் அக்கறை கொண்டவர்களுக்குப் பெருங்கவலையைத் தோற்றுவிப்பதாக இருக்கின்றது.

இந்த நிலையைப் பயன்படுத்தி விடுதலையின் எதிரிகள், ஜனநாயக உணர்வுகொண்ட இச்சக்திகளை விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக நிறுத்த பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர். இது குறித்து ஜனநாயக சக்திகள் விழிப்பாக இருப்பது அவசியமாகும். விடுதலைக்காகப் போராட ஜனநாயகவாதிகளின் அணியை உருவாக்க தடையாக உள்ள பின்வரும் கருத்துப் போக்குகள் குறித்து தீவிரமாகச் சிந்திக்கவும் விவாதிக்கவும் வேண்டியவர்களாயுள்ளோம்.

**1. குறுகிய தேசியவாதத்திற்கு மாற்று சுயநிர்ணய உரிமையே!**

விடுதலைப் புலிகளின் குறுகிய தேசியவாதத்திற்கு மாற்றாக இரண்டு தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு சாரார் சிங்கள தமிழின மக்களின் ஒன்றுபட்ட புரட்சி என்கின்றனர். மறுசாரார் அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படையில் அமைந்த சுயாட்சிமுறை என்கின்றனர்.



விடுதலைப் புலிகளின் குறுகிய தேசியவாதம் தாம் சார்ந்த தமிழினத்தை ஏனைய இனங்களிலிருந்து உயர்வானதாகக் காட்டும் முயற்சியாகும். இதன்மூலம் தமிழ் இனத்துக்குள்ளேயே உள்ள வர்க்கப் பகைமைகளை மூடிமறைக்க ஒடுக்கப்படும் தமிழ் முதலாளித்துவத்தின் அரசியற் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் முயலுகின்றார்கள். இவ்வாறு தமிழ் இனத்துக்குள்ளேயுள்ள ஒடுக்கப்படும் வர்க்கங்கள் அனைத்திற்கும் குறுகிய தேசியவாதச் சிந்தனையையூட்டி தமிழ் முதலாளித்துவம் தம் பின்னால் திரட்டிக்கொள்வதற்கு, அவ்வர்க்கங்கள் மீதான சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை புறவயவாய்ப்பாக அமைகிறது. எனவே சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டி சமரசப்பாதையில் இனசமத்துவத்தை நிலைநாட்டுவதே குறுகிய தேசியவாதத்தைத் தோற்கடிப்பதற்கான வழியாகும். தேசிய இனங்களின் சமத்துவம் பிரிந்து செல்லும் உரிமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே அடையப்பட முடியும். இது அல்லாத வேறு எந்த அதிகாரங்களைக் கீழ் மட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் சீர்திருத்த முறைகளும் இன ஒடுக்குமுறைக்கு முடிவுகட்டி இனசமத்துவத்தை நிலை நாட்டமாட்டா.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தனித்தன்மை வாய்ந்த கூறுகள் காரணமாக தமிழ்த்தேசிய இன சுயநிர்ணய உரிமைப் போராட்டம் பிரிவினை என்ற வடிவத்தை எடுத்து விட்டது. தமிழ் மக்கள் தனிநாடு அமைத்துக்கொள்வதற்கான காரணங்களும் அவசியமும் இன்னமும் நீடித்திருக்கின்றன என்பதைக் கடந்த பத்தாண்டுகளின் அனுபவமும் அண்மைய நிகழ்வுகளும் நிரூபிக்கின்றன. ஒடுக்கப்படும் தமிழ்த்தேசிய இனத்தின்மீது ஒடுக்கும் சிங்களத் தேசிய இனமும், அத்தேசிய இன ஆளும் வர்க்கங்களின் அரசும் அடக்குமுறை தொடுப்பதை எதிர்த்து, தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காக சிங்கள உழைக்கும் மக்கள் போராடதவரை இவ்விரு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களை ஒன்று படுத்துவதோ ஓரணிக்குள் கொண்டுவருவதோ சாத்தியமானதல்ல.

இந்நிலையில் 'ஐக்கிய இலங்கைப் புரட்சி', 'அதிகாரப் பரவலாக்கம்' என்ற பாதைகள் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு துணை போபவையாகவே அமையும். இதன் மூலம் தமிழ்த்தேசிய இனத்தின் மத்தியிலுள்ள குறுகிய தேசியவாதச் சிந்தனையை மேலும் வலுப்படுத்த முடியுமே தவிர தோற்கடிக்க முடியாது.

**2. விடுதலைப் புலிகளை இலங்கை இந்திய பாசிஸ அரசுகளுடன் சமப்படுத்தக் கூடாது.**

விடுதலைப் புலிகளின் பாசிச அடக்குமுறை காரணமாக அவர்களை இந்திய இலங்கைப் பாசிச அரசுகளுடன் சமப்படுத்தும் பார்வை தவறானதாகும். விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையில் ஊன்றி நிற்பதன் காரணமாகவே இந்திய இலங்கை அரசுகளினால் ஒடுக்கப்படுகின்றார்கள். எனவே விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் தரப்பிலும் விடுதலைப் போராட்டத்தின் தரப்பிலும் நிற்கின்றார்கள்.

தமது செல்வாக்குட்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைத்திருக்கும் தற்காலிக அரசு வடிவங்கள் (நீதிமன்றம், காவற்துறை, சிறைச்சாலை, சட்டங்கள், சிற்றூர், பேரூர் அவைகள்......) எவ்வளவுதான் அடக்குமுறைத் தன்மையைக் கொண்டவையாக இருப்பினும் காலனியாதிக்கக் காலம் முதல் பெருந்தேசிய வெறியின் மீதும், இன ஒடுக்குமுறையின்மீதும் கட்டப்பட்ட இந்திய இலங்கைப் பாசிச அரசுகளுக்கு அவை சமமானவையாகமாட்டா. மேலும் இரண்டு நிபந்தனைகளிலேயே இவை நிலைபெற முடியும். ஒன்று: தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுதல். இரண்டு: விடுதலையைக் கைவிட்டு ஆளும் வர்க்கங்களுடன் சமரசம் செய்தல். விடுதலைப் போராட்டத்தின் வெற்றியும் இந்த அடக்குமுறை அரசு வடிவங்களும் ஒன்றுடன் ஒன்று பொருந்தமாட்டா. இரண்டாவது நிபந்தனையில் இவை மக்களிடமிருந்து விரைவாகவே தனிமைப்பட்டுவிடும்.

விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு அவசியமான மக்கள் கமிட்டிகளுக்கு அதிகாரம் என்ற ஜனநாயக ஆட்சி வடிவம் பற்றிய புரிதல் மக்களுக்கு ஊட்டப்படுமானால் இந்த அடக்குமுறை ஆட்சி வடிவங்கள் நிலைக்கமாட்டா. இவற்றைச் சாதிப்பதற்கு விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பது முன்நிபந்தனையாகும். இந்நீதியான விடுதலை யுத்தம் மாற்றத்திற்கான பாதைகளைத் திறந்து விட்டிருக்கிறது. மாற்றத்திற்கான பணிகளையும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 3. புலிகளின் ஏகபோகத்துக்கு மாற்று "புலி ஒழிப்பு" அல்ல, ஐக்கிய முன்னணியே.

இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் தமிழ் மக்களுக்கு இரண்டு தேவைகள் உள்ளன. ஒன்று விடுதலை. மற்றையது ஜனநாயகம். சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையில் இருந்து தமிழினம் விடுதலை பெறாமல் தனது ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க முடியாது. விடுதலை பெற்ற நாட்டில் தமிழ் மக்களது ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்யும் அரசை அமைக்காமல் விடுதலையின் பயன்களை அடையமுடியாது. விடுதலையைப் பாதுகாக்க முடியாது.

எனவே விடுதலை பிரதானமானது. ஜனநாயகம் இன்றியமையாதது. விடுதலைப் புலிகள் விடுதலைக்காகப் போராடுகிறார்கள். அதற்கு இன்றியமையாததான ஜனநாயக உரிமைகளை வழங்க மறுக்கிறார்கள். இந்த ஜனநாயக மறுப்பைக் காரணம் காட்டி 'புலி ஒழிப்புக் கொள்கையை' பின்பற்றுபவர்கள் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக விடுதலையின் எதிரிகளுடனேயே அணி சேருவர்.

எனவே விடுதலைப்பணி பிரதான பணியாக இருப்பதால் விடுதலைப் புலிகள் யுத்தத்தில் ஊன்றி நிற்கும் வரையில் பாட்டாளிவர்க்க இயக்கம் அவர்களுடன் ஒற்றுமையும் போராட்டமும் என்ற உறவையே கொள்ள வேண்டும். தேசிய இன ஒடுக்குமுறையை எதிர்த்த போராட்டத்தில், விடுதலைக்கும் ஜனநாயகத்துக்குமான பணிகளை உள்ளடக்கிய ஒரு குறிப்பான திட்டத்தின் அடிப்படையில் ஐக்கிய முன்னணியைக் கட்டிக்கொள்ள போராடவேண்டும். புலிகளின் ஏகபோகக் கொள்கையை எதிர்த்து ஐக்கிய முன்னணிக் கொள்கைக்கு ஆதரவாக மக்களைத் திரட்டப் பாடுபட வேண்டும்.

## 4. விடுதலை யுத்தமும் ஜனநாயக அரசும் இல்லாமல் அமைதியும் சமாதானமும் இல்லை.

ஆகப் பத்தே ஆண்டுகளில் இலங்கை இந்திய அரசுகள் தமிழ் மக்களுக்கு எதிராக மூன்று யுத்தங்களைக் கட்டவிழ்த்தன. ஒரு யுத்தத்தில் சிந்திய இரத்தம் உலருமுன்னரே அடுத்த யுத்தம் ஏவப்பட்டது. இக்கொடிய அடக்குமுறை யுத்தங்கள் தமிழ் மக்களைச் சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாக்கியுள்ளன. தமிழ்த் தேசத்தின் உற்பத்தி முயற்சிகள் அனைத்தும் முடக்கப்பட்டுவிட்டன. தமிழ் மக்களின் சமூக வாழ்வு சின்னாபின்னப்படுத்தப்பட்டு விட்டது. ஐரோப்பிய அகதி வாழ்க்கை இனச்சிதைவுக்கும் சீரழிவுக்கும் வழியமைத்துள்ளது. விடுதலைப் புலிகளின் அடக்குமுறைகள் தம் பங்குக்கு இதை மேலும் மோசமாக்கியுள்ளன.

இதைத் தமக்குச் சாதகமாக்கி மக்களின் துன்ப துயரங்கள்பால் அக்கறைக் கொண்டவர்களாகக் காட்டிக்கொண்டு அடிமைத்தனமான சமரசத் தீர்வுகளுக்கு தமிழ் மக்களை அடிபணிய வைக்க ஒரு கூட்டம் முயலுகின்றது. மக்கள்பால் உண்மையான அனுதாபங்கொண்ட சிலரின் உடனடித் தீர்வுக்கான ஏக்கங்களும் புறவயமாக இந்தக் கூட்டத்திற்கு பயன்படுவதாகவே அமைந்து விடுகிறது.

சமூக வர்க்கங்களின் போராட்டம் ஓய்வெடுத்துக் கொள்வதில்லை. ஏகாதிபத்திய உலக பொருளியல் அமைப்பு நீடிக்கிற வரையில், அவர்களின் காவல் நாய்களின் கையில் இலங்கையின் அரசியல் அதிகாரம் இருக்கிற வரையில், அண்டையில் உள்ள இந்திய விஸ்தரிப்புவாத அரசு நொருங்கி விழாமல் இருக்கிறவரையில் இலங்கை மக்கள் இனமோதல்களும் பூசல்களுமின்றி வாழ இயலுமென எவராவது நினைத்தால் அது பகற்கனவாகும்.


சொந்த தேசமும் அதற்கென ஓர் சுதந்திர ஜனநாயக அரசுமில்லாமல் இன்றைய அவலநிலையிலிருந்து ஈழத்தமிழினம் மீள முடியாது. விடுதலைப் போராட்டத்தை ஜனநாயகப் பாதையில் முன்னெடுப்பதன் மூலம் விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோதப் போக்கு மக்கள் மீது ஏற்றியுள்ள மேலதிக சுமைகளைத் தவிர்க்க முடியும். அதற்குமேல் விடுதலைப் புரட்சியின் வெற்றியே - வெற்றி மட்டுமே அமைதிக்கும் சமாதானத்திற்குமான ஒரே உத்தரவாதமாகும். தமிழ் மக்களுக்குத் தேவை சுடுகாட்டு அமைதியல்ல. சுதந்திர வாழ்வே!

## 5. 'மனித உரிமை' - முதலாளித்துவ தனிநபர் சுதந்திரத்தின் நவீன வடிவமே!

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் மனித உரிமைவாதிகள் எல்லா மனிதர்களதும் உரிமைக்காகவும் பாடுபடுகிற எல்லா மனிதக் கொலைகளையும் கண்டிக்கிற, இக்கொலைக் கருவிகளான "மனித நாசினிகளை" வெறுக்கிற மகாத்மாக்களைப்போல்த் தோன்றும்.

ஆனால் ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோருமாய்ப் பிளவுண்டிருக்கின்ற மனித சமுதாயத்தில் "எல்லா மனிதர்களுக்குமான உரிமை" என்ற பேச்சு வெறும் பசப்பல் தவிர வேறொன்றுமில்லை. முதலாளித்துவ தனிநபர் சுதந்திரம் என்பது தொழிலாளி வர்க்கத்தை முதலாளி வர்க்கம் சுரண்டுவதை நியாயப்படுத்தும் முதலாளித்துவ ஏமாற்று என மார்க்சிசவாதிகள் எப்போதும் கூறிவந்துள்ளனர். இதுபோலவே இந்த மனித உரிமையும் ஒடுக்கப்படும் வர்க்கங்கள்மீது ஒடுக்கும் வர்க்கங்கள் தொடுக்கும் அடக்குமுறைகளை முடிமறைக்கும் ஏகாதிபத்திய ஏமாற்றேயாகும்.

ஏகாதிபத்தியவாதிகள் தமக்கு அடிபணிய மறுக்கும் நாடுகள்மீது தலையீடு செய்வதை முடிமறைக்கவும், அரை அடிமை நாடுகளின்மீது தமது தலையீட்டை அதிகரிக்கவும்



'மனித உரிமை' வசதியான ஒன்றாக ஆகிவிட்டது.

'தியானமென்' சதுக்கத்தில் சீன ஆளும் வர்க்கத்தின் வெறியாட்டத்தை மனித உரிமை மீறலாகக் கொக்கரித்த ஏகாதிபத்தியவாதிகள் அந்நிய மூலதனத்திற்கு சீனா அகலத் திறக்கப்பட்டதும் அடக்கி வாசிக்கின்றனர். 'பெரு' நாட்டின் அரசு மனித உரிமைகளை மீறுவதாக குரல் எழுப்பியவர்கள் அந்நாட்டை ஓட்டச் சுரண்டுவதற்கு இருந்த எல்லாத் தடைகளும் நீக்கப்பட்டபோது அந்தப் பேச்சையே நிறுத்தி விட்டனர். மனித உரிமைப் பிரம்பைக் காட்டித்தான் இந்தியா இலங்கை உள்ளிட்ட அனைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரையடிமை நாடுகளுக்குள்ளும் அந்நிய மூலதனம் பாய்கிறது.

மறுபுறம் இந்த மனித உரிமை **வன்முறை ஒழிக** என்கிறது. கிளின்டன் மனிதன் வைத்திருக்கும் அணுகுண்டை சதாம்மனிதன் வைத்திருந்தாலென்ன? நரசிம்மராவ், விஜயதுங்க ஆகிய மனிதர்கள் வைத்திருக்கும் படையணிகளை பிரபாகரன் மனிதனும் வைத்திருக்கலாம் தானே! கிளின்டனும் நரசிம்மராவும் விஜய்துங்காவும் அதிமானுடர்களா என்ன! அண்டை அயலையெல்லாம் வாரிச்சுருட்டுவதற்கு, 'பிர்லா' மனிதனுக்கும், 'டாட்டா'மனிதனுக்கும் 'இந்திய அரசு' இருக்கலாம் என்றால் ஈழத்தமிழ் மனிதர்களும் தமிழீழ அரசு அமைக்கலாம் தானே!

வர்க்கங்களையும் அவற்றின் நலன்களையும் ஒதுக்கிவிட்டால் இந்த 'மனிதக் கேள்விகளுக்கு' எந்த மனிதனால் பதில் சொல்ல முடியும்!

இந்திய இலங்கை அரசுகள் ஆக்கிரமிப்பு யுத்தங்களையும் இன ஒடுக்குமுறை யுத்தங்களையும் கைவிடாத வரையில் தமிழ் மக்கள் விடுதலை யுத்தத்தைக் கைவிட முடியாது. **ஆயுதமேந்துவது ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை.** சிறு முதலாளிய சிந்தனாவாதிகளை எல்லா மனிதர்களது உரிமைக்காகவும் போராடும்படி விட்டுவிடுங்கள். புரட்சிகர ஜனநாயகவாதிகள் ஒடுக்கப்படும் வர்க்கங்களது விடுதலைக்காகப் போராடுங்கள். முன்னவர்கள் எதிரியின் வரிசையில் நிற்கக் காண்பீர்கள் அல்லது அவர்களிடம் தங்களது 'மனித உரிமை' களையே பறிகொடுத்திருக்கக் காண்பீர்கள்.

## படிப்பினைகளும் பணிகளும்

தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அணிதிரண்டிருந்தும், அளப்பரிய தியாகங்களுக்குத் தயாராக இருந்தும், ஆயிரமாயிரம் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடியும், ஏராளமான நங்கைகள் தம்மை நாட்டிற்காக அர்ப்பணித்துக்கொள்ள முன்வந்தும், ஒரு பலமான பின்புலம் வாய்த்திருந்தும், பகைவர்களிற்கிடையில் முரண்பாடு பயன்படுத்தக்கூடியதாக இருந்தும், அரசியல் பொருளாதார இராணுவ நெருக்கடியில் இலங்கை அரசு சிக்கித் தவிக்கும் நிலையிலும், சுருங்கக்கூறின், அண்மைக்கால வரலாற்றில் காணமுடியாத அரிய வாய்ப்புக்களைப் பெற்றிருந்தும் போராளிக்குழுக்கள் தமது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு ஜே.ஆர்.-ராஜீவ் ஒப்பந்தத்தை ஏற்று விடுதலைப் போராட்டத்திற்கு துரோகமிழைக்க வேண்டிய நிலை வந்தது ஏன்? இத்துரோகத்தைத் தோற்கடித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் விடுதலைப் போராட்டத்தை பாதுகாத்தபோதும், இலங்கை அரசின் இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்து விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்கிறபோதும் தமிழ் மக்களின் அரசியல் முன்னேற்றத்தின் வேகம் குறைந்திருப்பது ஏன்?

1. இலங்கை ஆளும் வர்க்கத்தினருக்கும், இந்திய ஆளும் வர்க்கத்தினருக்கும் இடையிலுள்ள முரண்பாட்டைப் பயன்படுத்திக்கொள்வதாக எண்ணி இந்திய ஆளும் வர்க்கத்தினரை - மத்திய, மாநில அரசுகளை - சார்ந்திருந்தனர்.

2. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் ரசிய ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலுள்ள முரண்பாட்டைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எண்ணியோ அல்லது ரசிய அரசு ஒரு சமூக ஏகாதிபத்திய அரசு என்பதை ஏற்கத் தவறியதாலோ ரசியாவைத் தமது நண்பன் எனக் கருதினர். திருத்தல்வாதக் கட்சிகளை நம்பினர்.

3. சர்வதேச அளவில் புரட்சிகர சக்திகளுடனும், தேசிய விடுதலை இயக்கங்களுடனும் உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை ஆளும் வர்க்கங்களை நம்பி கைவிட்டனர் அல்லது இராணுவ உதவி என்ற அளவுக்குள் குறுக்கிக் கொண்டனர்.

4. தனி நாட்டிற்காகப் போராடுவதாலேயே சிங்கள மக்கள் அனைவரையும் பகைவர்களாகப் பார்ப்பது கூடாது. மாறாக தனிநாட்டுக் கோரிக்கையின் நியாயத்தை எடுத்துக்கூறி சிங்கள மக்களையும் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக வென்றெடுக்கவில்லை. மேலும் ஒரு விடுதலை இயக்கம் என்ற முறையில் சிங்கள தேசிய இனத்தைச் சேர்ந்த ஒடுக்கப்படும் மக்கள்மீது இலங்கை அரசு தொடுக்கும் ஒடுக்குமுறைகளைக் கண்டிப்பது ஒரு ஜனநாயகக் கடமை என்பதை உணரவில்லை. சிலர்-குறிப்பாக விடுதலைப் புலிகள் - மேலும் தாண்டிச்சென்று குறுந்தேசிய வெறியில் சிங்கள மக்களையே தாக்கும் நிலையை எடுத்தனர்.

5. இலங்கை அரசின் பாசிச ஒடுக்குமுறையால் அவதியுறும் மலையக மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகியோரின் அவ்வரசை எதிர்த்த போராட்டங்களையும் தமிழ்த்தேசிய இன விடுதலைப் போராட்டத்தையும் ஒன்றிணைக்க முயலவில்லை. மேலும் விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்களை விரட்டியடித்தும், படுகொலை செய்தும் விடுதலைப் போராட்டத்திற்கு களங்கத்தையும், தீங்கையும் ஏற்படுத்தினர்.

6. தேசிய இனவிடுதலை என்ற அம்சம் மட்டுமே கருத்திற் கொள்ளப்பட்டது. ஜனநாயகத்திற்கான - ஜனநாயக உரிமைக்கான–போராட்டத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. விடுதலை பெற்ற நாட்டில் கட்ட வேண்டிய மாற்று ஜனநாயக அரசமைப்புப்பற்றிய கண்ணோட்டமிருக்கவில்லை. விடுதலைப் புலிகள் தமது செல்வாக்கிற்குட்பட்ட பகுதிகளில் நிலவிக்கொண்டிருக்கும் அதே அரசுக்கட்டமைப்பைக்கொண்டும், அதே ஆளும் வர்க்கத்தைச் சார்ந்தும், தமது படைபலத்தைக் கொண்டும் அதிகாரத்தைச் செலுத்துகின்றார்கள். இது குறுகிய தேசியவாத இராணுவ அதிகாரவர்க்க சர்வாதிகார அரசை தமிழீழத்தில் நிறுவுவதற்கான தொடக்கமாகும்.

7. விடுதலைப் போருக்கு மக்களை அரசியல் ரீதியாகத் திரட்டுதல், அமைப்பாக்குதல், ஆயுதம் தரிக்கச் செய்தல் ஆகிய பணிகள் புறக்கணிக்கப்பட்டன. சுருங்கக்கூறின் மக்கள் திரள்பாதை கடைப்பிடிக்கப்படவில்லை.

8. விடுதலை அமைப்புக்கள் ஜனநாயக மத்தியத்துக் கோட்பாட்டின் அடிப்படையில் தமது அமைப்புக்களைக் கட்டியமைக்க வேண்டும் என்பதைப் புறக்கணித்தனர். தமது அமைப்புக்கும் மக்களுக்குமிடையிலும், தமது அமைப்புகளுக்கிடையிலும் மேற்கொள்ள வேண்டிய உறவை ஜனநாயக அடிப்படையில் அமைத்துக்கொள்ளவில்லை.

9. போராளி அமைப்புகளுக்கிடையில் தோன்றிய கருத்து வேற்றுமைகளை அரசியல் தத்துவப் போராட்டங்கள் மூலம் தீர்க்கவேண்டியவற்றை இராணுவ நடவடிக்கைகள் மூலம் தீர்வு கண்டனர்.

10. நவீன சமுதாயத்தில் எந்த ஒரு வர்க்கமும் தமது அரசியல் கட்சியின் மூலமாகவே தன்னை பிரதிநிதித்துவப் படுத்திக் கொள்கிறது என்பதை கிரகித்துக்கொள்ளவில்லை. தேசிய விடுதலைப் புரட்சியை நிறைவேற்றுவதற்குக்கூட ஒரு முரணற்ற ஜனநாயகத்திற்காகப் போராடும் அரசியற் கட்சி ஒன்று வேண்டும் என்பதை உணரவில்லை.

11. இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில் இத்தகைய கட்சியைக் கட்டுவதற்கான தத்துவம் மார்க்சிய லெனினிய மாசேதுங் சிந்தனையே என்பதை உணர்ந்து அதனைப் பயிலவும், அதன் வெளிச்சத்தில் தேசிய விடுதலைப் புரட்சிக்கான ஒரு அரசியல் திட்டத்தை வகுத்துக்கொள்ளவும் முயலவில்லை. அதற்கு மாறாக குட்டி முதலாளியச் சிந்தனையில் தமது திட்டங்களையும் செயல்களையும் வகுத்துக் கொண்டார்கள். சிந்தனைத்துறையில் குட்டி முதலாளித்துவத்திற்கு, முதலாளித்துவத்திலிருந்து தனித்த ஒரு தத்துவம் கிடையாது. இதனால் ஏதேனும் ஒரு ஆளும் வர்க்கப் பிரிவைச் சார்ந்து நின்றார்கள். தாம் சார்ந்திருந்த இந்திய ஆளும் வர்க்கம்மீது மக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தினார்கள்.

இத்தவறுகளால் இந்திய அரசின் நிர்ப்பந்தத்திற்குப் பணிந்துபோகத் தள்ளப்பட்டார்கள். விடுதலைப் புலிகள் இது வரையும் அந்நிலைக்கு ஆளாகவில்லையெனினும் ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் அவற்றின் நிறுவனங்கள்,





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய அரசு ஆகியவை தொடர்பில் உறுதியான எதிர்ப்பு நிலையை எடுக்கத் தயங்கி வருகின்றனர். ஒடுக்கப்படும் தமிழ் முதலாளித்துவம் தமிழ் மக்களின் எதிரிகள் தொடர்பாக கடைப்பிடிக்கும் இந்த இரட்டைத்தனமான உறவும் ஜனநாயக விரோதப் போக்கும் சமரசத்துக்குப் பணிந்து போவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிய வண்ணம் உள்ளது.

இருப்பினும் போராளிக்குழுக்களால் தேசிய இன விடுதலைப் போராட்டம் ஒரு புதிய கட்டத்திற்கு, உயர்ந்த கட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. சிந்தனைத் துறையிலும் புரட்சிகர நடைமுறையிலும் புதிய புரிதல்களையும் அனுபவத்தையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

இவற்றைப் பின்னோக்கி இழுக்கும் முயற்சியாகவும், விடுதலைக்கும் ஜனநாயகத்திற்கும் எதிரானதாகவும் இன்று பரவிவருகின்ற **ஐந்து போக்குகள்** குறித்தும் ஜன நாயக மதிப்பீடுகளைக் கொண்டிருப்பதும், கடந்தகாலத் தவறுகளிலிருந்து படிப்பினை பெற்றுத் திருந்திக்கொள்வதும், விடுதலைப் போராட்டத்தை ஒழித்துக்கட்டும் எதிரியின் முயற்சிகளை முறியடித்து விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பதும் இன்றைய பணிகளாகின்றன. இவையே விடுதலைப் போராட்டத்தில் ஜனநாயகவாதிகளின் அணியை உருவாக்க வழிகோலுவதாய் அமையும். அத்தகைய அணி அடுத்துவரும் பேரெழுச்சியில் பெரும் சாதனைகளை ஏற்படுத்தும். □



## மக்களை ஏமாற்றவே நீதிமன்றம்! நீதி வழங்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சிடம்! மலையக மக்கள் முன்னணி செயலாளர் வழக்கு மற்றொரு உதாரணம்!!

## விஜயதுங்கா அரசே மலையக மக்கள் முன்னணித் தலைவர்களை விடுதலை செய்.

கூட்டுப்படைத் தலைமையகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதற்கு திட்டம் தீட்டியதாகக் கூறப்படும் வரதன் மலையகத்தில் தங்கியிருந்தார். இதையடுத்து மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன், பொதுச் செயலாளர் பாவா அப்துல் காதர், உபதலைவர் வடிவேல் தங்கவேல் தர்மலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கொழும்பு குற்றவியல் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு 04-07-91 முதல் ஆறாம் மாடி பொலிஸ் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது வரதனுக்குப் புகலிடம் வழங்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஏழு வருடத்துக்குக் குறையாத கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படும். இதற்குக் குறைவாகத் தண்டனை வழங்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்குக் கிடையாது.

பொதுச்செயலாளர் திரு.பாவா அப்துல் காதரின் வழக்கு கண்டி மேல் நீதிமன்றத்திலிருந்து கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு 10-02-93 அன்று மாற்றப்பட்டது. நீதிபதி திரு.சீ.வீ.விக்னேஸ்வரன் பீ.காதரை மகசீன் சிறைச்சாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார். இதனை ஆட்சேபித்த அரச தரப்பு சட்டத்தரணி திரு.இஹல ஹேவா, பிரதிவாதிக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 15 அ(1) ஆம் பிரிவின் கீழான தடுப்புக்காவல் கட்டளை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் அவர் தொடர்ந்தும் ஆறாம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார். இதையொட்டி நடைபெற்ற நீதிமன்ற வாதங்கள் வருமாறு:

*நீதிபதி:* ஏன்....வேறு வழக்குகள் தொடர்பான விசாரணைகள் ஏதும் இன்னும் முற்றுப் பெறாமல் இருக்கின்றனவா?

*அரச தரப்பு:* இல்லை பிரபு. இது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கட்டளை, அதை மீற இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை.

*நீதிபதி:* விசாரணை முடிந்து வழக்குத் தொடரப்பட்ட ஒருவரை இன்னும் ஏன் பொலிசார் தடுப்புக்காவலில் வைத்திருக்க வேண்டும்?

*அரச தரப்பு:* இது பாதுகாப்பு அமைச்சின் கட்டளை பிரபு.

இச்சமயத்தில் குறுக்கிட்ட பிரதிவாதியின் சட்டத்தரணி திரு.அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி பின்வருமாறு கூறினார்:

"பிரபு இவ்வழக்கில் நிறைய அரசியல் சம்பந்தப்பட்டிருக்கிறது. எனது கட்சிக்காரருக்குப் பெரிதும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. இவர் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து இவரது மனைவி அப்பீல் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அதனை விசாரித்த அப்பீல் நீதிமன்றம் மருத்துவரின் அறிக்கையின் பிரகாரம் திரு.பீ.ஏ.காதர் பொலிசாரினால் தாக்கப்பட்டு இம்சைப்படுத்தப்பட்டதற்கான தெளிவான சான்றுகள் இருப்பதனால் மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக ஏற்றுக் கொண்டு சுப்ரீம் கோட்டுக்கு அனுப்பியது. மனித உரிமை மீறல் மனுவை விசாரித்த சுப்ரீம் கோட், இவரைக் கைது செய்ததும், அவசரகாலச் சட்டத்தின் 17.1 ஆம் பிரிவின் கீழ் தடுத்து வைத்திருப்பதும் சட்டவிரோதமானதெனத் தீர்மானித்து நஸ்டஈடு வழங்குமாறு கட்டளையிட்டது. இதையடுத்து 08-05-92 இல் கண்டி மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி இவரை கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு உத்தரவிட்டார். இதன்படி இவர் மகசீன் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டார். எனினும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் பிறப்பிக்கப்பட்ட மற்றொரு தடுப்புக்காவல் கட்டளையின் பிரகாரம் மீண்டும் ஆறாம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டார். இந்த பாரபட்சத்திற்குப் பின்னால் அரசியல் இருக்கிறது பிரபு".

*நீதிபதி:* விசாரணை முடிவுற்று வழக்குத் தொடரப்பட்ட ஒருவரை நீதியான விசாரணைக்காக சிறைச்சாலைக்கு மாற்றுவதுதான் நியாயம் என்றாலும் எனது கைகள் கட்டப்பட்டுள்ளன. **நீதிமன்ற ஆணையை மீறும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

இந்த வழக்கு இலங்கையில் நீதித்துறையின் அவலநிலையையும், பிரேமதாச - தொண்டமான் கூட்டு, மலையக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயக சக்திகளை ஒழித்துக்கட்ட முனைவதையும் எடுத் துக்காட்டுகிறது.

நீதிபதி விக்னேஸ்வரரின் கூற்றுப்படி, நீதிமன்ற விசார ணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு நீதி வழங் குவதற்கான அதிகாரம் நீதித்துறையிடம் இல்லை. அதனைப் பாதுகாப்பு அமைச்சு அதாவது அவ்வமைச்சின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி எடுத்துக்கொண்டு விட்டார். சட்டங்களை ஆக்குதல், அமுலாக்குதல், நீதி வழங்கல், நிர் வாகம் என அனைத்துத் துறைகளிலும் ஜனாதிபதியின் அதி காரம் கேள்விக்குட்படுத்த இயலாதவாறு வியாபித்துக் கிடக்கிறது. இதனை இலங்கையின் அரசியல் யாப்பு உறுதி செய்கின்றது. இந்த நிலைமையில் நீதிமன்றங்களை மக்களுக்கு நீதி வழங்குவதற்கான நிறுவனங்களாகக் காட்ட முயல்வது, ஜனாதிபதி ஆட்சி என்ற பெயரில் நடக்கும் சர்வாதிகார ஆட்சியை திரையிட்டு மறைப்பதற்காகவே.

மலையக மக்கள் முன்னணித் தலைவர்களின் கைது பற்றி தொண்டமானிடம் ஒரு பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கு "அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது" எனப் பதிலளித்துள்ளார். 'கூட்டுப்படைத் தலைமையகம் குண்டு வைத்துத் தாக்கப்பட்டதற்குத் திட்டம் தீட்டியவர் எனச் சந்தேகிக்கப்படும் வரதனுக்குப் புகலிடம் அளித்தார்கள்' என்பதே அந்தக் குற்றச்சாட்டு. இவ்வாறு குற்றஞ் சாட் டப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற கொடிய அவசரகாலச் சட்டங்கள் இவர்களுக்கு எதிராக ஏவப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவ்வளவும் முடிந்து வழக்குத் தொடரப்பட்ட பின்னரும் இவர்களை நீதி மன்றத்தின் பொறுப்பில் ஒப்படைக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மூலம் ஜனாதிபதி மறுக்கிறார். இவையெதுபற்றியும் தொண்டமான் வாய் திறக்கவில்லை. "குற்றம் சாட்டப் பட்டிருக்கிறது" என்று மட்டும் கூறுகிறார். அந்தக் குற்றம் பற்றி எதுவும் கூறவில்லை.

ஈழத்தமிழர்கள் மீதான இன ஒடுக்குமுறை யுத்தங்களுக்கான இராணுவத் திட்டங்களை வகுத்து அவற்றை நிறைவேற்றுவது கூட்டுப்படைத் தலைமையகத்தின் கடமை. இந்த யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இராணுவத் தலைமையகம் தாக்கப்பட்டது. இதனை ஆதரித்திருந்தாலும்கூட அது எந்த வகையில் குற்றமாக முடியும். அதைக் குற்றமென்று கருதுகின்ற தொண்டமான், 'வடக்குக் கிழக்கு மகாணங்களைப் பிரிப்பதற்கு எதிர்ப்பு', 'தெரிவுக்குழு பகிஸ்கரிப்பு', 'அர சாங்கம் புலிகளுடன் பேச வேண்டும்' என வீர வசனங்கள் பேசி தமிழ் மக்களின் நண்பனைப் போல் காட்டிக்கொள்வதை தமிழ் மக்கள் நம்பலாமா?

வரதனுக்குப் புகலிடம் அளித்தனர் என்ற குற்றச்சாட்டைப் பயன்படுத்தி, மலையக மக்கள் முன்னணியின் முன்னணித் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்படுவதற்கும், நீதி விசாரணையை இழுத்தடித்து வருடக்கணக்காக முகாம்களில் அடைத்து வைத்திருக்கவும் இதன்மூலம் மலையக மக்கள் முன்னணியை ஒழித்துக்கட்டவும் இலங்கை அரசின் அதி காரங்களைப் பயன்படுத்திக் கொள்கிற தொண்டமானை மலையக மக்கள் தமது தனிப்பெருந் தலைவராகக் கொள் ளலாமா?

**நன்றி**
மலையக மக்கள் முன்னணித் தலைவர்களின் வழக்கு பற்றிய விபரங்களை பனிமலருக்கு அனுப்பி வைத்த ஈசன் (வொல்தம்ஸ்ரோவ்) அவர்களுக்கு எமது நன்றி.

# அச்சேறத் தவிக்கும் மலையக வரலாறு

மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் திரு.பி.ஏ.காதர் இரண்டு ஆண்டுகளாக சிறைவாசம் அனு வித்து வருவது அனைவரும் அறிந்ததே. இவர் மோகன்ராஜ் என்ற புனைபெயரில் எழுதி, EROS அமைப்பால் வெளி யிட்ட **'இருபதாம் நூற்றாண்டின் அடிமைத்தனம்'** என்ற நூல் மலையக மக்களின் வரலாறு பற்றிய குறிப்பிடத்தகுந்த நூலாகும். மலையக மக்களின் வரலாறு பற்றிய ஆய்வுப்ப ணியில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் திரு.காதர் அவர்கள் ஆறாம் மாடித் தடுப்பு முகாமில் இருந்து தனது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்திலிருந்து (15/4/93) சில பகுதிகள் வருமாறு:

"மலையக வரலாற்றை முறைப்படி தொகுக்க வேண்டும் என்ற ஆர்வமும் முயற்சியும் என்னைப் பொறுத்தவரையில் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. நீண்டகாலமாக அதற்கான ஆதாரங்களைத் திரட்டி வருகின்றேன். அவற்றில் ஒரு பகுதி யைத்தான் 'இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்' என்ற நூலில் நான் பதிவு செய்தேன். அதன் பின்னர் பல நூற்றுக்கணக்கான உசாத்துணை நூல்களும், தரவுகளும் கிடைக்கப்பெற்றாலும் அவற்றை வாசித்து ஆராய்வதற்கான அவகாசம் கிடைக்கவில்லை.

இந்த இரண்டு வருட சிறைவாசம் அந்த விலை மதிப் பற்ற நேரத்தை எனக்குத் தந்துள்ளது. தினசரி 10 மணித் தியாலங்களுக்குக் குறையாமல் பல மாதங்களாக இதற்காக ஒதுக்கி வருகின்றேன். பெரும்பகுதி வேலை முடிந்து விட் டது. இறுதி நேரத்தில்தான் பிரசுரிப்பதில் உள்ள சிக்கல்கள் பற்றிச் சிந்தித்தேன். எழுதுவதையே நிறுத்தி விடலாம் போலிருந்தது. ஒருபுறத்தில் அதிகரித்துச் செல்லும் பக்கங் கள்(நூலின்), மறுபுறத்தில் உயர்ந்து செல்லும் பிரசுரத்திற்கான செலவு........

கடல் கடந்து சென்று ஊர் உறவைப் பிரிந்து வாழும் உங்கள் பணத்தின் அருமை - உழைப்பின் மதிப்பு - எனக் குத் தெரியும். அவை தொடர்ச்சியாக மலையக பிரசுரங்களை வெளிக்கொணர்வதற்கான மூலதனமாக செயற்படும் என்ற உறுதியை அளிக்கிறேன். வெளியாகும் நூல்களின் ஒவ்வொரு பிரதி தொடர்ச்சியாகக் கிடைக்க ஏற்பாடு செய்வேன்", என எழுதியுள்ளார்.

இத்தகைய ஆராய்ச்சியாகள் இன்றைய காலத்தின் அவ சியத் தேவையாகும். இம் முயற்சிக்கு ஆதரவளிப்பது ஈழத் தமிழ் மக்களின் கடமையாகும். இப்பிரசுரப் பணியைப் பொறுப்பேற்கவோ அல்லது நிதி உதவி அளிக்கவோ 'பனி மலர்' சக்தியற்றதாக இருக்கிறது. இதற்காக வருத்தமடை கின்றோம். எனினும் இதற்கு உதவ ஐரோப்பிய அக தித் தமிழர்களிடையே இருந்து பலர் முன்வரக்கூடும் என நம்புகின்றோம். அவர்கள் பின்வரும் முகவரி மூலமாக காதர் அவர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

MR.B.A.KADAR
UP-COUNTRY PEOPLE'S FRONT
NO.6, MAIN STREET
TALAWAKELLE
SRI LANKA



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்பார்ந்த பனிமலர் ஆசிரியர் குழுவினருக்கு,

தோழமையுடன்
மாறன் (மொன்றியல்)

கடந்த சில பனிமலர் இதழ்கள் எமது தேசத்தின் போராட்டம் தொடர்பான அரசியல் விடயங்களுக்கு, ஆய்வுகளுக்கு, விவாதங்களுக்கு முக்கியமளித்து வெளிவருவது பெரிதும் வரவேற்கப்படத்தக்க ஒன்று. மேலும் பனிமலர் இலங்கையில் நடைபெறுகின்ற போராட்டங்கள் தொடர்பாக தனக்கென அரசியல் முடிவுகளை வரையறுத்துக் கொண்டு அவ்வகையில் தன் கருத்துக்களைத் தெளிவுபடுத்தி வருவது உணரக்கூடியதாக உள்ளது.

(1) வடக்கு, கிழக்கு பாரம்பரிய தமிழ் மக்கள்.
(2) இஸ்லாமியத் தமிழ் மக்கள்.
(3) மலையகத் தமிழ் மக்கள்.
(4) சிங்கள மக்கள், ஆகிய இலங்கையின் அனைத்துப் பிரிவு மக்களினதும் விடுதலைக்கும், சுபீட்சத்துக்குமான போராட்டப்பாதை பற்றி தனது கண்ணோட்டத்தில் கடந்த சில இதழ்களில் தன் கருத்தை பனிமலர் தெளிவாக முன்வைத்து வருகிறது. அவ்வகையிலேயே மே 1993 பனிமலர் இதழ் - 9 இனது ஆசிரியத் தலையங்கமும் அமைந்துள்ளது. பனிமலரினால் முன்வைக்கப்படுகின்ற வரையறைகள், தீர்வுகள் பற்றி எழுகின்ற கேள்விகள் அபிப்பிராயங்களை இங்கு முன்வைக்கின்றேன்.

பனிமலர் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனைகளின் வழிநாடாத்தலில் மக்களின் விடுதலைப்போரை முன்னெடுக்கின்றதாக தன்னை வெளிப்படுத்துகின்றது. அவ்வகையில் பாட்டாளி வர்க்க நலன்களுக்கிசைவானதாகவே அதனது செயற்பாட்டுத் திசைவழி இருக்குமெனக் கருதுகிறேன்.

முதலாவதாக பனிமலரினால் முன்வைக்கப்படுகின்றதான, இலங்கையின் ஜனநாயகப் புரட்சிக்குத் தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைவது ஒன்றே முன் நிபந்தனையானது என்பது பற்றி:-

இலங்கையின் ஏகாதிபத்திய சார்பு, பாசிச அரசுக்கெதிராக இலங்கையின் அனைத்துப்பிரிவு உழைக்கும் மக்களும் சேர்ந்து போராட இயலாதவாறு இனங்களிடையே பூசல்களும், மோதல்களும் நீடிப்பதாகவும், சிங்களப் பெருந்தேசிய இனம் இனவாதத்தில் மூழ்கியிருப்பதாகவும், தமிழீழப் பிரிவினை மூலம் மட்டுமே சிங்கள மக்கள் இனவாதத்திலிருந்து விடுவிக்க முடியுமெனவும் பனிமலர் முன்வைக்கிறது. அதே நேரத்தில் பிரியும் தமிழீழம், தமிழீழ மக்கள் ஜனநாயக குடியரசாக அதாவது பாட்டாளி வர்க்கம் தலைமையேற்று நடாத்தும் முதலாளியப் புரட்சியாக சோசலிசக் கூறுகளை உள்ளடக்கியதாக அமையும் என்றும் முன்வைக்கின்றது. இன்றைய யதார்த்த நிலையில் தமிழ் மக்களும் இனவாதத்திலும் முத லாளித்துவச் சிந்தனைகளின் பெரும் ஆதிக்கத்திலும் பெரிதும் சிக்குண்டு உள்ளார்களென்பதுவும், தொடர்ச்சியாக தேசிய வெறியை வளர்க்கின்ற ஓர் அமைப்பு தமிழ்ப் பகுதிகளில் ஆதிக்கம் கொண்டுள்ளது என்பதும், வெளிப்படையானது. கடந்த தசாப்தத்தில் வர்க்க அரசியலைக் கொண்டிருந்த அமைப்புக்கள் வளர்ச்சியுற முடியாமல் இருந்ததற்கு தனியே அவற்றினது தவறுகள் மட்டுமே காரணமல்ல. மக்களிடையே நிலவிய முதலாளியச் சிந்தனைப் போக்கை பிற்போக்கு அமைப்புக்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். போராட்டப்பாதையினூடு தமிழ் மக்களிடையே சரியான அரசியலை, வர்க்கப் போராட்டத் தலைமையை நிலைநிறுத்த இயலும் என முன்வைக்கின்ற நீங்கள் சிங்கள மக்களிடையே சரியானதொரு புரட்சிகரத் தலைமை தமிழீழம் பிரியும் மட்டும் உருவாகவே மாட்டாது எனக் கூறுவது எவ் ஆய்வுகளின் அடிப்படையில்?

சிங்கள மக்கள் பிற்போக்கு இனவாத அரசுகளின் பிரச்சாரங்களிலிருந்து, அவற்றின் கருத்து ஆதிக்கத்திலிருந்து விடுபடுவது சாத்தியமாகாது என நீங்கள் முடிவெடுக்கும்போதே பாட்டாளி வர்க்கக் கூறுகள் பலவீனமாக உள்ள தமிழ் மக்களிடையே இருந்து வர்க்கத் தலைமைகொண்ட புரட்சியை நடாத்திட இயலுமென எவ்விதம் உறுதிபடக் கூறுகின்றீர்கள்?

சிங்கள மக்களைவிட விசேடமான சிறப்பியல்புகள் எதையும் தமிழ் மக்கள் கொண்டிருப்பதாகக் கருதுகின்றீர்களா?

"சிங்கள மக்களிடையேயிருந்தான முன்னணிச் சக்திகள் கூட சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கத் தயாராக இல்லை. புதிய புரட்சியாளர்கள் தமிழர்களுக்கென்று ஒரு தாயகமேயில்லை என்கிறார்கள்" எனக் குறிப்பிடுகின்றீர்கள். எனினும் உங்களது அகநிலை விருப்பினடிப்படையிலேயே இவ்வாதம் அமைகின்றது. சிங்கள மக்களிடையே இருந்து பல புத்திஜீவிகளும், ஜனநாயக சக்திகளும் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து குரலெழுப்பி வருகின்றார்கள். வாராந்தம் 65,000 பிரதிகள் வரையில் விற்பனையைக் கொண்டுள்ள "யுக்திய" இதழ் ஆசிரியர் சுனந்த தேசப்ரிய தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அளித்த பேட்டியை வசதிக்கேற்ப மறைத்து விட்டீர்கள். (பார்க்க: சரிநிகர் தலைப்புச் செய்தி) நீங்கள் குறிப்பிட்ட பேட்டியில்கூட சுனில் மாதவ தமிழ் மக்களது போராட்டத்தையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கிறார். எனினும் குறிப்பிட்ட பிரதேசங்களினடிப்படையிலன்றி தமிழ் சிங்கள மக்கள் இணைந்து சோசலிசத்திற்கான போராட்டத்தில் ஈடுபட வேண்டுமெனக் கோருகின்றார். இது வறட்டுத்தனமானதுதான் எனினும் நீங்கள் சுட்டுவதைப்போல இனவாதத் தன்மை கொண்டதுதான் என அறுதியிட முடியாது. அவர்களது தவறான தத்துவார்த்த அல்லது வறட்டுத்தனங்களிலிருந்து வரும் அணுகுமுறை. இச்சக்திகளுக்கு தமிழ் மக்களது போராட்ட நிலைமைகள் பற்றி விளக்கமளித்து வென்றெடுக்க வேண்டுமேயொழிய ஒரு முரணான கருத்தைக் காட்டி மறுதலிப்பது உங்களது அகநிலை விருப்பை நிரூபிப்பதற்காகவே.

"போராட்டப்பாதையினூடு தமிழ் மக்களிடையே சரியான அரசியலை, வர்க்கப் போராட்டத் தலைமையை நிலைநிறுத்த இயலும் என முன்வைக்கின்ற நீங்கள் சிங்கள மக்களிடையே சரியானதொரு புரட்சிகரத் தலைமை தமிழீழம் பிரியும் மட்டும் உருவாகவே மாட்டாது எனக் கூறுவது எவ் ஆய்வுகளின் அடிப்படையில்?"

சிங்கள மக்களும், சிங்கள முன்னணிச் சக்திகளும்கூட இனவாதத்தில் மூழ்கியிருக்கிறார்களென ஒரு திசையில் மட்டும் நாம் தவறுகளைத் தள்ளிவிடக் கூடாது. அறுபதாயிரம் இளைஞர்கள் ஆற்றிலும், வீதியிலும் ரயர்களைச் சுமந்தபோது தமிழ் மக்களிடமிருந்து ஏதாவது எதிர்ப்புக்குரல் கேட்டதுண்டா? இன்று எல்லைப் புறங்களில் சிங்கள மக்கள் மட்டுமின்றி முஸ்லிம் மக்களும் நூற்றுக்கணக்கில் கொல்லப்படும்போது தமிழ்ச் சமூகம் மௌனம் சாதிக்கின்றதே. இன்று தென்னிலங்கையில் ஏகாதிபத்திய சார்பு அரசால், ஏகாதிபத்தியங்களின் வேட்டையால் சுதந்திர வர்த்தக வலயங்களிலும், விவசாயத்திலும் ஓட்டச் சுரண்டப்படும் அம் மக்களினது பிரச்சனைகள் பற்றி தமிழ் புரட்சியாளர்கள் யாரும் குரலெழுப்பியதுண்டா? அவரவருக்கு அவரவர் பிரச்சனையென்று வகுத்தாகிவிட்டது. எனவே இனவாதம் என்பதோ அல்லது தமது தமது தேசிய நலன்கள் பற்றி கவலைப்படுவதோ இரு தரப்பிலும் உள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளது. சிங்கள மக்கள் மட்டுமே இனவாதிகள் என்று காட்ட முயற்சிப்பது அகநிலையான விருப்பமாகவே அமைய முடியும். மேலும் தென்னிலங்கையில், வடக்கு கிழக்கில் நீக்கமற நிறைந்திருக்கும் பாசிசக் காட்டாட்சி களையெடுப்புகளுக்கு மத்தியில் சுதந்திரமான, ஜனநாயக குரல்கள் வெளிவராது முடக்கப்பட்டுள்ளது.

சாராம்சத்தில் புரட்சிகர சக்திகள் இலங்கை தழுவிய அளவில் பலவீனமாகவே உள்ளார்கள். தென்னிலங்கையில் உருவாகாது வடக்குக் கிழக்கில் மட்டும் புரட்சிகரக் கட்சி அரசமைக்கும் என பனிமலர் சொல்வதற்கு ஆதாரமேதுமில்லை. சிங்கள தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக இனவாத, முதலாளிய சிந்தனைகளின் ஆளுமைக்குள் உள்ளார்கள் என்பதே உண்மை. இந்நிலையில் தமிழ் பிரதேசத்தின், இலங்கையின் வர்க்கப் பகுப்புகள், நிலவுகின்ற வர்க்க முரண்பாடுகள் போன்றவற்றின் விரிவான ஆய்வின் மீது பாட்டாளி வர்க்க நலன்களை உத்தரவாதம் செய்கின்ற வகையில் மக்களது விடுதலைக்கான திட்டங்களை வரையறுக்க வேண்டும். சொந்த தேசிய இனங்களது சுயநிர்ணய உரிமைக்கும் பாதுகாப்புக்குமான போரைக் கட்டமைக்கும்போதே அனைத்துத் தேசிய இனங்களது நலன்களை உள்ளடக்கியதும் மைய தரகு முதலாளிய, பாசிச அரசை எதிர்த்த ஜனநாயகப் புரட்சிக்கான போர்ப் பரப்பை உருவாக்கவேண்டும். அதாவது "முஸ்லிம்கள் பிற்போக்கு மதவாத சிந்தனையிலுள்ளார்கள். சிங்கள மக்கள் இனவாதத்திலுள்ளார்கள்". தமிழ் மக்கள் "காலை விடிந்ததென்று பாடு, சங்ககாலம் திரும்பியது ஆடு" என சாவகம், புட்பம் தீவுகளைக் கைப்பற்றக் கிளம்பி விட்டார்கள், என்று கூறி மக்களுக்குப் பின்னால் இழுபடுகின்ற போக்கை விட்டு பிற்போக்குவாதிகள், மக்களது எதிரிகளது சித்தாந்தப் பிடியிலிருந்து மக்களை விடுவிக்கின்ற நம்பிக்கையை, மாற்றத்தை நிகழ்த்துகின்றதை உறுதியுடன் செயற்படுத்த சமூக மாற்றம் நேசிப்போர் துணிவும், நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

தனது தேசிய இனத்தை தவிர்ந்த பிற தேசிய இனங்கள்மீது அவநம்பிக்கையும் பாரபட்சத்தையும் காட்டும் பனிமலரினது போக்கு பனிமலர் அடிக்கடி கூறுவதுபோல தனது சொந்த தேசியநலன் பற்றி மட்டுமே கவலைப்படும் முதலாளிய தேசியவாதமே. இங்கு நான் தேசிய இனங்களிடையே அவநம்பிக்கையும் பூசலும் இல்லையென்றோ, இனங்களிடையேயான ஐக்கியப்படுவதற்கான வாய்ப்பு தற்போது பிரகாசமாக உள்ளதெனவோ வாதிடவில்லை. முதலாளித்துவ ஆதிக்க சக்திகள் இவ்விடயத்தில் பெரிதும் வெற்றியடைந்துள்ளார்கள். உழைக்கும் மக்களைக் கூறுபடுத்த அவர்கள் மேற்கொண்ட வழிகளின் விளைவுகளிலிருந்து நாம் முடிவை மேற்கொள்ளாது இனங்களை மோதவிடுகின்ற அவர்களது திட்டத்தைத் தகர்க்கின்ற விதத்தில் ஐக்கியத்திற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். புலிகள் முஸ்லிம் மக்களை விரட்டியடித்து, கொன்றொழித்து இனமோதலைக் கூர்மைப்படுத்தினார்கள். புலிகளது ஆதிக்கம் முடிவுறும்வரை முஸ்லிம், தமிழ் இன ஐக்கியம் சாத்தியப்படாதெனக் கருதி முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுவது சரியான அணுகுமுறையா? பனிமலர் முஸ்லிம் மக்களை தமிழ் மக்களுடன் ஐக்கியப்படுமாறு கோருகிறது. எனினும் இன்றைய இலங்கையின் மைய அரசு உள்ளபோது தமிழீழம் பிரியும்வரை சிங்கள, தமிழ் மக்கள் ஐக்கியம் சாத்தியமில்லையென முன்வைப்பது முரண்பாடானதில்லையா? எனவே தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு, சொந்தப் பாதுகாப்புக்கான போராட்டத்திற்கு அணிதிரளும் போது சிங்கள மக்கள் சுரண்டப்படுவதற்கும், ஒடுக்கப்படுவதற்கும் எதிராகவும் அனைத்து இனங்களினது ஐக்கியப்பட்ட புதிய ஜனநாயகப் புரட்சி இலக்குக்கானதுமான முழக்கங்களையே முன்வைக்க வேண்டும். அதன் மூலமே இனங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு, நம்பிக்கை ஏற்படும். அவ்வகையிலேயே சுயநிர்ணய உரிமை என்பதை பிரிவினைதான் என முழக்கம் முன்வைப்பது தனியே பாரம்பரிய தமிழ் மக்களது நலன்கள் என்கின்ற அடைப்புக்குள் குறுக்கிவிடுவதாகும். முதலாளியவாதிகள் வைக்கின்ற கோஷத்திலிருந்து எமது கோஷத்தை மக்கள் வேறுபடுத்தி அறிய முடியாததாகும்.

நீங்கள் முன்வைப்பதுபோல் பழைய இடதுசாரிகள் தோல்வியுற்றதற்குக் காரணம் பிரிவினையை முன்னெடுக்காததல்ல, தேசிய இனப்பிரச்சினையை கையிலெடுக்காததினாலேயே. எனவே சமூக முன்னேற்றத்தை உந்திச் செல்லும் புரட்சியைக் கட்டமைக்க விரும்புகின்றவர்கள், பாட்டாளி வர்க்க நலன்களை விட்டுக்கொடுக்காத வர்க்கப் புரட்சியாளர்கள், இறுதிவரை விட்டுக்கொடுக்காத, உறுதிமிக்க பாட்டாளிவர்க்கத் தலைமையிலான புரட்சிகரக்கட்சி ஒன்றினது வளர்ச்சி சாத்தியப்படும்போதே மக்களினது உண்மையான விடுதலை நிகழ்த்தப்படும் என்பதில் மாறுபட்ட கருத்து கொண்டிருக்க மாட்டார்கள். எனவே அத்தகைய கட்சியொன்று உருவாகுவதற்கு காலூன்றிப் படர்வதற்கான வர்க்கத் தளம் பற்றிய ஆய்வுகளின்றி கோஷங்களை முன்வைப்பது முன்பு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை (EPRLF) ஈழப் புரட்சியமைப்பு (EROS) போன்ற அமைப்புகளின் குட்டி முதலாளிய வர்க்க அடிப்படை கொண்ட புத்திஜீவிகள், நபர்களது விருப்பான சோசலிசத் தமிழீழம் போன்றே விருப்புகளின் அடிப்படையில் வைக்கப்படுகின்றதாக அமைந்து விடும்.

**"தனது தேசிய இனத்தை தவிர்ந்த பிற தேசிய இனங்கள்மீது அவநம்பிக்கையும் பாரபட்சத்தையும் காட்டும் பனிமலரினது போக்கு, பனிமலர் அடிக்கடி கூறுவதுபோல தனது சொந்த தேசியநலன் பற்றி மட்டுமே கவலைப்படும் முதலாளிய தேசியவாதமே."**

பனிமலரினால் முன்வைக்கப்படுகின்ற தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு என்கின்ற முழக்கம் தொடர்பாக, தமிழீழப் பிரதேசத்தில் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான கட்சி தலைமைச் சக்தியாக உருப்பெறுவதற்குரிய சாதனங்கள், நிலவுகின்ற வர்க்கப் பிரிவுகள், முன்னணிப்படையாக இருக்கின்ற வர்க்கம், உடனடி (போர்த்தந்திர) இறுதி (யுத்ததந்திர) முழக்கங்கள். எவை என்பன பற்றியெல்லாம் பனிமலர் துல்லியமான விளக்கங்களையும் ஆய்வுகளையும் முன்வைக்க வேண்டும். உழைக்கும் வர்க்கம் தவிர்ந்த மற்றைய வர்க்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் சக்திகளிலிருந்து வேறுபட்டு எவ்வகையில் நீங்கள் வைக்கின்ற முழக்கங்கள் உழைக்கும் வர்க்கப் பிரிவுகளை அணிதிரட்டும் என்பதை தெளிவாக்க வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

2. தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு பிரிவதொன்றே முஸ்லிம், மலையக சிறுபான்மை மக்களது விடுதலைக்கு அவசியமானதென்று பனிமலர் முன்வைப்பது பற்றி:-

இலங்கையின் தரகு முதலாளிய, இனவாத அரசு தூக்கியெறியப்படும்போதே அனைத்து இனங்களினது விடுதலை சாத்தியப்படும். தமிழீழ ஜனநாயகக் குடியரசு பிரிவதென்பது இலங் கையின் பிற்போக்கு மையஅரசை தூக்கியெறிவதற்காக இராது. வடக்கு, கிழக்கு பாரம்பரிய தமிழ் மக்களது விடுதலையைச் சாதிப்பதாகவே இருக்கும். இலங்கையின் மையஅரசு இனவாத பாசிச அரசாகவே நீடிக்கும்போது மற்றைய சிறுபான்மை இனங்களது விடுதலை எப்படி சாத்தியமாகும். முஸ்லிம், மலையக மக்கள் தமிழீழக் கோஷத்தினுள் தம்மை இணைத்துக் கொள்வார்களா? என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அவர்களுடையதாக இருக்கும் பட்சத்தில் உங்களது அவர்கள் சம்பந்தப்பட்ட தீர்வு அப்பிரிவு மக்கள் மீதான உங்களது திணிப்பு மனோபாவத்தையே காட்டுகின்றது.

தம்மைத் தனித்துவமாக அடையாளம் காணும் அம்மக்கள் தங்களுக்கான போராட்டப்பாதையில் அணிதிரள்வதன் மூலமே அதைச் சாதிப்பார்களேயொழிய தமிழீழப் பிரிவினை மூலம் அவர்களது விடிவு சாத்தியமாவது எப்படியென்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்பகுதியில் தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் கருப்பையில் இருந்து பிறந்த படைப்பிலக்கியங்களைத் தெரிந்து தொகுக்க முயன்றோம். இத்தொகுப்பு தமிழ்த் தேசியப் போராட்டத்தின் திருப்பங்களையும் அத்திருப்பங்களில் ஏற்பட்ட போக்குகளையும், அவற்றின் மீதான கண்டனங்களையும் சார்புகளையும் அனுசரித்தே இவை படைக்கப்பட்டுள்ளன என்பதை உணர்த்திற்று.

தமிழ் மக்களின் சமூக வாழ்வில் ஒரு மாறுதலை-முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பண்பாட்டுப் பணிகள் அவர்களது அரசியல் விடுதலைக்கான முனைப்புக்களுடன் இரண்டறப் பிணைந்துள்ளது என்பது எங்கும்போல எமது அனுபவத்திலும் உண்மையாகும். அரசியல் விடுதலைக்கான முனைப்பில் ஆதிக்கம் செலுத்தும் போக்கு குறுகிய தேசியவாதமாக இருப்பதனால் மக்களைச் சென்றடையும் இலக்கியங்கள் பெரும்போக்காக மக்களை சங்ககாலத்திற்கு திருப்பிக் கொண்டிருக்கின்றன. பிற சக்திகளிடையே விடுதலை உணர்வு மங்கி வருவதன் காரணமாக நல்ல இலக்கியங்களின் பிறப்பும் அருகிவிட்டது. எஞ்சியுள்ள குப்பை கூளங்களுக்குள் சில குண்டு மணிகளைப் பொறுக்குவது பெரும்பாடாகி விடுகிறது. மற்றும் மக்களின் கொந்தளிப்பான வாழ்க்கையிலிருந்து தம்மைத் துண்டித்துக்கொண்ட கலாமேதைகளின் 'பரிசோதனைகளும்', 'பட்டறைகளும்'. அவரவர் தமக்குள் முதுகு சொறிந்துகொள்ளவே தகுதியானவை. இந்நிலைமை தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கு துணைநிற்கும் ஒரு 'தேசிய ஜனநாயக பண்பாட்டு இயக்கத்தின்' தேவையை உணர்த்தி நிற்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தமிழ்க் கலைஞர்கள் இப்பணியில் தமது கவனத்தைக் குவிப்பார்களேயானால் அதன் பயன் அளவிடற்கரியதாகவிருக்கும்.

எமது தொகுப்பு பல குறைபாடுகளைக் கொண்டிருக்கிறது. பெரும்பாலான படைப்புக்கள் கைவசமில்லாதிருந்தும், அவற்றை படித்துத் தொகுப்பதற்கு போதுமான நேரம் செலவிடாததும் இக்குறைபாட்டுக்கான சில காரணங்களாகும். எனினும் இதனை ஒரளவு ஈடுசெய்யும் வகையில் திரு.பத்மநாப ஐயர் அவர்கள் எமக்கு வழங்கிய ஆதரவுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். இத்தொகுப்பின் குறைகள் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் பனை மரங்கள்
எந்தப் புயலையும் தாங்கி
வெல்லும் ....

www.tamilarangam.net

## இன்று இல்லெங்கிலும் நாளை

எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன.
எங்கள் இமைகள் கவிந்துள்ளன.
எங்கள் உதடுகள் அண்டியுள்ளன.
எங்கள் பற்களும் கண்டிப்போய் உள்ளன.
நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்.

எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக.
எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக.
எங்கள் முதுகில் கசையால் அடிக்குக.
எங்கள் முதுகுத்தோல் பிய்ந்துரிந்து போகட்டும்.

தாழ்ந்த புருவங்கள் ஓர்நாள் நிமிரும்.
கவிந்த இமைகள் ஒருநாள் உயரும்.
இறுகிய உதடுகள் ஒருநாள் துடிதுடிக்கும்.
கண்டிய பற்கள் ஒருநாள் நறநறக்கும்.

அதுவரை நீங்கள் எங்களை ஆள்க.
அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக.

சண்முகம் சிவலிங்கம்

## காத்திருப்பு எதற்கு?

எதற்காக இந்தக் காத்திருப்பு?

வயல் தழுவிய பனியும்
மலை முடிய முகிலும்
கரைவதற்காகவா?
இல்லையேல்
காலைச் செம்பொன் பரிதி
வான் முகட்டை அடைவதற்காகவா?

அதுவரையிலும் என்னால்
காத்திருக்க முடியாது.
என் அன்பே
எத்தனை பொழுதுகள்
இவ்விதம் கழிந்தன?

காதல் பொங்கும் கண்களை
மதியச் சூரியன் பொசுக்கி விடுகிறான்;
கடலலைகள் அழகு பெறுவதும்
தென்னோலையில் காற்று
கீதம் இசைப்பதும்
காலையில், அல்லது
மாலையில் மட்டுமே!

ஆனால்,
எமது பூமி, எமது பொழுதுகள்
எதுவுமே எமக்கு
இல்லையென் றானபின்
இதுபோல் ஒரு பொழுது
கிடைக்காமலும் போகலாம்....
தொடரும் இரவின் இருளில்
எதுவும்
நடக்கலாம்.

ஆதலால் அன்பே,
இந்த அதிகாலையின்
ஆழ்ந்த அமைதியில்
நாம் இணைவோம்.....

ஊர்வசி

## அவர்களுடைய இரவு

நிழலே இன்றி
வெயில் தகிக்க
நீளும் பகல் பொழுதில்
தனியாக ஒரு காகம்
இரங்கி அழும்.

வேலி முருங்கையும்
மௌனமாய் இலையுதிர்க்கும்
அரவமொடுங்கிய
நள்ளிரவுகள்.
ஆள்காட்டிமட்டும்
ஒற்றையாய்க் கூச்சலிடும்
சேலைக் கொடியில்
அவனது வேட்டி ஆடும்....
நெஞ்சில் திகில் உறையும்;
விழித்தபடி தனித்திருத்தலில்
மனம் வெந்து தவிக்கும்.

அன்றைய முன்னிரவில்
நெஞ்சில் ஆழப் பதிந்தவை
மீண்டும் கருக் கொள்ளும்;
அச்சம் சுண்டியிழுக்கும்.

அந்த இரவில்
இருள் வெளியே
உறைந்து கிடந்து
ஐந்து ஜீப்புகள்
ஒன்றாய்ப் புழுதி கிளப்பின
சோளகம் விசிறி அடித்தது
என் ஆழ்மனதில்
அச்சம் திரளாய்
எழுந்து புரள
அவனை இழுத்துச் சென்றனர்.

பல்லிகள் மட்டும்
என்னவோ சொல்லின
கூரைத்தகரமும் அஞ்சி, அஞ்சி
மெதுவாய்ச் சடசடத்தது.
காலைச் சுற்றிய குழந்தை
வீரிட்டழுதது.
விடுப்புப் பார்க்க
அயலவர் கூடினர்.

நீட்டிய துவக்குகள்
முதுகில் உறுத்த அவன்,
நடந்தான் அவர்களுடன்
அந்த இரவில்
ஐம்பது துவக்குகள்
ஏந்திய கரங்கள்
என்னுள் பதிந்த சுவடுகள்
மிகவும் கனத்தவை.

அந்த இரவு
அவர்களுடையது.

ஊர்வசி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## யுத்த காண்டம்

எனக்கென்று ஒன்றுமில்லா
இவ்வெற்றுப் பிரபஞ்சத்தில்
மனதின் மெல்லிய நரம்புகள் மீது
அதிர்ந்தும் உரத்தும்
மரணம்,
தன்னுடைய முகங்களை அறிவிக்கிறது.

வயல் வெளிகளிலும்
சந்தித் திருப்பங்களிலும்
உறைந்து போன குருதி,
உறைந்து போன விழிகள்.....

காலமும் நேரமும் காற்றும்
பெருமழையும்
கடலோரப் பெரு மணல் விரிப்பும்
இல்லாத ஓர் வெளியில்
மனித இருப்பை மறுத்துவிட்டுக்
குருதி படர்ந்து வருகிறது....

மனிதன் மீதான
நம்பிக்கையின் மரணத்தை
இப்போ அறிவித்து விடலாம்
ஒரு சொல்.
ஒரு வசனம்,
ஒரு நீண்ட தொடர்
போதும் எனக்கு.

'நேற்று மனிதன் இறந்து விட்டான்'
அப்போ இருப்பது யார்?
பொலிஸ்காரர்களா?
மிருகங்களா?
புல், புழு, பூச்சி, புளியம் இலைகள்,
நண்டுகள் மட்டுமா?

தோழர் இருவரின் உயிரற்ற உடல்கள்
என் நெஞ்சை உலுப்பியபோது
ஒருகணம்

மனித இருப்பில் நம்பிக்கை இழந்தேன்
உங்கள் மரண நெடிய ஊர்வலத்தின்
ஒவ்வொரு முகத்திலும்
இன்று இந்த,
ஆயிரம் தலைசூழ் நெடு மண்டபத்தின்
ஒவ்வொரு முகம், ஒவ்வொரு தலை
ஒவ்வொரு விழியிலும்
மக்களைப் பிரிந்த மனிதரின் மீதான
அதிருப்தியை எழுத நான் விரும்புகிறேன்..
நடுநிசி.
அமைதியோ அரவமோ
அதைப்பற்றி என்ன?

'எழும்பு; நட;
திரும்பு'

தலைக்குள் நூறு சன்னங்கள்.
நெல்லும் சணலும் இல்லாது
முந்தநாள் உதிர்ந்த சிறுமழைத் தூறலில்
அறுகம் புற்கள் படரத் துவங்கிய
வயல் வெளிப் படுகையில்,
காற்றும் உறுமித் தன் கவலையைச்
சொல்ல,
விலாவையும், மார்பையும்

காதுப்புறத்தையும்
துப்பாக்கி வேட்டுகள் துளைக்க
நிமிர்ந்து
பிணமாய்க் கிடந்தீர்.

மக்களைப் பிரிந்த தனிமனிதர்களின்
அராஜகத்தின் மேல் காறி உமிழ்கிறேன்!
போராளிகளை இருட்டிலே கொன்ற
துரோகத் தனத்தைப் பறைசாற்றுகிறேன்;

காற்றையும் மீறி
வலியது என் சொல்

நெருப்பையும் மிஞ்சிச்
சுடும் என் விழிகள்....
அன்றொரு சுந்தரம்;
ஆட்களும் அடிக்கடி நகர்கிற தெருவில்,
ஓர் திரும்பலில்,
ஒரு கண அசைவும் சாத்தியமற்று
இறந்தவன்,
இன்றோ உமாவும் இறைவனும்,
இதுதான் வழியா?

எனது கண்முன் எனது தோழர்கள்
யுத்த காண்டத்தில்,
விழிகளுக்குப் பதில் நெருப்பு,
விரல்களுக்குப் பதில் துவக்கு,
இதயங்களுக்குப் பதில் இரும்பு.

தயவு செய்; நிறுத்து!
இல்லையேல்
அநுபவி; துயர்படு;
நொந்து சுருங்கு!
வெடித்துச் சிதறு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உமா அல்லது இறைவன்
அவர்கள் மனிதர்கள்
உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை
விடுதலைக்காகத் தம்மை வழங்கிய
வீரப் போராளிகள்.

அதற்காக என்தலை ஒருமுறை குனியும்!

எனது நிலத்தை
எனது மொழியை
எனது மக்களை, எனது காற்றை
அந்நியன் காலின்கீழ் அடகு வைக்கிற
அண்ணன் மார்களை
இன்றைய கால உக்கிரச் சூழலில்
உறுதியோடு எதிர்த்தவன்.

ஆதலால் என்தலை மறுபடி குனியும்!

விடுதலை உணர்வின் எழுச்சிக் குரலை
அபிவிருத்தியால் மூடி வைக்கிற
அரசியல் தலைவரை,
'புத்தருடைய புனிதப் பல்லைக்
காவித் திரிந்து காவித் திரிந்தே
செத்துப்போ'
என
வன்னி மண்ணுக்கு அப்புறமாக
நாம் அடித்துத் துரத்திய
யானையின் முதுகின் பின்
விடுதலைச் சூரிய ஒளியை மறைக்கும்

பாராளுமன்ற அரசியல் தலைமையை,
பாராளுமன்றப் பாதையை,
வெறுத்து,
போராளிகளாகப் புறப்பட்டு வந்தீர்.


ஆதலால் என்தலை இன்னும் குனியும்!
நேற்று,
நானும் நீங்களும் ஒருவழி நின்றோம்!
நமது விடுதலைத் தடத்தில் சென்றோம்!
நமது மக்களை விழித்தெழு என்றோம்!
நமது தலைவரை ஒதுங்குக என்றோம்.
இன்றோ,
உங்களைக் கொன்றனர்.
நான் வழி தொடர்வேன்!
நூறு நூறாயிரம் துணைவர்கள் வருவர்,

மறுபடி, மறுபடி தவறுகள் செய்பவர்
மனிதரேயல்லர்

மரணம் வாழ்வின் ஒரு முடிவல்ல-
உங்கள் சொற்களை விடவும்
செயல்களை விடவும்
உங்கள் மரணம் மிகவும் வலியது.

சேரன்

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ந்த இறைகுமாரன், உமைகுமாரன் அஞ்சலிக் கூட்டத்தில் படிக்கப்பட்டது.



## கடலம்மா.....!

கடலம்மா... நீயே சொல்
'குமுதினி' ஏன் பிந்தி வந்தாள்?

எம்மவரின் அவலங்களைச்
சடலங்களாய்ச் சுமந்துகொண்டு
'குமுதினி' குருதி வடியவந்தாள்.
கடலம்மா கண்டாயோ
கார்த்திகேசு என்னவானான்?
எந்தக் கரையில்
உடலூதிக் கிடந்தானோ?
ஓ.......! சோழகக் காற்றே
நீ,
வழம்மாறி வீசியிருந்தால்......
'குமுதினி' வரமாட்டாள் என்று
நெடுந்தீவுக்குச் சொல்லி யிருப்பாய்.
பாவம்
மரணங்களின் செய்தி கூடக்
கிட்டாத தொலைதீவில்,
ஏக்கங்களையும் துக்கங்களையும்
கடலலைகளிடம் சொல்லிவிட்டுக்
காத்திருக்கும் மக்கள்.....

கடலம்மா நீ மலடி
ஏனந்தத் தீவுகளை
அநாதரவாய்த் தனியே விட்டாய்?

கடலம்மா....
உன் நீள் பரப்பில்
அநாதரவாய் மரணித்த எம்மவரை
புதிய கல்லறைகளை எழுப்பி
'அநாதைக் கல்லறைகள்' என நினைவூட்டு.
ஆனால்,
இனிவருங் கல்லறைகள்
வெறும்
இழப்புக்களின் நினைவல்ல,
எமது
இலட்சியங்களின் நினைவாகட்டும்!

நிலாந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நாங்கள் எதை இழந்தோம்?

நாங்கள் எதை இழந்தோம்?
நம் இனிய நண்பனே...

நடுத்தெருவில் சுட்டெரித்து
நாய்கள் நிணம் புசிக்கச்
செம்மணியில் வீசுதற்கா
திருமலையில் தொட்டிலிட்டு
உன்னை ஈழமகள் பெற்றெடுத்தாள்?



காலனது காலடிகள்
காற்றதிரப் பதிவதற்கா
காலமகள் நீரெடுத்துக்
கோலமிட்டாள் மணற்பரப்பில்?

நெற்கதிரே,
நீள்விசும்பே,
நெஞ்சு இரங்காச் சூரியனே,
புல்லின் இதழ் நுனியில்
பூத்திருக்கும் பனித்துளியே

நீங்கள் அறிவீர்களா
எம் நெஞ்சுறையும் சோகத்தை?

எம் செந்நீரின் சரித்திரங்கள்
திசை எங்கும் சேதி சொல்ல
காற்றில் கலந்து விட்ட
சாம்பல் துகள்களிலே
பயணம் தொடர்ந்த கதை
யார்தான் அறியவில்லை....?

எங்கள் இளந் தோழா!
அப்பாவி மக்களின்மேல்
மட்டுமே மறுபடியும்
துப்பாக்கி சுடத் தெரிந்த
'வீரமிலா நாய்'களது
வெறித்தனத்தில் உயிரிழந்தாய்....

நீள் தொலைவில்,
பைன் மரத்துக் காடுகளில்
பனி உறையும் குளிர் இரவில்
முன்னர் உனை நேசித்த
பெண்ணவளின் கண்கலங்கும்....

வாழ்க்கை அன்று தீர்த்து வைக்க
முடியாத ஒரு வழக்கை
மரணம் இன்று
முடித்து வைத்த
துயர்க்கதைக்குச் சாட்சியில்லை,
துயரங்களும் முடிவதில்லை.....

உனை அவளும் இழந்தாள்.

நாங்கள் எதை இழந்தோம்?

உன் உயிரை, உனைப்போல
இன்னும் பல உயிரை.

ஆனால்,
நம்பிக்கைகளை
நாங்கள் இழக்கிலோம்.
நமது கடமையை
நாங்கள் இழக்கிலோம்.
நமது நாட்டையும்
ஒருபோதும் நாம் இழக்கோம்!

அது போதும் உனக்கு.

காற்றாகி நில்;
கடலாகி அலை வீசு!
போரிடும் நம் தோழர்களின்
வேட்டொலிக்குப் புறங்காட்டித்
தோற்றோடும் ராணுவத்தின்
அவலக் குரல்களின்மேல்
உனதும், உனைப் போன்ற
ஏராளம் மக்களதும்
நினைவுச் சாசனத்தை
இந் நிலத்தில் நாம் பொறிப்போம்!

(நண்பன் கேதீஸ்வரன் நினைவுக்கு)

சேரன்

## புத்தரின் படுகொலை

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்தான்......"
என்றனர் அவர்கள்.

"சரிசரி
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோகவாத சூத்திரத்தினைக்*
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான்* சாம்பரானது.

எம்.ஏ.நுஃமான்

* சிகாலோகவாத சூத்திரம், தம்மபதம் ஆகியன
பௌத்தமத அறநூல்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆண்ட பரம்பரைக்கு

எமதூதரின்
மன்னவரை எங்கேனும் கண்டீரோ?

வான முகட்டில்
வழி தெரியாச் சேனைப் புலத்தில்
காடுகளில்
ஊர்ப் புறத்துத் திண்ணைகளில்
அவருலவும் அந்தப் புரங்களில் -

பாவம்,
ஊர் முழுக்கக் குலுங்கியதில்
ஒப்பாரி வைத்தழுது
பிறகும், வீசுகிற எலும்புக்காய்
விழுந்தெழுந்து ஓடி அலுப்புற்றும்
சாகாமல் உயிர் வாழ்ந்தார்.

கோடிப் புறமிருக்கும்
குதிரை லாயங்களில்
இரவுகளில் வந்து தங்குவாரோ?
பிடியும்,
சேணம் இட்டுவையும்.

தொலைநீளக் கடற்பரப்பில்
நீந்தித் தொலைத்தாரோ?
மறுகரையில்,
இன்னும் ஒருதடவை
அழுது தொலைத்தாரோ?

பொழுதின் இருட்டோடு
இராவணனின் புஷ்பகத்தில்
போய்ச் சேர்ந்து விட்டாரோ?
சிம்மாசனம் அமர்ந்த
மாபெரிய மன்னவனின் படையெடுப்பை
விழிபதிக்க நாதியற்றுப் போனாரோ?
பாவம்தான்.
அக்கரையில் அரண்மனையில்
வீசும் சாமரையில் உடல் குளிர்ந்து
வேர்வையற்று,
உண்டு களித்து வாழ்கிறாரோ?
ஓய்வுக்கு
வில்லெடுத்து வெளிக்கிளம்பிக்
காடுகளைத் திணறடித்து
(அவர் வீரம் தெரியாதா?)
வேகவைத்த பறவைகளை ருசிக்கிறாரோ?

மன்னவரின தேரோடிய
வீதிகளில் கோடையிலோ
பாளம் வெடிக்கிறது.
வெடிப்புகளில் எங்களது
பச்சை இரத்தம் உறைகிறது.

கடல் குடைந்து மீன்தேடும்
மனிதர்களே!
அக்கரையில் அவருடைய தலை தெரிந்தால்
உரத்துச் சொல்லுங்கள்,
"உங்கள் கிரீடம் எங்களிடம் இருக்கிறது.
தின்று கொழுத்தும், சிந்தித்தும்
உம்முடைய மண்டை பெருத்திருக்கும்
வரவேண்டாம்.
அளவுள்ளவன் சூடிக்கொள்ளட்டும்"

இளவாலை விஜயேந்திரன்

## நெஞ்சு பதறுகுது

கல்வீடும் கட்டிக்
கதவுக்கும்
வெளிநாட்டுப் பூட்டு!

என்றாலும் என்ன?

மாரி மிகுந்து
நிலம் கசிந்து ஒட்டுகுது
ஓடு கசிந்து சிந்த
ஒளியும் அணைகிறது!

கோழி குழறுகிறதே!!
மரணாய்தான்! மரணாய்தான்!
குழறக் குழறக் கொண்டுபோகுது!!

கதவைத் திறப்பம் என்றால்
நெஞ்சு பதறுகுது!

எமதூதர் வந்து
துவக்கு முனையினிலே
கதவைத் திறவென்று
கொண்டேகும் நேரம்
மழை ஓய்ந்தது என்ன?

நெஞ்சு பதறுகுது

திக்கெல்லாம்,
சிதறித் தெறிக்கிறது!

பற்றி எரிகிறது பனங்கூடல்
காவோலைப் பொறிகள்,
காற்றில் பறக்கிறது!
காற்று எழுந்து மோதுகுது
பனை சுழன்று ஆடுகுது!

வீட்டில் விழுந்துவிட்டால்....?
நெஞ்சு பதறுகுது!

நா. இராமலிங்கம்

## சொல்லப்படாத ஒரு செய்தி



எந்த நிலத்தில்
இது விளைந்தது

நல்ல நீர்தந்தோம்
மண்ணில் வளமேற
உரமிட்டோம்
வெயில் தழுவும்
நூறுநூறாய்த் தாமரை பூக்கும்
என்று காவல் வைத்தோம்.
பூச்சி விழுங்கும் கிண்ணிப் பூவாய்
ஆட்கொல்லிப் பிசாசாய்
வேலி தாண்டிக் கிளை விட்டு
மண் முழுதும் இரத்தம் சிந்தியது.

வீரம் நிறைந்த கைகளாய்
ஆயிரம்
வெளியில் தெரியுதென்று
புழுகிக் கிடந்தோம்
வீசிய காற்றில்
சாம்பல் வெளிச்சிதறக்
குருதி உறைந்தது.
அடியில் கிடந்தது
பச்சை இரத்தம் குடிக்கும் நெருப்போ?

எந்தக் கங்கையில்
இந்தக் கைகளைக் கழுவுவது?
ஊரிலோ ஆறும் இல்லை.
குளமும் வரண்டபடி.
எந்தக் கைகளினைக்
குலுக்க விளைந்தோமோ
அந்தக் கைகளிலே
தீப்பந்தம் கொடுத்தும்
எமது உரைக்கு வீசும் என.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லோரும் தலைகளைக் குனிவோம்.
தொலைவில்
நூறு வீடுகளின் அழுகைகளில்
வானை எட்டுகிற ஓலத்தில்
விம்மி வெடிக்கிற கண்ணீர்த்துளிகளில்
எமது துயரத்தைப்
பாதி கலக்க வைப்போம்.

புல்படர்ந்த நிலத்தில்
வெள்ளையாய் நிமிர்ந்த விகாரைகளில்
ஆயிரம் வருடம் கழிந்தும்
மண்ணையே நம்பியோரின்
கண்களில் இப்போது ரத்தம்.
எல்லாளன் தோர்தரித்த
சுவடுகளைக் காலம் மூடியது.
மூடிய மண்ணின் வெளி மேற்பரப்பில்
இரத்தம் குடிக்கும் பேய்களின்
சுவடுகள்-

எப்படி, உங்கள் முகத்தை
நோக்க நிமிருவோம்?
அழாதீர்,
எம்மேலே அனலை வீசாதீர்.
காத்திருக்கிறோம்
மனித நேயம் அற்றுப்போன
ஒவ்வொரு நாயையும்
வாலிலே கட்டித் தூக்கிலிடுவோம்
வெறியில் திரியும்

ஒவ்வொரு முகத்திலும்
காறி உமிழ்வோம்.
மண்ணை, மனிதனைவிட
மேலாகிவிட்ட துவக்குகளை
வீசியெறிவோம் கடலுக்குள்.

நாங்கள்-
பகலுக்காய்க் காத்திருக்கிறோம்.

**இளவாலை விஜயேந்திரன்**
**1985**

## ஒரு கவிதை

தோழரே
துப்பாக்கியை உயர்த்தும்
வலது தோளில்
உதைப்பை வாங்க ஏதுவாக
நடுவில் உள்ள
கோட்டிடை வெளியில்
நேரே, நேராக மட்டும்
பாரும்.
எதிரிதானே அது?
வலது ஆள்காட்டி விரலைப் பின்னோக்கி இழும்
சரியாகக் குறிபார்த்தால்
ஒரே குண்டே போதும் தோழரே.

சமயத்தில்
எதிரி கிடைக்காவிட்டால்
ஊரில் மனிதர்களும்,
மின்சாரக்கம்பங்களும் உண்டு

அதுவும் கிடையாத போது
நெறி பிறழாத ஒரு தோழனை.....

துப்பாக்கி சூடாறக்கூடாது பாரும்
நியாயப்படுத்தத் தலைமைப் பீடமும்
பிரசுரம் அடிக்க வெளியீட்டுப் பிரிவும்
உள்ளன தோழரே

விடுதலைப் பாதையில்
வீறுநடை போடும்.

**இளவாலை விஜயேந்திரன்**

## தலைப்பிடப்படாத ஒரு கவிதை

என்னிடம்
ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல்
நம்பிக்கையும் முடிவும் சொல்லக்கூடிய
வார்த்தைகள் இல்லை.

இரவு,
இரவினால் அதிகாரமிடப்பட்ட பகல்
நாளை காலையில்
சூரியன் உதிக்குமா என்பதில் கூட
சந்தேகம் கொண்டுள்ள என்னிடம்
கனவுகள்
தம் அர்த்தத்தை இழந்தவைதான்.

இந்தச் சமூகத்தின் தொப்புள் கொடிக்கு
துப்பாக்கி நீட்டப்படும் போது
ஒரு மெல்லிய பூ நுனியில்
உட்காரக் கூடிய
வண்ணத்துப் பூச்சியின் கனவு
எனக்குச் சம்பந்தமற்ற
ஒரு சம்பவிப்பு மட்டுமே.

நான் மனிதனாய் வாழும் முயற்சியில்
பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்.
எனக்குப் பகலாக உருவமைக்கப்பட்ட அழகிய இரவு
கனவாக உள்ளது.

**சி.சிவரமணி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விடுதலைக் காளி



ஈழ மக்களே!
இந்தப் போராளியை
நமது,
நாட்டில் உலாவும்
காட்டு மிருகங்கள்
கொன்று விட்டன!

துப்பாக்கி மிருகங்களின்
வெறித்தன விருந்துக்கு
பலியானோர் பட்டியலில்
மீண்டும் ஒருவன்.

இவனின்,
தொலைதூரக் கனவுகள்
தெருக் குழிகளில்
இரத்த வெள்ளமாய்
உறைந்து போயின!

வீறு நடை போட்ட
படை வீரன் ஒருவன்
பலி
எடுக்கப்பட்டுவிட்டான்!

தவிர்க்க முடியாது!
"விடுதலைக் காளி"யின்
விருந்துக்கு;
இப்படிப் பல வீரர்கள்
தேவையாய்ப் போயினர்.

காளியம்மா!

சுந்தரத்தில்
சுவைகண்டு
சுடச்சுடக் கேட்டதற்கு
தேவனை,
ஜெகனை
சுட்டுப் படைத்தார்கள்!

போதா தென்று
பொங்கி யெழுந்தாய்
மனோ மாஸ்டரை
மடியிலே போட்டார்கள்!

தலைவிரித்தாடி
மேலும் கேட்டாய்
அந்தரங்கப் பலி கொடுப்பு
அடிக்கடி செய்தார்கள்!

அதுவும் போதாதென்றாய்
இதோ,

இன்றொரு ரேகன்
உனக்குப் படையல்!
தீர்ந்ததா உனது
இரத்தப் பசி,
தணிந்ததா உனது
குருதி வெறி;

எந்திரத் துப்பாக்கிகளுக்கு
எண்ணெய் தடவச் சொல்;
எவனாவது ஒரு போராளியை
கொன்று படைக்கச் சொல்;
வேட்டையாடச் சொல்,
வெறியைத் தீர்க்கச் சொல்,
உருக்கொண்டெழு,
உக்கிரமாய்க் கத்து
உன் ஏவல் நாய்களுக்கு
ஆணையிடு;
ஈழத்தில்
எதிரிக் கெதிரான
படையெடுப்பு நடக்கிறதோ
இல்லையோ,
பலியெடுப்பு நடக்கட்டும்.......

EPRLF இன் துண்டுப்பிரசுரத்திலிருந்து
1985-11-28

## எனது காலை பற்றிய கவிதை

நிம்மதியைத் தொலைத்த இரவுகளினதும்
கலங்கித் தெளிந்த பகல்களினதும்
கலவையாய்
ஒரு நேரத்தைத்
தேர்ந்தெடுத்தேன்.
அது ஒரு அருமையான விடியல்
உயிரோட்டமான காலை.
அது
அஸ்தமனமாயிற்று
விபரமறியா மனிதருக்கு
காலை எனக்கு இதமானது
கூவுவன சேவல்கள்
பாடுவன பறவைகள்
என்னைச் சுய பிரக்ஞையடையச் செய்வன
அவை.
இந்தவகையில்
முக்கியமாயிற்று காலை.
இரவுகளில் என்னை
இறுக்கிய
முடிச்சுக்களை அறுத்தெறிவேன்.
கலவரந்தாங்கிய
கண்களைக் களைவேன்.
புதிய
சிந்தனையைத் தூண்டுகிற,
பாடல்களை இசைப்பேன்
விகாரமிகு பார்வைகளை
விலக்கி வைப்பேன்
சிநேகப் புன்னகைகளைச்
சேகரிப்பேன்.
தூரமாய்க் குரல்கள் என்னை
அதட்டும்
"பெண்ணே...பெண்ணே" என
கொடிய அக்குரல்களின்
இரக்கமற்ற கட்டளைகளை
அலட்சியப்படுத்துவேன்.
இது
அஸ்தமனம் என்பார்
அறியாத மூடர் ஆவர்
நானோ
என்னை
விழித்தெழ வைக்கிற என் காலையைப் பற்றி
உரத்துப்பாடி இசைப்பேன்.

கொற்றவை
13.05.92



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனங்கொட்டைகள்......

வெளிக்கிட்டாயிற்று
நில் என்பார் எவருமிலர்.
செல் என்கிறது காற்றும்
முகத்திலடித்தபடி.....

பனங்கருக்குச் சிராய்ப்பினால்
காய்ச்சுப்போன
நெஞ்சாங்குழி.
நெஞ்சுக்குள் சரசரக்கும்
பனைமர வெளி.

பனந்தோப்பில் பழம் பொறுக்கி
சூப்பி எறிந்த பனங்கொட்டை
நிலத்தடிநீர் உறுஞ்சி
நிமிரும் பனை.
வேரோடிப் பிளக்கும்
சுண்ணக் கற்பாறை.

வாழ்வுக்குள் ஒன்றித்து
ஓர்மத்தை விளைவித்து
கிளைவிட்ட நீட்சியில்
பனை ஈனும் வடலிகள்.

வடலி வளர்த்தா இனி
கள் குடிக்கப் போகின்றீர்?
எத்துணை இளக்காரம்?
மண் உரம் அறியா மூடர்.
ஏதறிவார் இவர்
சுதிகாலை நகர்த்தி நட்டு
வளவு வளைத்த
பாரம்பரியம் தவிர.....

பனையைத்தான் அறியார்
பனை போலாயினும்
அதில் பாதியாய்
பாதியில் பாதியாய் தன்னும்
எக்குணங்குறியும்
இல்லாமலே இதுகள்.

சிங்காசனம் இல்லையேல்
அசோக சக்கர நாற்காலியென
விலாங்காய், ஓடுகாலியாய்
தலைகால் புரியாத
அதிகாரப் பசியில்
அம்மணமாய் ஆபாசமாய்
எப்படி விளைந்தன
இவ்வகைப் பிறவிகள்?

என்னையே என்னிலிருந்து
துறக்கச் செய்கின்றது பார்
எடுப்பார் கைப்பிள்ளையாகும்
இவர்களின் சகவாசம்.

புதுப்பாளைக் கள்ளும்
குரும்பை இளநுங்கும்
காவோலை உதிரச்
சிரிக்கும் குருத்தோலையும்
பனம்பழம் விழுங்காலை
பழம் தின்ற காற்றும்
நுகராத காலும்......

எல்லாமும் இருக்கட்டும்
நீ போய்விடு
தனியனாய் நிற்காதே
உறவுந்தான் துரத்துகின்றது
நகராதாம் கால்
மரத்துப் போய்
மரத்துப் போய்
எதற்காம் இப்பின்வாங்கல்
நடந்த களை ஆறாமல்....

கைகாலில் முள் கீறி
கசிகின்றது இரத்தம்
செல்லமாய்த்தான்.
பின்னே யாருக்காம் பழம் சிந்தும்
எனக்காய்த்தானே.

காய்க்கொத்தாய் காயுண்ணி
குலைதள்ளும் ஈச்சமரம்
பூச்சுருங்கா தொட்டாச்சிணுங்கி
எல்லாவற்றிலும் முள்ளுத்தான்.
முள்ளுப் பற்றைக் காடுதான்
பனந்தோப்பு.

பட்ட பனை சாயக்கூட
நாளெடுக்கும்,
வட்டுக்குள் பச்சைக்கிளி
கூடுகட்டும்.
செண்பகக் கூவலுக்கு
மைனாக்கள் பதிலிறுக்கும்.
அணில் பிள்ளை துள்ளலுக்கு
கோட்டான்கள் தாளமிடும்.

தாளகதி மங்கி மங்கி
பனந்தோப்பும் எனை நீங்கி
ஏழ்பனை நிலத்திருந்த
பனை.
யார் வளர்த்தார்?
வழிவழியாய்?
பனங்கொட்டை
எல்லாமா
ஊமல்களாயிடும்?

சக்கரங்கள் எனைக்காவி
வெளிநோக்கி
வெளிநோக்கித்
தள்ளுகின்றன
ஆணிவேர்
பின்னிழுத்துப்
பின்னிழுத்து
வீழ்த்துகின்றது
புழுதி மண்ணில்....

கி.பி. அரவிந்தன்
செப்டம்பர் 1990






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கைலாசநாதன்





கிருஷ்ணராஜா





www.tamilarangam.net

கிருஷ்ணராஜா



கடந்த பத்தாண்டுகால
விடுதலைப்
போராட்டம்
நவீன ஓவியத்
துறையையும்
மிகவும் பாதித்தது.
பல புதிய ஓவியர்கள்
இக்காலகட்டத்தில்
வெளித் தெரிந்தார்கள்.
பரவலான ஓவியக்
கண்காட்சிகள்
நடாத்தப்பட்டன.
இவற்றிற்குச் சாட்சிய
மான சிலவற்றைத்
தொகுத்துள்ளோம்.
இனிவரும் இதழ்களிலும்
இப்பகுதி தொடரும்.....

மாற்கு





கைலாசநாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மீன்பாடும் தேன்நாடு

வங்கக்கடலுக்கோ வெண்பட்டு மணல்விரிப்பு
மலையகத்து அருவிகட்கோ வயல்விரிப்பு
பாடும்மீன் தாலாட்டும் பௌர்ணமி நிலாவுக்கு
ஓயிலாக முகம் பார்க்க ஒய்யாரமாய்த் தூங்க
மட்டு நகரில் வாவியிலே நீர்விரிப்பு.
எங்கிருந்தோ வந்தவர்கள் எல்லாம் அனுபவிக்க
சொந்தங்கள் இங்கே துயரம் சுமக்கிறது.

காலமெல்லாம் இங்கே
கணபதியும் எங்கள் காக்கா முகமதுவும்
தெம்மாங்கு பாட திசைகாணும் தாய் எருமை
திசைதோறும் புற்கள் முலைதொட்ட பூமியிலே
கன்றை நினைந்து கழிந்தபால் கோலமிடும்.

காடெல்லாம் முல்லை கமழும் வசந்தத்தில்
வயற்புறங்கள் தோறும் வட்டக்களரி எழும்.
வட்டக்களரியிலே வடமோடிக் கூத்தாடும்
இளவட்டக் கண்கள்.

தென்றல் வந்து மச்சியின் தாவணியை இழுப்பதிலே
தடுமாறும் கால்கள் தாளம் பிசகாது.

குதிரையிலே தாவி கொதிப்போடு இளவரன்
போருக்குப் போவான்
கொடும்பகையில் வென்றிடுவான்.

எட்டாக வட்டமிட்டு இறுமாப்பாய்த் தலைநிமிர்ந்து
செட்டாகப் பாடி செழிப்பார்கள் போர்வீரர்
அண்ணாவி தட்டும் மத்தளத்தின்
தாளத்தின் சொற்படிக்கு
எல்லாமே வட்டக்களரியலே மட்டும்தான்
படிக்கட்டில்
பொல்லாவறுமை பசியோடு இவனுடைய
கைகோர்த்துச் செல்லக் காத்திருக்கும் வேதனைகள்;

போடியாரின் வேதனைகள் போரடித்த நெல் குவித்து
நாடோடிப்பாடல் மகிழ்ந்து பசி மறக்கும்.
ஊரின்புறத்தே ஒருநாள் நடக்கின்றேன்-

எல்லைப்புற வயலும் எழுவான் கடற்கரையும்
செல்வங்கள் எல்லாம் சொத்தாய்ப் பிறர்கொள்ள
பொட்டல்வெளியில்
கணபதியும் எங்கள் முகம்மதுவும்
சிண்டைப்பிடித்துக் கிடக்கின்றார், என்சொல்வேன்!

வ.ஐ.ச.ஜெயபாலன்
1982

ஈழத்தின் கிழக்கு மகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் தூண்டிவிடப்பட்ட மோதல்கள் தந்த துயருடன் எழுதியது.

## காத்தான்குடி' 90

இனி நடக்கப் போவது என்ன?

ஒன்றுமில்லை.

பிரார்த்தனைக் கூடத்தில்
சிதறுண்டிருக்கும் உடல்களின் மேல்,
அவற்றிடை
ஒரு ராட்சதக் கொலைக்கரம்
உருக்கிய குருதிச் சேற்றில்,
அந்தகாரத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும்
அலறலில்,


ஸ்தம்பிக்கிறது காலம்.

தமிழன் என்னும் என்
அடையாளக் கூறின் மேல்
வெட்கம்

இருள் விரவிப் படிகிறது.....

"என்னைக் கொல்லாதே"
என்று ஈரக் கண்களுடன் இரந்த
ஈழத்தின் மனச்சாட்சியையும்
கொன்றார்கள்.

சிவா.கௌதமன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோசலை

ரஞ்சகுமார்

“குலம்!....மாடுகளுக்குக் கொஞ்சம் வைக்கல் இழுத்துப் போடு மேனே”

குலம் மல்லாந்து படுத்துக் கிடந்தான். ஓலைப்பாயில் தலையணைகூட இன்றித் தான் இவன் படுப்பான். முதுகு வலிக்குமா இல்லையா? இவன் ஏன் ஒரு காட்டுப்பிறவி மாதிரி இருக்கிறான்!

அம்மா திண்ணைக் குந்தில் கால் நீட்டி உட்கார்ந்தவாறே திரும்ப திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

“கொஞ்சம் வைக்கல் இழுத்துப் போடன் அப்பன்..... மாடுகள் கத்துதெல்லே!......”

குலம் நெற்றியில் முழங்கைகளை அழுந்தப் போட்டவாறு, கால்களை ஆட்டியவாறு படுத்துக்கிடந்தான். அம்மா இவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். மார்பில் உரோமங்கள் படர்கிற வயது முரட்டுத்தனமான உடல்வாகு. குரல்கூட கட்டைக்குரல், இவனுடைய அப்பா மாதிரி. நெற்றியில் தூக்கிப்போட்டிருந்த கைகளைப் பார்த்தாள். நரம்புகள் புடைத்துக்கொண்டு விம்மித் தெரிந்தன. நகக் கண்களில் கறுப்பாக ஓயில் அழுக்குப்படிந்திருந்தது.

“குலம்!.....கொஞ்சம் வைக்கல்.....” அவசரமாகப் பாய்ந்து இடைவெட்டியவாறு மகன் சிடுசிடுத்தான்.

“நீயே இழுத்துப் போடன்.....எனக்கு ஒரே அலுப்பு.”

அம்மா சற்றே வேதனையின் சாயல் படியச் சிரித்தாள்.

சீலன் இருந்தால் இப்படியா எல்லாம் இருக்கும்? அம்மா சொல்லாமலே வேலை எல்லாம் செய்து கொடுப்பான். மாடுகளுக்கு வேளாவேளைக்கு வைக்கோல் இழுத்துப் போடுவான். தண்ணீர் கொண்டுபோய் வைப்பான். கோழிகளைக் கவனித்துக் கூடுகளில் அடைப்பான். சமயத்துக்கு தேங்காய்கூட அம்மாவுக்குத் துருவிக் கொடுப்பான்.

எவ்வளவு அருமையான மகன்!

அவன் ஏன் அப்படிப் போனான்? ஊரை நீங்கித் தூரே வயல்வெளிகள் பரந்திருக்கின்றன. இடையிடையே பனங்கூடல்களும் திடல்களும் தனித்துக் கிடக்கின்றன. மாலைநேரங்களில் அம்மா அவ்விடங்களில் புல் செதுக்கிக் கொண்டுவரப்போவாள். சைக்கிள் ஓட்ட முடியாது அவ்விடங்களில். சீலன் சைக்கிளில் சாய்ந்தபடி ரோட்டில் காத்து நிற்பான். அம்மா புல்லுக்கட்டுடன் திரும்பி வரும் நேரங்களை அவன் நன்கு அறிவான். அம்மாவின் உருவம் மிகத்தூரே மங்கலாகத் தெரியும்போதே ரோட்டை விட்டிறங்கி அம்மாவை நோக்கி விரைந்து போவான். பாரத்தை மாற்றிக்கொண்டு அம்மாவுக்கு முன்னே வீட்டுக்கு சைக்கிளில் பறப்பான்.

அம்மா வழியிலேயே துரவில் உடம்பைக் கழுவிக்கொள்ள முருகன் கோவில் மணி சிணுங்கி அழைக்கும். அம்மா உருகியவாறு கோயிலுக்குப் போவாள். பூசை முடிய நன்றாக இருள் சூழ்ந்து விடும். உள்ளங்கையில் பொத்தியபடி விபூதியும், சந்தனமுமாகத் திரும்பி வரும்போது, சீலன் வீட்டில் ‘பளிச்’சென விளக்கேற்றியிருப்பான். மேசைக்கு முன்னால் விளக்கொளியில் முகம் விகசித்துத் தெரியும்படி அவன் உட்கார்ந்திருப்பான். ஏதாவது படித்துக் கொண்டோ எழுதிக்கொண்டோ இருப்பான். முன்னால் மென்குரலில் இசைத்தபடி ரேடியோ அவனை ரசிக்கும். பக்கத்திலே சைக்கிள், முன்சில்லை ஓயிலாக ஒடித்துச் சாய்த்தபடி அவனைப் பார்த்து பளீரென ஒளிவீசிச் சிரிக்கும்.

மகள் அழகிய மொட்டு. மிகவும் சின்னவள்தான். ஆயினும் குசினியில் தேநீர் தயாரிக்க ஆயத்தமாகிக் கொண்டிருப்பாள். குலத்தை மட்டும் காணக் கிடைக்காது. அவன் வீட்டில் இருக்கும் நேரங்களை அம்மாவுக்கு அறுதியிட்டுக் கூறமுடியாது. அவன் தொழில் அப்படி!

மாடுகள் கழுத்து மணிகள் கிணுகிணுக்க புல்லை அரைக்கின்ற சத்தம் கேட்கும். கூடவே மாடுகள் பலத்து மூசி மூச்சு விடுவதும், வாலைத் தூக்கி ஈக்களை விளாசி விரட்டுவதும் கேட்கும். சாணியின் மணத்துடன் பசும் புல்லின் வாசனை நாசியில் உறைக்கும். கோழிகள் எல்லாம் ஏற்கனவே கூடுகளில் அடைக்கப் பட்டிருக்கும். குறுகுறுவென கொக்கரிக்கும்,“படபட” வெனச் சிறகுகளை உல்லாசமாக அடிப்பது கேட்கும்.

சுடச்சுட ஒரு கோப்பை தேநீர்.. ..கடுமையான உழைப்புக்குப்பின், தொழுகையின்பின், மோகனமான இரவின் பிறப்பு நேரத்தில்..... அருமையான தனது பிள்ளைகளுடன் அம்மா அருந்துவாள். அதுவல்லவோ வாழ்க்கை!

எல்லாமே சீலனுடன் கூடவே சேர்ந்து அம்மாவிடம் பிரிவு சொல்லாமலே போயினவோ?

அம்மா அலுத்தபடியே வைக்கோல் போரைப் போவாள்.

ஒரே வயிற்றில் உதித்த பிள்ளைகள் ஏனோ இவ்வாறு வேறுவேறு குணம் கொண்டவர்களாய் ஆகிப்போனார்கள்? இரண்டு பேரையும் அம்மா ஒரே மாதிரித்தான் உணவூட்டினாள். ஒரே பள்ளிக்கூடத்திலேதான் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டாள். புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு, எண்ணெய் பூசிப் படியச் சீவிய தலைகளுடன் அவர்கள் பள்ளிக்கூடம் போவதை வாசலில் நின்று பார்த்து ரசித்தாள்.

குலம் மட்டும் படிப்பை ஒரேயடியாகக் குழப்பினான். அண்ணனிடம் நெடுகலும் சண்டை போட்டான். அம்மாவிடம் கோபித்துக்கொண்டு சில வேளை சாப்பிடாமலே போனான். ஆறாம் வகுப்புக்குமேல் அவனால் ஏறவே முடியவில்லை. அம்மா அறிவாள், அவளது இளைய மகன் மிகவும் புத்திசாலி. ஆனாலும் ஏன் அவனால் படிக்க முடியவில்லை என அம்மாவுக்குப் புரியவில்லை.

சீலன் அமைதியாகப் படித்தான். அவன் மிகவும் அமைதியான மகன். இரைந்து கதைக்கத் தெரியாதவனாக இருந்தான். நடப்பது கூட மிகவும் மென்மை. ஒரு கம்பீரம் இருக்கத்தான் செய்தது. புல்லுக்குக் கூட நோகாத நடை. கண்கள் பெரிதாக இருந்தன. உள்ளங்கைகள் மென்மையாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தன. நகங்கள் ரோஸ் நிறமாகவும், நீளமாகவும். .... விரல்கள்கூட மெலிந்து நீளமாக நளினமாக இருந்தன. பெண்களைப் போல. சீலன் ஒரு மோசமான மாலை நேரம் பிறந்தான். பறவைகளின் கீச்சொலிகள் அடங்கிய பிறகு, மாடுகள் எல்லாம் மேச்சல் நிலங்களிலிருந்து திரும்பி வந்துவிட்ட பிறகு, மென்மஞ்சட் கதிர்களை மண்ணெண்ணெய் விளக்குகள் உமிழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில்...........அம்மாவின் இடது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடையை சற்றே உரசியபடி ஒரு வளர்பிறை நாளில் சீலன் பிறந்தான். புனர்பூச நட்சத்திரம். 'இவன் பெரிய காரியங்களைச் சாதிக்கப் பிறந்தவன்' என அவனது சாதகம் சொல்லிற்று.

குலம் அத்த நட்சத்திரம். அதுதான் அவனிடம் முரட்டுச் சுபாவங்கள் சேர்ந்து விட்டனவோ? அத்தம், அதமம் என்றார்கள் சாத்திரிமார்.

மத்தியான நேரம் கொடுமையானது. மௌனமானது. காற்றை வெய்யில் விரட்டிவிடும். ஒழுங்கைகளில் படிந்திருக்கிற புழுதியில் கச்சான் வறுக்கலாம் எனத் தோன்றும். பூவரச மரங்கள் கொடு வெய்யிலில் வாடித் துவழும். சனங்கள் வெளியில் தலையைக் காட்டவே மாட்டார்கள். சொறிபிடித்த நாய்கள் மட்டும் நாவைத் தொங்கப் போட்டபடி இளைத்தவாறு நிழல்தேடி ஓடித்திரியும். 'கார்ர்ர்' எனக் கடூரமாகக் கத்துகின்ற காக்கைகள் நீர் தேடிப் பறக்கும்.

குலம் ஒரு மத்தியான நேரம் பிறந்தான். பிறந்தவுடன் எட்டு இறாத்தல் நிறை காட்டினான். அம்மா இராஜ வலியில் துவண்டாள், மயக்கம் தீர நெடு நேரமாயிற்று. காய்ச்சல் ஓய சில நாளாயிற்று.

என்னவோ அம்மாவுக்கு குலத்தைவிட சீலனை மிகவும் பிடித்தது. அவன் அவளைவிட வளர்ந்துவிட்ட பிறகும், மேலுதடு அரும்பிய பிறகும்..... அவனது கேசங்களை வருடுவதில் அம்மா இன்புற்றாள். ஒரு குழந்தையினதுபோல மிகவும் மிருதுவான தலைமயிர்.

குலத்திற்கு மிகவும் முரட்டுத் தலைமயிர். சுருண்டு சுருண்டு இருக்கும். கண்கள் சிறுத்து உள்வாங்கி இடுங்கி இருந்தன. மேனியில் மண்ணெண்ணெய் நாற்றமும் ஒயில் நாற்றமும், வியர்வை வாடையும் சதாகாலமும் வீசிற்று. அவன் தொழில் அப்படி! குலம் ஒரு மெக்கானிக் ஆகவேண்டியதாயிற்று, அவனது மாமனைப்போல. நேரங்காலமற்ற வேலை. சிலநாட்கள் சேர்ந்தாற்போல வராமலிருக்க நேர்ந்தது. நேரத்திற்கு உண்ண முடியாமற் போயிற்று. தன்னைக் கவனிக்க நேரமில்லாமற் போயிற்று. அண்ணன் நிறையப் படிக்க வேண்டுமென நினைத்தானோ, என்னவோ? ஓய்வொழிச்சல் இல்லாமல் வேலை வேலையென்று பறந்தான்.

நினைக்க நினைக்க அம்மாவுக்கு நெஞ்சைப் பிளக்கும்படி நெடுமூச் செறிந்தது. சீலன் ஏன் அப்படிப் போனான்?

அம்மா மெல்ல மெல்ல போரிலிருந்து வைக்கோலைப் பிடுங்கி இழுத்தாள். நாய் அம்மாவிடம் ஓடி வந்தது. கால்களில் 'சில்லென' இருந்த ஈர மூக்கைத் தேய்த்தது. வாலைத் தூக்கிச் சுழட்டிச் சுழட்டி ஆட்டியது. அம்மா காலால் எட்டி உதைக்க நினைத்தாள்.

நாயின் கண்களில் நன்றி வழிந்தது. அது சீலன் கொண்டுவந்த நாய். அம்மா அதை உதைப்பாளா? கால்களை மடக்கிக் கொண்டாள்.

'சொத சொத' வென்ற மாரி காலத்தின் சோம்பலான ஒரு நாளில் சீலன் அதைத் தூக்கிக்கொண்டு வந்தான். வந்தபோது வெள்ளைநிறமாக இருந்தது. இப்போது பழுப்புநிறமாக வளர்ந்து விட்டது.

மழைநீர் ஓடிக்கொண்டிருந்த தெருக்களில் மிகவும் நனைந்துபோய் அனுங்கிய குரலில் கத்தியபடி நடுங்கிக்கொண்டிருந்தது. யாருக்கும் தோன்றாத இரக்கம் அவனுக்குச் சுரந்தது. தூக்கிக்கொண்டு வந்தான். ஓலைப் பெட்டியால் கவிழ்த்து மூடினான். பெரிய காரியவாதி என்ற பாவனையுடன் அம்மாவுக்குச் சொன்னான்.

"வளர்ந்தாற் பிறகு நல்லது....மரநாய் வராதம்மா......கோழிக்குக் காவலாய் இருக்கும்".

தினமும் செங்காரிப் பசுவில் பால் கறந்து ஊட்டினான். அவனுக்குத் தெரியும், எந்தப் பசுவின் பால் ருசியும் கொழுப்பும் உள்ளதென்று.

அம்மா மாடுகளை நோக்கிப் போனாள். நாய் அம்மாவின் கால்களைத் தடுக்கப்பண்ணி விளையாடியபடி பின்னே ஓடியது.

வாலிபத்தில் துள்ளுகிறது நாய். கொழுப்பேறி உடல் பளபளக்கிறது. நன்றாகத்தான் கொழுத்து விட்டது. சீலன்கூட கொழுகொழுவென்றுதான் இருந்தான். திரட்சியான கன்னங்களும், காந்தக் கண்களுமாக.....எவ்வளவு அழகனாக இருந்தான் இந்த அம்மாவின் மகன்.

அமைதியாக இருந்தான். ரேடியோவைக்கூட சத்தமாக முடிக்கிவிட மாட்டான். அவனைச் சுற்றி மட்டுமே இசை இருக்கும். இரண்டாம்பேரை தொந்தரவு செய்ய அவன் விரும்புவதில்லை. அவன் படிக்கும்போது கூட ரேடியோ முன்னாலிருந்து ஏதாவது முணுமுணுத்துக்கொண்டு இருக்கும். சைக்கிளைத் துடைக்கும்போது பாடியவாறு பார்த்துக்கொண்டிருக்கும். ஒவ்வொரு நாளும் உதயகாலத்தில் 'பளபள'வென்று மின்னுமாறு சைக்கிளைத் துடைப்பான். காற்றிருக்கிறதா எனக் கவனித்து திருப்தியுடன் தலையைக் குலுக்குவான். எதிலும் ஒரு ஒழுங்கு அவனிடம் இருந்தது.

அவன் போனபிறகு எல்லாமே ஒழுங்கற்றுப் போயிற்று. ரேடியோ அநேகமாக மௌனித்து விட்டது. அந்த வீடே ஜீவனற்றுப் போயிற்று. சைக்கிள் சீந்துவாரற்றுத் தூசி படிந்துபோய், ரயர்கள் காற்று இறங்கிவிட, சுவரோடு சாய்த்து வைக்கப்பட்டு விட்டது.

குலத்திற்கு சைக்கிள் அவசியமென்றில்லை. அவனுக்கு நேரத்திற்கு ஒரு வாகனம். காரோ,வானோ, மோட்டார் பைக்கோ....காற்றைக் கிழித்துக்கொண்டு வருபவனென வந்து நிற்பான்.

சீலன் போனபிறகு இந்த வீட்டில் முரட்டுத்தனமும், மௌனமும், அம்மாவின் ஏக்கப் பெருமூச்சுகளும் மட்டுமே மிஞ்சி நிற்கின்றன. மகளோவெனில் மிகவும் சின்னவள். புரியாத பேதை. அழகிய சிறு மொட்டு.

சீலன் ஏன் வீட்டைவிட்டுப் போனான்?

அம்மா நன்றாகவே கவனித்தாள். சிலநாட்களாகவே சீலன் சரியாகவே யில்லை. பரீட்சை வேறு நெருங்கிக் கொண்டிருந்தது.

எதையோ குறித்துச் சிந்தித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியது; எதையோ குறித்து மிகவும் கவலை கொள்பவனாகவும் தெரிந்தது.

பரீட்சையை நினைத்துக் கலவரப் படுகிறானோ? ஏன், நன்றாகத்தானே படித்தான்!

பிடிப்பில்லாதவன் போலக் காணப்பட்டான். அம்மாவை நிமிர்ந்து பார்ப்பதைத் தவிர்த்தான். வாய்க்குள் ஏதோ முனகிக்கொள்பவனாய் தலையை அடிக்கடி குலுக்கினான். இரவு நேரங்களில் நித்திரையைத் தொலைத்து விட்டான். புரண்டு புரண்டு படுக்கின்ற அரவங்கள் கேட்டன. காலை நேரங்களில் அவன் சைக்கிளைத் துடைப்பதில்லை, ரேடியோவை மீட்டுவதில்லை. ஆம்! ரேடியோவை அவன் மீட்டுவதாகத்தான் அம்மா இவ்வளவு காலமும் எண்ணினாள். ரேடியோவிலிருந்து அவனது இனிய சாரீரமே மிதந்து வருகிறது போல......உலகின் இனிய வஸ்துகள் யாவும் அவனுக்காகவே படைக்கப்பட்டிருப்பதென......அவன் தொட்டதெல்லாம் துலங்கும் என....அவனுக்காக எங்கோ ஒரு அரிய நங்கை வளர்ந்து வருகிறாள் என .....அவர்கள் அம்மாவுக்கு அழகிய, மதலை குதம்பும் பேரக்குழந்தைகளைப் பெற்றுத் தருவார்கள் என......

சீலனோ எனில், சில நாட்களாக ஏனோ தானோ என மாறிவிட்டான். பரீட்சை எழுதப் போனான். மற்றப் பையன்களிடம் காணப்பட்ட ஆர்வமோ பரபரப்போ அவனிடம் காணப்படவில்லை. அம்மா அவனை ஏதும் கேட்கவில்லை. அவளது இனிய குழந்தையை தொந்தரவு செய்ய அவள் விரும்பவில்லை. எங்காவது காதல், கீதல்.....என்று ஏதாவது? .....அவனாகவே சொல்லட்டும் என்று விட்டுவிட்டாள்.

பரீட்சை நடந்துகொண்டிருந்தது. சீலன் வரவர மிகவும் வெளிறினான். முகத்தில் ததும்புகிற ஜீவகளை எங்கே போயிற்று? அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

சீலன் அன்று வெகு சீக்கிரமே எழுந்தான். மிக நீண்ட நேரம் எங்கோ கவனமாக பல் துலக்கினான். தன்னுணர்வற்றவன் போல் உலவினான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'பளிச்'சென அம்மா பெருக்கி விட்டிருந்த முற்றத்தில் அவனது சீரான காலடிகள் பதிந்தன. அம்மா மிகவும் அதிசயப் பட்டாள்.

"நேரமாகிதெல்லே மேனே......?

சரியாகச் சாப்பிடத்தானும் இல்லை. சைக்கிளில் ஏறி உட்கார்ந்தான். வழமை போல் ஒரே தாவலில் ஏறிப் பறந்து விடவில்லை. மிக நிதானமாக ஏறி உட்கார்ந்தான். காற்றை அளப்பவனைப் போல சுற்றிலும் பார்வையை ஓட்டினான்.

"போயிட்டு வாறன் அம்மா......"

"வடிவாக் கடவுளை நேர்ந்துகொண்டு போ....."

பிறகும் ஏன் நிற்கிறான்?

"நேரமாகிதெல்லே....."

"நான் போறன்....."

மொட்டையாக முணுமுணுத்தான். மெல்ல மெல்ல ஒரு கிழவனைப் போல உழக்கிக்கொண்டு போனான். அம்மா அவன் பின்னாலேயே போனாள். தெருவில் இறங்கி நின்று கொண்டு அவன் போவதையே பார்த்தாள். முடுக்கால் திரும்பி மறையுமுன் 'சட்'என ஒருதரம் திரும்பிப் பார்த்தான்.

அம்மா உள்ளே வந்தாள். சற்றுநேரம் திண்ணையில் உட்கார்ந்தாள். பிறகு, தலைக்கு எண்ணெய் பூசி சீவி முடித்துக்கொள்ள நினைத்து எண்ணெய்ப் போத்தலைத் தேடினாள்.

வாசலில் யாரோ சைக்கிளில் வந்து நிற்பதைப்போல உணர்ந்தாள். எட்டிப் பார்த்தாள்.

சீலன்!

என்னவாயிற்று இன்று இவனுக்கு?

மீண்டும் சீலன் உள்ளே வந்தான். எதையாவது மறந்து விட்டு விட்டுப் போனானோ?

திண்ணையில் ஏறி அமர்ந்தான். முகம் செத்துப்போய் இருந்தது.

"ஏன் மேனே தலையிடிக்குதோ......"

"சாச் சாய்...."

குனிந்து நிலத்தைக் கீற ஆரம்பித்தான்.

"இரு கோப்பி போட்டுத் தாறன்....."

அசிரத்தையாகத் தலையைக் குலுக்கினான்.

"அப்ப ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?"

"............"

"காசு......கீசு......ஏதாவது வேணுமோ? "

சிரித்தான். இந்த அம்மா எவ்வளவு அப்பாவி!

அம்மா அவசரமாய்க் கோப்பி கொண்டுவந்து கொடுத்தாள். வாங்கினான். இல்லை. பறித்தான! அவனது ஆவலும் பரபரப்பும் அம்மாவை வியப்பிலாழ்த்தின. வாங்கும்போது அம்மாவின் கைகளை அவன் விரல்கள் தீண்டின. என்றுமில்லாத அழுத்தம் அவ்விரல்களில் இருந்தது. உள்ளங்கைகள் பிசுபிசுத்து வியர்த்திருந்தன.

"தங்கச்சி எங்கை அம்மா.....?"

"ப்ச்......உங்கைதான் எங்கையாவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போயிருப்பாள்."

"........."

"ஏன்?"

"சும்மாதான்"

"அவளைப் பார்த்துக்கொண்டு நில்லாமல் வெளிக்கிடு......நேரம் போகுது......"

ஏதோ ஒரு உறுதியுடன் விருட்டென எழுந்தான். விறைத்து நின்றுகொண்டான் சிறுநேரம். ஒரு நொடி அம்மாவின் கண்களை கூர்ந்து பார்த்தான். அவளது கண்ணுக்குள் எதையோ தேடினான் போலும்!

"நான்....போ..ற..ன்...அம்மா!"

வெடுக்கெனத் திரும்பி சைக்கிளில் பாய்ந்து ஏறினான். வெகு வேகமாகப் போனான். ஏதோ ஒரு இனம் புரியாத சக்தி அவனை அம்மாவிடமிருந்து பிரித்து இழுத்துச் செல்கிறதென....

அம்மா கலவரத்துடன் தெருவுக்கு விரைந்தாள். சீலன் முடுக்கால் திரும்பி மறைந்துகொண்டிருந்தான். ஒருதரம் திரும்பிப் பார்ப்பான் என எதிர்பார்த்தாள். அவன் பார்க்கவில்லை. ஆனால் ஹாண்டிலில் ஒரு சிறு பொலிதீன் பாக் தொங்கிக்கொண்டிருப்பதை அம்மா அப்போதுதான் கவனித்தாள். சைக்கிள் சில்லு தெருநீளத்திற்கு பாம்பு ஊர்ந்து போன சுவடாக தடம் பதித்துத் தெரிந்தது.

அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை, புருவங்களைச் சுருக்கினாள். மாலையில் யாவும் புரிந்தன. தயங்கித் தயங்கி ஒரு பையன் சீலனின் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்தான். தலையைக் குனிந்துகொண்டேபோய்ச் சுவருடன் சைக்கிளைச் சாத்தினான். அவனை எங்கேயோ பார்த்த ஞாபகம் காட்டிற்று அம்மாவுக்கு. அம்மாவின் முகத்தைப் பாராமல் எங்கோ வேண்டுமென்றே பார்வையைத் திருப்பினான்.

வெகு ஆயத்தமாக தொண்டையைச் செருமிச் சரிபண்ணிக் கொண்டான்.

"சீலன்........இதை.....இஞ்சை கொண்டு வந்து விடச் சொன்னவர்...."

"ஆங்.....சீலன் எங்கையப்பு......."

"........"

"ஐயோ! என்ரை பிள்ளை"

அந்தக் குரலின் அவலம் பையனைத் துரத்தியது. தலையைக் குனிந்தவனாய் விடுவிடென்று விரைந்து போனான்.

அம்மா பதைத்தாள், கிரீச்சிட்டாள்.

"சீலன் எங்கையப்பு....."

இலேசாகக் குளிர்ந்துபோய் தன்னைக் கடந்துபோன காற்றை, அம்மா கேட்டாள், அது மௌனமாகப் போனது.

இவ்வாறான எத்தனை அன்னையரின் சோகங்களை அது பார்த்திருக்கிறது! அது பேசாமல் போனது.

"ஐயோ, என்ரை சீலன் எங்கை...."

சிவந்து மின்னிக்கொண்டிருந்த அந்தி வானை அம்மா கேட்டாள்.

இவ்வாறான எத்தனை சீலன்கள் அதன் கீழ் உள்ளனர். அது பேசாமல் கண்ணை மூடிற்று.

"சீலன் எங்கை?"

அவளுக்குத் திருப்தியான பதிலைத் தர ஒருவருமில்லை.

"சீலன் எங்கை?"

அம்மாவின் பரிதாபமான அக்கேள்வி ஊர்மேல் ஓங்கி அடித்தது. அம்மாவைச் சுற்றி ஊர்ப்பெண்கள் ஒவ்வொருவராகக் கூடத்தொடங்கினார்கள்.

அவர்களுக்குப் புரிந்தது சீலன் எங்கே போனான் என்று! இவ்வாறான எத்தனை கதைகளை அவர்கள் அறிந்திருக்கின்றனர். அம்மாவை ஆதரவாக உள்ளே கூட்டிப் போயினர்.

பிறகு,

அந்த எளிமையான சிறிய வீட்டின் ஆனந்த வாழ்வும் அவனுடன் கூடப்போய் விட்டதாய்....

வெறுமை:

*************************

மாலை நேரங்களில் அம்மா ஊரை நீங்கித் தூரே இருக்கின்ற வயல் வெளிகளிலும், பனங்கூடல்களுக்குள் தனித்துக் கிடக்கின்ற திடல்களிலும் புல் செதுக்கிக் கொண்டு வரப் போவாள். முழுத்தூரமும் இளைத்து இளைத்து முதுகொடியச் சுமந்து வந்தாள்.

அவள் பாரத்தை மாற்றிக்கொள்ள யாரும் இல்லை!

அவள் பாதி வழி வரும்போதே முருகன் கோயில் மணி சிணுங்கிக் கேட்கும். அவளால் வேளாவேளைக்குப் பூசை பார்க்கப் போக முடியவில்லை. அவள் போகும்போது கோயில் நிசப்தமாக இருளில் மூழ்கி இருக்கும். பூசை முடிந்து போனதின் தடங்களாக, சிந்திக் கிடக்கின்ற சில மலர்களும்.. ...மெல்ல மெல்லக் காற்றில் கரைந்துகொண்டிருக்கின்ற கற்பூர வாசனையும் .......முணுக்கென எரிகின்ற ஒரு சிறு தூண்டாமணி விளக்கும்......இழுத்து மூடப்பட்டிருக்கின்ற சித்திர வேலைப் பாட்டுடன் கூடிய கனத்த கதவும்.......

அம்மா வாசலில் நின்று தனியே தொழுதாள். தனது அருமையான புதல்வனின் நலத்துக்காக அம்மா தினமும் தனியே நின்று உருகினாள்.

வீட்டுக்குத் திரும்பிவரும் நேரங்களில் மாடுகள் பின்புறத்தில் ஒன்றையொன்று கொம்புகளால் குத்தி விரட்டியபடி துள்ளித் திரியும். கண்ட இடத்திலெல்லாம் குழம்புகளால் உழக்கிய அடையாளங்களும்.....சாணியும்.....

அம்மாவே ஒவ்வொன்றாக இழுத்து வந்து கட்டைகளில் கட்ட வேண்டியிருந்தது.

கோழிகள் பூவரச மரங்களில் குடிபுகப் பழகின. அம்மா கற்களை எடுத்து வீசுவாள். "சூ" என விரட்டுவாள். நிசப்தமான முன்னிரவு அவற்றின் கொக்கரிப்புகளாலும், சிறகடிப்புகளாலும் நிம்மதி இழந்து தவிக்கும்.

அம்மாவே தனியாக அவற்றைக் கூடுகளில் அடைக்க வேண்டியிருந்தது.

புகை படிந்துபோய் மங்கிய ஒளி சிந்தும் ஒரு சிறு விளக்கு. மேசையின் மீது சீலனின் புத்தகங்கள், ஒரு சைக்கிள், மௌனமாகிவிட்ட ஒரு ரேடியோ. அருகில் மகள் அமர்ந்திருப்பாள். அழகிய சிறு மொட்டு. வயதுக்கு மீறிய குருட்டு யோசனைகள், கொட்டக் கொட்ட விழித்தபடி தனிமையில் உட்கார்ந்திருப்பாள். பாவம்!

அந்த அருமையான மாலைநேரத் தேநீர் அம்மாவுக்குப் பிறகு கிடைக்கவேயில்லை.

அம்மா வரவர மெலிந்தாள். கண்களைச் சுற்றி கருவளையங்கள் தோன்றின. நடை வரவரத் தளர்ந்தாள். முன்புபோல உற்சாகமாக வேலை செய்ய முடியவில்லை. அம்மா வயோதிபத்தை நோக்கி மெல்ல மெல்லப் போய்க்கொண்டிருந்தாள்.

இரவு நேரங்களில் நித்திரையின்றி வாடுவாள். புரண்டு புரண்டு படுப்பாள். அலுத்துப் போய் எழுந்து உட்கார்வாள். ஏதோ ஏதோ விபரீத எண்ணங்கள் தோன்ற பெருமூச்சு விடுவாள்.

குலத்தைப் பற்றியும் வரவர அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. எப்போதாவது மூன்று நான்கு நாட்களுக்கொருமுறை வருவான். அம்மா அரைத் தூக்கத்தில் அவஸ்தையுடன் புரளும் போது கனவேகத்தில் வந்த ஒரு வாகனம் வாசலில் நின்று ஒருதரம் உறுமி ஓயும். குலம் திமுதிமுவென உள்ளே வருவான். அம்மாவுடன் ஒரு வார்த்தை கூடப் பேசாமலே ......அம்மா முகத்தைச் சரியாக ஏறிட்டுக்கூடப் பார்க்காமலே .....கைகளில் பணத்தைத் திணிப்பான். சேட்டைக் கழட்டிக் கண்ட இடத்தில் எறிவான். ஓலைப் பாயை விரித்துத் தலையணைகூட இன்றிப் படுப்பான். வலிய கரங்களை நெற்றியின்மீது அழுந்தப் போட்டபடி.......கால்களை ஆட்டியவாறு.....மயிரரும்பும் மார்புகள் விம்மித்தணிய ஒரு நொடியில் தூங்கிப் போவான்.

இப்போ தூங்கிக்கொண்டிருக்கிறானே, அது மாதிரி! ஒரு காட்டுப் பிறவி!

**********************

இப்போ,

குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. குண்டுச் சத்தங்களைக் கேட்டவுடன் அம்மா நடுங்குவாள். கண்கள் பீதியால் விரியும். அடிவயிறு குலுங்கும்.

'அவர்கள் அடிக்கடி ஊர்களைச் சுற்றி வளைத்தனர். கனரக வாகனங்களின் உறுமலைக் கேட்டவுடன் அம்மா பாதி உயிரற்றுப் போவாள். நீட்டிய துப்பாக்கிகளுடன் "மகன் எங்கே" என உறுக்கியபடி அவர்கள் வரும்போது- துப்பாக்கிச் சனியன்களில் குத்திக் கொண்டு போகும் பாவனையில் பிள்ளைகளை அவர்கள் வளைத்துக் கூட்டிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செல்லும்போது – அம்மா படும் சஞ்சலம் சொல்லி மாளாது.

"கடவுளே!...... நான் சாகமுதல் என்ரை பிள்ளையை ஒருக்கால் என்ரை கண்ணிலை காட்டு...."

ஊரில் தினமும் இரவு நேரங்களில் குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. அம்மாவின் காதுச்சவ்வுகள் கிழிந்து விடுமாற் போல 'கிண்' என வலிக்கின்றன. நெஞ்சு நீரற்று வரண்டுபோய் விடுகின்றது.

இந்த இரவுகள் மிகவும் கொடியன.

அம்மாவுக்கு மிகவும் பரிச்சயமான அந்த வயல்வெளிகளிலே, பனங்கூடல்களுக்குள் தனித்துக் கிடக்கும் திடல்களிலே 'பொடியன்கள்' குண்டு வெடிக்க வைத்துப் பழகுகின்றார்கள் என ஊர்ப் பெண்கள் அம்மாவிடம் சொல்லினர்.

சீலனும் அவர்களுள் ஒருத்தனாக இருக்கலாமோ? அம்மா பெரும் பீதியுடன் எண்ணினாள். ஆனால் சீலனைக் கண்டதாக ஒரு நாய்கூட அம்மாவிடம் சொல்லவில்லை.

அவன் எந்த ஊரில் குண்டு வெடிக்க வைத்துப் பழகிறானோ? அம்மா பிற ஊர்களை அதிகம் அறியாள். இந்த சிறு குடிசை வீடும்......முருகன் கோயிலும்.....புழுதி பறக்கின்ற ஒழுங்கைகளும்.....திடல்களும்....கோழிகளும்தான் அம்மாவின் உலகம். அவளது பிள்ளைகளே அவளீட்டிய ஈடற்ற செல்வம்.

## 2

இன்று அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. ஒவ்வொரு சத்தத்திற்கும் சீலனின் நினைவு அம்மாவுக்குள் கனதியாக ஏறிற்று.

குலம்கூட நாலைந்து நாட்களாக வீட்டிற்கு வரவில்லை. இன்றாவது அவன் வருவான் என்று அம்மா மிகவும் ஆசைப்பட்டாள்.

இவன் என்ன பிள்ளை? வீட்டிற்கே வருவது குறைவு. வந்தவுடன் விழுந்து படுக்கிறான்.

"அம்மா.......பசிக்குது" ஒரு வார்த்தை!

ம் ஹூம்.

பசி என ஒரு பிள்ளை கேட்டாலே தாயின் வயிறு நிறைந்து விடுமே. இது கூடப் புரியாத ஒரு காட்டுப்பிறவி.

எங்கேதான் இவன் சாப்பிடுகிறானோ?

இன்று குலம் கட்டாயம் வருவான் என எண்ணினாள் அம்மா. தூங்காமல் விழித்திருந்தாள். திண்ணைக் குந்தில் கால்நீட்டி உட்கார்ந்தாள்.

இன்று மங்கிய நிலவு வெளிச்சம் இருக்கிறது. சந்திரனின் முகம் ஒரு அழகிய பெண்ணின் நெற்றிபோலத் தெரிகிறது. வெள்ளை மேகங்கள் வேகமாக வானில் திரிவதை அம்மா பார்த்துக் கொண்டிருந்தாள். பூவரச மிலைகள் மங்கிய நிலவொளியில் பளபளத்துத் தெரிகின்றன.

அம்மா மட்டும் தனித்திருந்தாள். விளக்கின் சிம்னி புகை படிந்திருந்தது. மகள் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். மாடுகள் மூச்சு விடும் சத்தத்தை, கோழிகள் குறுகுறுப்பதை, நாய் மூச்சு வாங்க அங்கும் இங்கும் ஓடுவதை, நிலத்தைப் பிராண்டுவதை.......அம்மா பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிள்வண்டு ஒன்று கிரீச்சென குரலெடுத்து அலற ஆரம்பித்தது. நாய் காரணமற்றுப் பலமுறை குரைத்தது. நிலவைக்கண்டு அது குரைப்பதாக எண்ணினாள்.

செங்காரிப்பசு வேதனையான குரலில் கதறியது. எதுவோ அதைத் துன்புறுத்துவதாகத் தோன்றியது. அம்மாவால் எழுந்து பின்புறம் போக முடியவில்லை. ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

நடுநிசியின் மணத்தையும், உருவாக்கத்தையும், சத்தத்தையும் அம்மா உன்னிப்பாகக் கவனித்தாள். எங்கோ புல்லாந்தி மலர்ந்திருக்க வேண்டும். குரக்கன் பிட்டு வாசனை மூக்கைக் கமறச் செய்தது. புடையன் பாம்பு இரையெடுக்கின்றபோதும் இதே வாசனை! வேலி சரசரத்தது. உடலெங்கும் கபடான அழகுமிக்க முத்திரைகளைப் போர்த்தியபடி கொடிய விஷமுடைய புடையன் பாம்பு, வழுவி வழுவி வேலிக்குள் ஊர்கிறதோ?.....அம்மாவுக்கு ஒரே பயம்!

குலம் எப்போது வருவான்? அவன் கட்டாயம் வரவேண்டும் என அம்மா முருகனை அடிக்கடி வேண்டினாள்.

அடிக்கடி குண்டுச் சத்தம் கேட்கின்றன. நிலமும், காற்றும், வானும் அதிர்கின்றன. அடிவயிறு குலுங்குகிறது.

சிறுவயதில் இருளைக் கண்டு பயந்து அம்மாக்கள் பக்கத்திலேயே ஓட்டியபடி படுத்திருந்த புதல்வர்கள் யாருமற்ற வயல்வெளிகளிலே, பிசாசுகளும் உலவத் தயங்கும் நடுநிசி வேளைகளில் இவ்வாறு திரிய எப்படிப் பழகினர்? இந்தப் பயங்கரச் சத்தங்களை எவ்வாறு தாங்கிக் கொள்கின்றனர்? இந்த ஆபத்துக்களை எவ்வாறு சிரிப்புடன் ஏற்றுக்கொள்கின்றனர்? இவ்வளவு வேகத்தையும், வெஞ்சினத்தையும் அவர்களின் மனத்தினில் விதைத்தது யார்?

"கடவுளே!....எவளெவள் பெத்த பிள்ளைகளோ,.....இப்படி வாய்க்கு வயித்துக்கில்லாமல்....."

குண்டு ஒன்று பிசிறடித்த சத்தத்துடன் வெடிக்கின்றது. கேட்டுப் பழக்கமில்லாத வித்தியாசமான வெடிப்பு மிகவும் வெறுக்கத்தக்க, அருவருப்பான சத்தம்– அரைகுறையில் பிரசவமான ஒரு உயிரற்ற முண்டத்தைப்போல.

அம்மாவுக்கு உடல் 'பட்' டென வியர்த்தது. ஏதோ கெட்ட விஷயம் நடந்தேறியதாக உள்ளுணர்வு சொல்லிற்று.

எழுந்து மேசையை நோக்கிப் போனாள். நடுங்கும் கரங்களால் விளக்கைத் தூண்டினாள். இறங்கி முற்றத்திற்கு வந்தாள். சேலையை இழுத்துப் போர்த்துக்கொண்டு குண்டுச் சத்தம் வந்த திசையில் பார்த்தாள். நாய் அம்மாவின் காலடியில் நின்றது. வாலைக் கால்களுக்கிடையில் நேராகத் தொங்கப் போட்டபடி செவிகளை வானோக்கி உயர்த்தி எதையோ உற்றுக் கேட்டது. மெல்ல உறுமிற்று. பிறகு வேதனையான குரலில் ஊளையிட்டது. வீட்டைச் சுற்றிச் சுற்றி வேகமாக ஓடியது. அம்மாவின் காலடியில் நிற்பதும் .....பிறகு ஓடுவதும்....கெட்ட சேதியொன்றை அம்மாவுக்கு உணர்த்த அது துடித்தது போலும்!

செங்காரிப்பசு மீண்டும் மீண்டும் கதறியது. சிள்வண்டின் பிலாக்கண ஓசை மிகைபடக் கேட்கலாயிற்று. குரக்கன் பிட்டு வாசனை எங்கும் நீக்கமற நிறைந்தது.

அம்மா சோர்ந்துபோய், துடிக்கும் நெஞ்சுடன் முற்றத்தில் உட்கார்ந்தாள். நெஞ்சு மிக வரண்டு விட்டது. தொண்டைக் குழிக்குள் கனமான வஸ்து ஒன்று அடைத்து விட்டதைப்போல திமிறித் திமிறி மூச்சு விட்டாள்.

சீலனை நினைத்து நினைத்து ஏங்கினாள். குலம் இன்றாவது வருவான் என்ற நம்பிக்கையும் பொய்த்தது. இரவு மிகவும் முற்றி அம்மாவைச் சுற்றிக் கனமாகப் படிந்தது, துன்பம் தரும் குரலில் ஏதோ சொல்லிற்று.

சற்றுத்தூரே போகும் ஒரு ரோட்டில் ஒரு வாகனம் விரைந்து போகும் சத்தம். ஆபத்தான நோயாளியை யாரோ சிலர் அவசர அவசரமாகச் சுமந்து கொண்டு காப்பாற்ற ஓடிக்கொண்டிருப்பதாக.....

எங்கோ ஏதோ பிசகு நடந்து விட்டது.

கோழி ஒன்று பரிதாபமாகக் குழறுகிறது. மரநாய் பிடித்திருக்க வேண்டும். தீனமான அந்தச் சத்தம் மெல்ல மெல்லத் தேய்ந்து தேய்ந்து தூரேபோய், மறைகிறது. நாய் துரத்திக்கொண்டு ஓடிப்போய் இயலாமையுடன் திரும்பி வருகிறது.

விழிகள் திறந்தபடியே இருக்க அம்மா கனவு கண்டாள்.

வயல்வெளியில் அம்மா நிற்கிறாள். சூரியன் பயங்கரமாகக் காச்சுகிறான், மழையும் பெய்கிறது. வெம்மையாக அம்மா உடலைப் பொசுக்கிற்று மழை நீர். அம்மா ஓடுகிறாள். இழைத்து இழைத்து ஊருக்குள் நுழைகிறாள். ஒழுங்கைகளில் வெள்ளம் பாய்கிறது. ஒரு சிவப்பு நூல்போல இரத்த ஓடை ஒன்று வெள்ளத்தில் கலக்கிறது. அம்மா அதன் வழி போனாள் வெகுதூரம்.... ..வெகு-தூரம்......கடைசியில் வந்து சேர்ந்தாள். வீட்டு வாசலில் சீலன் தலையைக் கவிழ்ந்தபடி இருக்கிறான். கண்களி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லிருந்து இரத்தம் தாரை தாரையாகக் கொட்டுகிறது; மழைநீரில் கலக்கிறது. வீடெங்கும் இரத்தம். நாய் இரத்தத்தை நக்கி நக்கிக் குடிக்கிறது.

கனவில் இரத்தத்தைக் காண்பது கூடாதே. அம்மா வீரிட நினைத்தாள். இயலாமல் போயிற்று.

குலம் அன்று வரவேயில்லை. அம்மா முழு இரவும் தூங்காமலே விழித்திருந் தாள். அந்தக் கொடிய இரவின் ஒவ் வொரு விநாடியையும் வேதனையுடன் அனுபவித்தாள்.

கிழக்கு வானிலே விடிவெள்ளி காலித்தது. சந்திரனை அது மேற்கு நோக்கி விரட்டிற்று. காகங்கள் துன்பம் நிரம்பிய குரலில், விடிந்து கொண்டிருப் பதைப் பூமிக்குச் சொல்லின. கோழிகள் சிறகடித்துக் கொக்கரித்தன, கூவின. முதல்நாள் இரவில் பறிபோன தங்களது தோழனுக்காக அவை அஞ்சலி செலுத் தின.மாடுகள் மடிநிறைய பால் நிறைந்து கனக்கின்ற வேதனை தாளாமல் கன்று களை அழைத்தன. செத்தவீட்டிற்கு தலையைக் குனிந்து கொண்டுவரும் ஒருவனைப்போல், சூரியன் மெல்ல மெல்ல உதயமாகினான்.

புரியாத பேதையான மகள் சோம்பல் முறித்தபடி எழுந்து வந்தாள். முற்றத்தில் நாடியில் கையூன்றி உறைந்து போய் விட்ட அம்மாவைப் புரியாத பார் வையால் அளந்தாள். அம்மாவின் ஜீவன் எங்கோ ஓடி ஒளிந்து விட்டது. சிறுகாற்றுக்கூட அம்மாவின் பலகீனமான தேகத்தைப் பூமியில் புரட்டி விடும்.

மெல்ல எழுந்து திண்ணையில் கால் நீட்டி உட்கார்ந்தாள். யாராவது ஒரு வேலையற்ற பெண் அம்மாவைத் தேடி வரமாட்டாளா? கேவும் குரலில் அவ ளிடம் தன் துன்பங்களைக் கொட்டி அம்மா ஒரு பாட்டம் அழுது ஓய மாட் டாளா?

ஒருவரும் வரவில்லை. பதிலாக மகள் பள்ளிக்கூடம் போகவேண்டியி ருந்தது. மாடுகளை அவிழ்த்து மேய்ச் சலுக்குத் துரத்த வேண்டியிருந்தது. கோழிகளை கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

அம்மா யந்திரகதியில் அவற்றைச் செய்தாள். மூளை வேலை செய்து மரத்துப் போயிற்று. கண்கள் காந்தின. அம்மாவுக்கு உட்காய்ச்சல் கண்டு விட்டது. நெருப்புக் காற்றுப்போல உஷ்ணமான மூச்சுக்கள் உதடுகளைப் பொசுக்கின. காரணமற்று சில தப்படி கள் நடப்பதும் .......பிறகு நெடுநேரம் ஒரேயிடத்தில் உட்கார்வதும்......தூரே அர்த்தமற்று பார்வை பதித்து பெரு மூச்சுக்கள் எறிவதும்......

சூரியன் யாருக்கும் பிரிவு சொல் லாமல் மறைந்து போனது. இருளுடன் போரிட்டுத் தோற்றுப்போய் அழுது வடிகிறது நிலவு. காற்று நடந்து போய்க் கொண்டிருந்தது. அம்மாவால் இவற்றைக் கவனிக்க முடியவில்லை.

சீலன் என்ன ஆனான்?

குலம் ஏன் நாலைந்து நாட்களாக வரவில்லை?

அம்மா மனதில் கேள்விகள் மாறி மாறி எழுந்தன; ஒன்றையொன்று துரத்தின.

தொடர்ந்து மூன்று நாட்களாக குண்டுச் சத்தம் கேட்கவில்லை. அச்ச மூட்டும் பேரமைதி ஊர்மேல் கவிந்தது. மூன்றுநாட்களும் அம்மாவால் ஒரு வாய்கூட உண்ண முடியவில்லை. ஓரே விக்கல்!

நாலாவது இரவு வேகமாக வந்தது. ஓ இந்த இரவுகள் மிகவும் கொடியன.

அம்மா திண்ணைக் குந்தில் கால் நீட்டி உட்கார்ந்திருந்தாள். மர இலைகள் நடுநடுங்கிக்கொண்டிருக்க, காற்று அவற் றைச் சீண்டிவிட்டுப் போய்க்கொண்டி ருந்தது. நிலவு மேகங்களுக்குள் பயந் துபோய் ஒளித்துக்கொண்டு அடிக்கொரு தரம் எட்டிப்பார்த்து, ‘சடக்’ எனத் தலையை உள்ளிளுத்துக் கொண்டிருந்தது. ஓழுங்கையில் யாரோ சுருட்டுப் பிடித் துக்கொண்டு போனான் போலும். ‘குப்’பென சுருட்டின் நாற்றம் வீசிற்று. நாய் சுருண்டுபோய் அம்மா பக்கத்தில் படுத்திருந்தது.

வாகனம் ஒன்று வருவதை அம்மா உணர்ந்தாள். அளவான வேகம். கண் களைக் கூசச் செய்யும் ஒளி வெள்ளத்தை உமிழ்ந்தபடி வாசலில் நின்றது. ‘ஹோர் ன்’ ஐ ஒலித்து, வந்துவிட்டதாகச் சேதி சொல்லிற்று.

அம்மா ஆசுவாசப் பெருமூச்சு விட் டாள்.

கடவுளுக்கு நன்றி! குலம் இன்று வீட்டிற்கு வந்திருக்கிறான்!!

கதவுகளைத் திறந்து அறையுஞ் சத் தம். குலம் மட்டுமல்ல, வேறும் சிலர் வந்திருக்க வேண்டும். குசுகுசுவெனக் கதைக்கின்ற சத்தம். படலையை மெல்லத் தள்ளித் திறந்தனர். கூட்டமாக வந்தனர்.

யாரோ ஒருவனைக் கைத்தாங்கலில் கூட்டிக்கொண்டு வந்தனர். அம்மா பயந்தவளாய் விருட்டென எழுந்தாள். விளக்கைத் தூக்கி உயரப் பிடித்தாள்.

குலம் சோர்ந்துபோய் வந்து கொண் டிருந்தான். அவனைத் தாங்கி அழைத்து வருகின்றனர். வலது கையை ஒருவன் மென்மையாகப் பற்றியபடி வந்தான். மணிக்கூட்டுக்குக் கீழே இரத்தம் ஊறிப் போன ஒரு துணிப்பந்து.

ஐயோ! இந்த அம்மாவின் முரட்டுக் குழந்தைக்கு என்னவாயிற்று?

அம்மா அலற நினைத்தாள். முடிய வில்லை. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

அம்மா அசைய நினைத்தாள். முடியவில்லை. பாதங்களை யாரோ தரையுடன் சேர்த்து ஆணியால் அறைந் தது மாதிரி.

அவர்கள் ஓலைப்பாயை விரித்தனர். தலையணைகளைப் போட்டனர். குலம் பொறுக்க முடியாமல் முனகியபடி சரிந்தான். முகம் மிக வெளிறியிருந்தது. உதடுகள் காய்ந்து தோலுரிந்திருந்தன. மிகவும் தாகமாக இருந்தான். நாவால் உதடுகளை நீவினான்.

“அம்மா.....”

ஈனக்குரல் அம்மாவை அழைக்கிறது. அம்மாவால் பதில் சொல்ல முடிய வில்லை.

மகன் தாகத்தால் தவிக்கிறான், அம்மாவால் அசைய முடியவில்லை.

அவர்கள் கிட்ட வந்தனர். தலையைக் குனிந்தபடி அம்மாவைச் சூழ நின்றனர். ஒருவன் அம்மாவைத் தொட்டசைத்தான். அம்மா இமைக்க மறுக்கும் விழிகளால் அவர்களைப் பார்த்தாள்.

அவர்களை அம்மா அடையாளங் கண்டாள்! நடுநிசிகளில்.....யாருமற்ற வெளிகளில்......திரிகின்ற புதல்வர்கள்!!

ஓ! குலமுமா இந்த அப்பாவி அம் மாவை ஏமாற்றித் திரிந்தான்?

“கோப்பி வைச்சுக் குடுங்கோ......”

அம்மாவின் தோள்களைக் குலுக் கியபடி ஒருவன் சொன்னான்.

அவளுடைய முரட்டு மகன், புரிய முடியாத புதல்வன் கையைக் காவு கொடுத்து வந்திருக்கிறான்! தாகத்தால் தவிக்கிறான்!!

கடவுளே! அம்மாவுக்கு கொஞ்சம் பலமளிக்க மாட்டாயோ?

அம்மா எதுவோ கேட்க உன்னினாள். அர்த்தம் குலைந்த ஒரு பலகீனமான முனகல் மட்டுமே வந்தது.

அம்மா அசைய முயற்சித்தாள். பெரும் பிரையாசையுடன் கால்களைப் பெயர்த்தாள். உடல் முழுவதும் மரண வேதனை போலும் நோவெடுத்தது. ஓரடி எடுத்து வைத்தாள். ‘மொளக்’ கென ஏதோ சுளுக்கிக் கொண்டது. அம்மா பிருஷ்டம் அடிபட மல்லாந்து விழுந்தாள்.

அவர்கள் அம்மாவைத் தூக்கினர். ஓலைப்பாயை விரித்தனர். தலையணை களைப் போட்டனர். பாயில் அம்மாவை மெல்லச் சரித்தனர்.

ஊருக்குள் எப்படித்தான் விஷயம் பரவிற்றோ?

அவசர அவசரமாக மண்ணெண் ணெய் விளக்குகள் மீண்டும் ஏற்றப் பட்டன. ஓவ்வொருவராக ஊர்ப் பெண் கள் அம்மாவின் வீட்டு முற்றத்தில் கூடத்தொடங்கினர்.

“கையிலேயே வெடிச்சிடுத்தாம்.....”

ஒருத்தி பீதி கவ்விய குரலில் மற்ற வளிடம் குசுகுசுத்ததை, அம்மா கனவிற் கேட்பதைப் போலக் கேட்டாள்.

குலத்தைத் திரும்பிப் பார்த்தாள். அரை மயக்கத்தில் கிடந்தான். சொட்டுச் சொட்டாக கருஞ்சிவப்பு இரத்தம் தலையணையில் சிந்திக் கொண்டிருந்தது.

முத்து முத்தாக சூடான கண்ணீர் அம்மாவின் கன்னங்களை நனைத்தபடி சிந்தத் தொடங்கின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 3

முதுகுப் பிடிப்புடன் முதிய பெண். அவள் வெகு வேகமாகக் கிழவியாகிக் கொண்டிருந்தாள். ஊரில் ஒருவருடனும் அவள் இப்போ பேசிச் சிரிப்பதில்லை.

ஒரு அழகிய சிறு மொட்டு. புரியாத பேதை. வாடிக்கொண்டிருக்கும் பூமரம். அவளது வயதுக்கு மீறிய குருட்டு யோசனைகள். கவலைகள், ஏக்கங்கள். தாயின் வேலைகளில் பாதிக்கு மேல் இதன் பிஞ்சுத் தோள்களில் பலவந்தமாக இறக்கி வைக்கப்பட்டது. பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப் போவதில்லை. போகும் நாட்களிலும் பிந்தித்தான் போகும். ஒரு அழுக்கு யூனிபோமுடன், கலைந்த கேசத்துடன், வாடிய முகத்துடன், கண்களில் பிந்திவிட்டதின் கலவரமும், பயமும் தெறிக்க, மார்பில் புத்தகக் கட்டுகளை அணைத்தபடி, புழுதி பறக்கும் ஒழுங்கைகள் வழியே ஓட்டமும் நடையுமாக விரையும்.

ஒரு முரட்டு இளைஞன், மணிக்கட்டுக்குக் கீழே அவனது ஒரு கரத்தைத் துணித்து விட்டார்கள். அவனிடம் அடிக்கடி அவனது தோழர்கள் வருகின்றனர். அவன் ஒரு அருமையான மெக்கானிக். மிகவும் மூளைசாலி. அவசியமானவன். ஒற்றைக் கையால் கடுமையாக உழைக்கக்கூடிய அசகாய சூரன். நாலைந்து நாட்களுக்கொரு முறை நடுநிசி நேரம் வீட்டுக்கு வருவான். அவன் முகத்தில் காணப்படும் கடுமையும், ஏதோ ஒரு வெறியும் காண்போரைப் பிரமிக்கச் செய்யும். அவன் ஒரு முசுடு. அதிகம் பேசமாட்டான். வீட்டுக்கு வந்தவுடன் அம்மாவுக்குப் பணம் கொடுப்பான். உடனே ஓலைப் பாயை விரித்தபடி தலையணைகூட இன்றித் தூங்கிப் போவான்.

வீடு மிகவும் பழையது. ஒரு சிறு குடிசை. கூரை மிகவும் உக்கிப்போய் விட்டது. முற்றத்தில் எங்கணும் பூவரசமிலைகள் சருகாக குப்பையாகச் சேர்ந்திருக்கும்.

ஒரு நாய். அதைக் கவனிப்பாரில்லை. எலும்பெடுத்துத் தெரிய மெலிந்து விட்டது. சொறி பிடித்து விட்டது. காதுகளில் உண்ணிகள் படையாகப் பெருகி விட்டன. காதுகள் கீழ் நோக்கி வளைந்து பாரத்தால் தொங்கிவிட்டன. வளவின் ஒரு மூலையில் மண்ணைத் தோண்டிவிட்டுச் சோம்பிப் படுத்திருக்கும். அது குரைப்பதோ, ஓடுவதோ கிடையாது. விரைவில் இறந்துவிடும்.

அடிக்கடி இந்த வீட்டுக்கு மாட்டுத் தரகர்கள் வருகிறார்கள். கதறக் கதற ஒரு பசுவையோ கன்றையோ இழுத்துச் செல்கின்றார்கள். கால்களைப் பரப்பிக் கொண்டு போக மறுத்து அது கதறும். உதவிக்கு அம்மாவை அழைக்கும்; தன் இனத்தை அழைக்கும். பரிதாபமான குரலில் மாடுகள் எல்லாம் சேர்ந்து அழும்.

இரவு நேரங்களில் அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்கும். மரநாய்கள் கோழிகளைக் குழறக் குழற தொண்டையில் திருகியபடி இழுத்துப் போகும். உயிரை வாட்டும் அத்தீனமான ஓலம் மெல்ல மெல்லத் தேய்ந்து தூரே போய் மறையும்.

அம்மா இப்போ குண்டுச் சத்தங்களைச் சட்டை செய்வதில்லை. அவள் துன்பங்களுக்கும் இழப்புக்களுக்கும் பழக்கப்பட்டவள்.

குலத்தினதும் சீலனினதும் ஜாதகங்களைத் தூக்கிக்கொண்டு பெயர்பெற்ற சாத்திரிமார்களைத் தேடிப் போகிறாள்.

சீலன் புனர்பூச நட்சத்திரம்! ராமன் கூடப் புனர்பூச நட்சத்திரம்!

அவனும் காடுகளில் வசிக்க நேர்ந்தது! கடலைக் கடக்க நேர்ந்தது! அதர்மர்களுடன் நெடுகலும் போரிட்டுக்கொள்ள நேர்ந்தது!

வெல்ல முடியாது என்ற இறுமாப்பில் தென்னிலங்கையில் மமதை கொண்டிருந்தவர்களை அவனும் வென்றான்!

சாபத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அவனும் விமோசனம் அளித்தான்!

அவனும் பேதங்களைக் கடந்தவன். குரங்கும் வேடனும் அவனது தோழர்கள்!

ஓ! ஆயினும் ராமன் பேரில் அன்பு கொண்டவர்கள் அவன் பிரிவால் துன்புற நேர்ந்தது.

தசரதன்!........கோசலை!......சீதை!

குலம் அத்த நட்சத்திரம். அத்தம் அதமம் என்றார்கள் சாத்திரிமார்.

அவன் ராஜத்துரோகமான காரியங்களில் ஈடுபடுவான் என்றும்...

மிகப்பெரிய கண்டங்களில் மாட்டிக் கொள்ள நேருமென்றும்......

மறியல் வீட்டுக்குப் போகின்ற பலன்கூட அவனுக்கு உண்டென்றும்...

கிரகங்கள் யாவும் நீசதிசை அடைந்திருக்கிறதென்றும்.....

**பனிமலர் சந்தாதாரராகி ஆதரவளியுங்கள் 12சாதாரண இதழ்களுக்கான சந்தா இங்கிலாந்து இலங்கை இந்தியா £15.00 ஏனைய நாடுகள் £20.00**

RAJA & CO.

SOLICITORS
ADMINISTRATORS OF OATHS

338 Hoe Street
Walthamstow
London E17 9PX

Telephone
081 503 6311

Fax 081 503 7523

With Compliments



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# *Param & Co.*

**SOLICITORS**

**6 Springfield Mount, Kingsbury, London NW9 0PR**

***Solicitors for all your legal requirements***

Civil litigation ● Divorce and family matters ● Immigration
Crime ● Personal injury cases ● Motoring offences
● International transactions

**Legal Aid cases undertaken**

**TELEPHONE: S. PARAMALINGHAM BA., LLM.**
**Tel: 081-200 3500 Fax: 081-200 1360**

(FIMBRA MEMBER)

# P.SRINIVASAN

**INSURANCE MORTGAGES & PENSION SPECIALIST**

**'Suhantham'**
**Abbots Lane**
**Kenley**
**Surrey CR2 5JB**
**081 - 660 5692.**

**1524 London Road**
**London SW16 4EU**
**081 - 679 1952**

BUSINESS * FINANCE * PERSONAL PLANNING * HOUSE * MOTOR * SHOPS * GENERAL

# MARKANDAN & CO.

**SOLICITORS**

**EMPOWERED TO ADMINISTER OATHS**

***M. Markandan*** *LL.B.*

● Immigration Home Office ● Refugee - Asylum
Commercial Conveyancing ● Matrimonial
● Licensing ● House Flat Purchase or Sale
● Representation at Police Stations etc.

**THAMIL HOUSE**
**720 ROMFORD ROAD**
**MANOR PARK**
**LONDON E12 6BT**

LEGAL AID
WE ARE ALWAYS FRIENDLY,
EASY TO TALK AND KEEN TO HELP.
TEL: 081-514 8188 FAX: 081-514 8303




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளங்கவில்லை. மலையக மக்களும் உங்கள் தமிழீழ எல்லைகளுக்குள் அடங்குகின்றார்களா? என்பதைத் தெளிவாக முன்வையுங்கள்.

3. விடுதலைப் புலிகள் பற்றிய பனிமலரின் அணுகுமுறை பற்றி:-

பனிமலர் விடுதலைப் புலிகளுடனான ஐக்கியத்திற்கான அம்சம், போராட்டத்திற்கான அம்சம் இரண்டையும் கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் எதைத் தவறவிட்டாலும் அது மக்களது நலனுக்கு எதிராக அமைந்துவிடும் என்றும் முன்வைக்கின்றது. இனவாத அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறையை எதிர்த்த அவர்களது யுத்தத்தை ஆதரித்த வேளை அவர்களது ஜனநாயக விரோத பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தை நிகழ்த்துவதிலிருந்து பனிமலர் நழுவிக் கொள்ளும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. பனிமலர் முன்வைக்கின்ற தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு நிறுவுவதற்கான போராட்டப்பாதைக்கே பெரிதும் அச்சுறுத்தலாக புலிகளது பாசிசம் இருந்து வருகின்றது. எந்தவொரு புரட்சிகர, ஜனநாயக சக்திகளும் தமிழ்பகுதிகளில் நிலைகொள்ள முடியாமலிருப்பதற்கு முதன்மைக் காரணி புலிகளின் அழித்தொழிப்பே என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். புரட்சிகர ஜனநாயக சக்திகள் எதிர்கொள்ளும் இப்பாசிசத்திற்கெதிரான, காட்டுமிராண்டித்தன அழித்தொழிப்புகளுக்கெதிரான உங்களது ஜனநாயக விரோத எதிர்ப்புப் போராட்ட அம்சம் "பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல்" பாணியில் மென்மையான அணுகுமுறைப் பாணியில் இருப்பதே உண்மை. விடுதலைப் புலிகளது தோற்றம், பின்னணி, கடந்தகால செயற்பாடுகள் மீதான பார்வை, வர்க்கத் தன்மைகளை வெளிப்படுத்தாது ஐக்கிய நாடுகள் சபையை நம்பவேண்டாமெனவும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் புலிகளாக மாறும்படியும் கோரிக்கை விடுக்கின்றீர்கள். அவர்களோ மேற்கத்தைய நாடுகளின் நல்லெண்ணத்துடனான தீர்வுத் திட்டங்களைக் காவிச் செல்கின்றார்கள். மேற்குநாடுகளின் மத்தியஸ்த்தைக் கோருகின்றார்கள். உங்களது புலிகளது பாசிச எதிர்ப்பு போராட்டமல்ல. அப்பட்டமான சமரசம். முர்க்கத்தனத்திற்கு அஞ்சி அடிபணிதல்.

இதழ் 7 பனிமலர் ஊரிலும் உலகிலும் பகுதியில் 'கிட்டு' இனது மரணம் தொடர்பாக எழுதியதில் இந்திய மேலாதிக்கத்தைச் சாடியதுடன் மரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தியதுடனும் நிறுத்திக்கொண்டு விட்டீர்கள். மறந்தும் தமிழீழப் போராட்ட வரலாற்றில் கிட்டு ஆற்றிய பங்குகள், தளபதியாக இருந்த காலத்து ஜனநாயக விரோத நடவடிக்கைகள் பற்றி மறந்தும் குறிப்பிட விரும்பவில்லை. "மரணத்தின்பின் விமர்சிப்பது நாகரிகமல்ல" என்கின்ற அரசியல் சூதாடிகளின் உயர்மாண்பை வரித்துக்கொண்டீர்களோ தெரியவில்லை. அக்கட்டுரை ஒன்றே விடுதலைப் புலிகள் பற்றிய அணுகுமுறையில் உங்களது நேர்மையீனத்திற்கும் உறுதியின்மைக்கும் அளவுகோலாக விளங்க போதுமாக உள்ளது என்பதே எனது அபிப்பிராயம்.

*21-05-93*

## இலங்கை ஏற்றுமதிப் பதனீட்டு வலயத்தின் உழைப்பு நிலைமைகள்

ஏற்றுமதி பதனீட்டு வலயத்தின் தொழிலாளர்களுக்கு போதாக்குறைவான சம்பளம் வழங்குதல் இலங்கையின் ஏற்றுமதி பதனீட்டு வலயம் தொடர்பான அடிப்படைப் பிரச்சனைகளில் ஒன்றாகும். ஆகக் குறைந்த மாதச் சம்பளமாக ரூபாய் 1000 நிலவியபோதிலும் பெரும்பாலான தொழிலாளர்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சம்பளம் இத் தொகையைவிட ரூபாய் 150 குறைவாகும். பயிலுநிலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சனை மிகவும் கூர்மையானது. அவர்கள் ரூபாய் 700 க்குச் சற்றுக் கூடுதலான தொகையையே வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றனர். இச் சம்பளத்தில் ரூபா 100-125 வரை தங்குமிட வாடகையாகவும், சுமார் ரூபா 500 சாப்பாட்டுக்காகவும் செலவிடப்படுகிறது. அநேக தொழிலாளர்களுக்கு விசேடமாக பயிலுநிலைக் காலத்தில் மிஞ்சும் பணம் அவர்கள் பண்பான முறையில் உடுப்பதற்குக்கூட போதாததாகும். உண்மையிலேயே அநேக தொழிலாளர்கள் தமது பெற்றோர்களின் வீட்டிலிருந்து அரிசியையும் தேங்காயையும் கொண்டு வருகின்றனர். அவர்களது வறுமை குறித்து எந்தவொரு விளக்கவுரையும் அவசியம் இல்லை. ஊட்டச்சத்துக் குறைவால் பீடிக்கப் பட்டுள்ளனர். போடிங் ஹவுசில் இருக்கும்போது கந்தல் ஆடைகளையே அணிகின்றனர். தொழில் செய்யும் ஒரு பெண்ணின் சராசரி மதிய போசனம் 50 கிறாம் எடையுள்ள சோறும் 15 கிறாம் எடையுள்ள மரக்கறியுமாகும். சில சந்தர்ப்பங்களில் துருவிய தேங்காயிலான சம்பல் அல்லது மூன்று நான்கு நெத்தலி அல்லது சிறிய துண்டு கருவாடு மரக்கறியின் இடத்தைப் பெறுகிறது.

கடந்த சில வருட காலத்துள் உணவின் விலை வானளாவ உயர்ந்துள்ள காரணத்தினால் வெளியிலிருந்து தமது உணவைப் பெறும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயச் சுற்றாடலில் மதிய போசன முடிச்சு ஒன்று சுமார் 15 ரூபா ஆகும். அநேக தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவ்வாறான சமைக்கப்பட்ட உணவு அவர்களால் அடைய முடியாததொன்றாகும்.

*[நன்றி: பேராசிரியர் ரி.ஹெட்டி ஆராய்ச்சி; கட்டுநாயக்க ஏற்றுமதி பதனீட்டு வலயத்தின் உழைப்புப்படை முகாம் கொடுக்கும் சமூக பொருளாதார பிரச்சனைகள் பற்றிய அறிக்கை. வெளியீடு: இலங்கையில் ஜனநாயகத்திற்கான அமைப்பு(கனடா) மே. 1993]*

## குற்றவாளிக் கூண்டில் இந்திய அரசு (வழக்காடு மன்றம்)

குற்றச்சாட்டுக்கள்:

1. இந்திய அரசு இலங்கைத் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குகிறது.
2. இந்திய அரசு இந்திய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஒடுக்குகிறது.
3. இந்திய அரசு தென்னாசிய நாடுகளின்மீது தனது விஸ்தரிப்புவாதத்தைத் திணிக்கிறது.

குறிப்பு: இக்குற்றச்சாட்டுகளை எதிர்த்தும், ஆதரித்தும் வழக்காடவும், இவ்வழக்காடு மன்றத்திற்கு நீதியரசராக அமரவும் விரும்புவோர் பனிமலர் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

**மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.**

**நன்றி:** திசை, அலை, சரிநிகர், களத்தில், தமிழோசை, மீட்சி, சுவடுகள், சக்தி
Revolutionary Worker (USA), Sri Lanka Review ஆகியவற்றிற்கு பனிமலரின் நன்றி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4 ➡

நடவடிக்கைகளும் சிறிலங்கா அரசு, சிங்கள தேசிய இனத்தின் பரந்துபட்ட மக்களுக்கும் ஒடுக்கப்பட்ட தமிழீழ தேசிய இன மக்களுக்கும் இடையில் கட்டியெழுப்ப முயலும் இனவாத சுவரை இன்னும் இறுக்கமாக்கும் நிலைக்கே தள்ளியுள்ளது.

சிறிலங்கா பேரினவாத அரசுக்கு எதிராக ஒடுக்கப் படும் தமிழீழ தேசிய இனத்தின் பக்கம் நின்று போராடும் தேசிய சக்திகளில் ஒன்றானதும், ஒடுக்கு முறைக்கு எதிரான யுத்தத்தில் தனிப்பங்கைத் தொடர்ந்தும் வழங்கும் 'விடுதலைப் புலிகள் இயக்கம்' அதனது இராணுவ அரசியல் கொள்கைகளில், செயற்பாடுகளில் பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும் அரசுக்கெதிராக யுத்தத்தில் ஈடுபடும் ஒரு சக்தியாக இருக்கிறது என்பது புறநிலை உண்மை. தமிழ்த் தேசியத்தின் ஆதிக்கவர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இவ்வியக்கம் தனது மிதமிஞ்சிய தேசிய வெறியாலும், ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்திடம் இருந்து கிளம் புகின்ற இனவாதப் போக்கையும் கூட பிரதிநிதித்துவம் செய்கின்றது. இதன் விளைவு ஒடுக்கப்படுகின்ற சிறுபான்மை இன முஸ்லிம் மக்கள், ஒடுக்கும் பெருந் தேசிய இன பரந்துபட்ட சிங்கள மக்களின் மேல் தாக்குதலை நடத்துகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒடுக்கப்படும் தமிழ்தேசிய இனத்தின் ஒரே பிரதிநிதி தானாக இருக்கவேண்டும் என்ற ஆதிக்க அகங்காரத்தில் இருந்து தமிழீழ தேசியத்தின் பல்வேறுபட்ட வர்க்கங்களின் இன ஒடுக்குமுறைக்கு எதிரான மக்களின் போராடும் ஜனநாயக உரிமைகளை அடக்குகிறது. போராடும் சக்திகளை தடைசெய்து அழிக்கிறது. இவையெல்லாம் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளின் எதிரிகளுக்கும் ஒரு விதத்தில் பலம் சேர்க்கும் செய்கைகள் என்பதை உணரத் தவறுகிறது. சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக தமிழ் மக்கள் பக்கம்நின்று, போராடும் தமிழ் முதலாளி வர்க்கமும் அதை இன்று பிரதிநிதித்துவப்படுத்தும் விடுதலைப் புலிகள் இயக்கமும் பல பிற்போக்கு அம்சங்களுடன் காணப்படுவதனாலேயே, அதனது போராட்ட வழிமுறைகள் அனைத்து இன மக்களையும் அணிதிரட்டி பேரினவாத எதிர்ப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பு தமிழீழ புரட்சிகரப் போராட்டமாக அமையாமல், சிறிலங்கா அரசுடன் பேரம் பேசும் அதிகாரத்துக்கான ஒரு போராட்டமாகவே உள்ளது.

இது போன்றதொரு சூழ்நிலைமையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களது பாட்டாளி வர்க்கத்தின் பார்வை, தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக போராடும் புரட்சிகர தேசபக்த இயக்கத்தின் கடமை: பிரதான எதிரிகளான சிறிலங்கா சிங்களவாத அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக நிற்கும் அனைத்து வர்க்க சக்திகளையும் ஓர் அணிக்குள் நின்று போராட வழி செய்வதும், இதற்கு தடையாக இருக்கின்ற வர்க்க சக்திகள், அவர்கள் சிறிலங்கா அரசுக்கு எதிராக போராடிக் கொண்டிருந்தால் எக்காரணங்கொண்டும் அது சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் மேலான தாக்கு தல்களோ, சக போராட்ட சக்திகளை அழிப்பதை காரணம் காட்டியோ பிரதான எதிரியான சிறிலங்கா அரசுடன் அதனைச் சமப்படுத்திப் பார்த்து எதிரான வேலைகளில் ஈடுபடக்கூடாது. பதிலுக்கு விடுதலைப் புலிகளின் நட வடிக்கைகளை குறிப்பாக எடுத்து விமர்சனம் செய்வதும், கண்டிப்பதும் அதன் தாக்கங்கள் போராட்டத்தை எவ்வாறு பாதிக்கின்றது, பாதிக்கப்பட்ட மக்களை திசை விலகிச் செல்ல வைக்கிறது என்பதை தெளிவாகக் கூறவேண்டும்.

அடுத்து விடுதலைப் புலிகள் தான் இன்று யுத்தம் புரிகின்ற ஒரேயொரு சக்தி என்ற காரணத்தால் அவர்களது மிக மிக மோசமான, போராட்டத்தை திசை திருப்பி விடக் கூடிய, பலவீனப்படுத்துகின்ற நடவடிக்கைகள் எதுவானாலும் அதை விமர்சிப்பதும் கண்டிப்பதும் மக்களுக்கு எடுத்துச் சொல்வதும் சிறிலங்கா அரசுக்கு சாதகமாக அமைந்துவிடும் என்று பூச்சாண்டி காட்டுவதும் நடந்து கொண்டிருக்கிறது. முஸ்லிம் மக்களை வடக்குப் பகுதிகளிலிருந்து வெளி யேற்றுவதும், எல்லைப்புற சிங்களக் கிராமங்களில் படு கொலைகளை நடத்துவதும், தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இருக்கும் முற்போக்கு ஜனநாயக சக்திகளை அழிப்பதும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை போராட்டத்தை முன்கொண்டு செல்லுமா? இந்த பிற்போக்கு அம்சங்களை நாம் விமர்சிக்கின்றோமோ இல்லையோ இந்நடவடிக்கைகள் சிறிலங்கா சிங்களப் பேரினவாத அரசுக்கு ஒரு சாதகமான அம்சமேயாகும்.

ஆகவே நாம் தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டத்தில் உறுதியாக நின்று போராடிக் கொண்டு, விடுதலைப் புலிகளின் சிறிலங்கா அரசுக்கெதிரான போராட்டத்தை ஆதரித்து பிரதான எதிரிக்கெதிரான போரை கூர்மைப் படுத்த வேண்டும். அதனது போராட்டத்தை பலவீனப்படுத்தும் செய்கைகள், ஒடுக்கப்படும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தைக் குலைத்துவிடும் நடவடிக்கைகளை விமர்சித்து, கண்டித்து பிரதான எதிரியை எதிர்த்து சரியான பாதையில் நின்று போராடுமாறு கோர வேண்டும். இது விடுதலைப் புலிகளுக்கு புத்தி புகட்டுவதற்கு மட்டுமல்ல, சிறிலங்கா அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டத்தில் ஒடுக்கப்படும் அனைத்து இன மக்களின் ஐக்கியத்தையும், போராடும் சக்திகளையும் ஒன்றுபடுத்தி போராட்டத்தில் உள்ள சுயநலஆதிக்க, அதிகார வர்க்க, சமரச சக்திகளை போரட்டப் போக்கினூடே பெரும்பான்மை மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தவும், போராட்டத்தை முற்போக்கு புரட்சிகரப் பாதையில் வளர்த்து வெற்றி கொள்ளும் வழியாக உழைக்கும் மக்களின் தேசியப் போராட்டப் பாதை அமைய வேண்டும். அதுவேதான் நாம் செய்யவேண்டியதுமாகும்.

* தமிழ் முஸ்லிம் இன மக்களின் ஐக்கியத்தைப் பேணுவோம்!
* தமிழ் ஈழ தேசபக்த புரட்சிப் பாதையில் ஒன்றுபடுவோம்!
* முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் மீதான எல்லைப்புற படுகொலைகளை கண்டிப்போம்!
* சிறிலங்கா அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான சிங்கள மக்களின் புரட்சிகரப் போராட்டத்துடன் ஒன்றுபடுவோம்!

(நன்றி: தேசபக்தன், இதழ் 6, தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழக வெளியீடு.)

## அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களை இலங்கைக்கு அனுப்ப முத்தரப்பு ஒப்பந்தம்

சுவிற்சலாந்து, இலங்கை அரசாங்கங்களும் ஐ.நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதியும் அண் மையில் சுவிற்சலாந்தில் கூடி, சுவிற்சலாந்தில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட தமிழர்களை இலங்கைக்கு அனுப்பும் முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்றினை அங்கீகரித் துள்ளனர். அதன் பிரகாரம் முதற்கட்டமாக, 200 பேர்வரை இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளனர். மேலும் 1992 செப்டம்பர் முதலாம் திகதிக்குப்பின் வந்தவர்களும் திருப்பி அனுப்பப்படவுள்ளனர் என அறியப்படுகின்றது.

இலங்கை அரசு - மேற்கு நாடொன்று - ஐ.நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றிடையில், தமிழ் அகதிகள் தொடர்பிலான முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்நடவடிக்கையை முன்மாதிரியாகக்கொண்டு ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பின்பற்ற யோசித்துள்ளதாக அறியப்படுகிறது. மேலும், அண்மைக்காலத்தில் ஐ.நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தின் அகதிகள் சம்பந் தமான கொள்கைகள் மாற்றத்தின் விளைவும், இந்நட வடிக்கைக்கு ஒரு காரணம் எனவும் நாம் கருதுகிறோம்.

(நன்றி: மீட்சி- ஜூன்,1993)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரசிய ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சிக்குப் பிந்தைய இன்றைய சர்வதேசச் சூழ்நிலை

● சந்திரன்

கூட்டுச்சேரா இயக்கத்தின் பத்தாவது மாநாடு 1992 செப்டம்பர் முதல் வாரத்தில் இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்றது. உலக முதலாளித்துவ நெருக்கடி தீவிரமடையும் சூழலில் இந்த மாநாடு நடைபெற்றது. வளைகுடா யுத்தம் சோவியத் யூனியனின் சிதைவு ஆகிய இரு நிகழ்ச்சிப் போக்குகளுக்குப் பிறகு முதல்முறையாக நடைபெற்றதால் இது முக்கியத்துவம் பெற்றது.

சோவியத் யூனியனின் சிதைவுக்குப் பிறகுள்ள சர்வதேச சூழ்நிலையில் கூட்டுச்சேரா இயக்கம் என்ன பொதுத் திசை வழியை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிப்பது இந்த மாநாடு எதிர்கொண்ட பிரச்சனையாகும். இதைப் பரிசீலனை செய்வதுதான் இந்த மாநாட்டைப்பற்றி மதிப்பீடு செய்வதிலுள்ள மையமான பிரச்சனையாகும்.

இதையொட்டி சமரன் (டிசம்பர் 92 - ஜனவரி பெப்ரவரி 93) இதழில், **'கூட்டுச்சேரா இயக்கத்தின் 10 ஆவது மாநாடு, ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளது ஆளும் வர்க்கங்களின் செயலற்ற தன்மையைக் காட்டுகிறது' என்ற தலைப்பில்** ஒரு கட்டுரை வெளியானது. அதில் 1) இன்றைய சர்வதேச சூழ்நிலை 2) கூட்டுச்சேரா இயக்கத்தின் மீதான விமர்சனம் 3) இச்சூழலில் மக்கள் ஆற்றவேண்டிய பணி ஆகியவை பற்றி விளக்கப்பட்டிருந்தது. பனிமலரின் இடப்பற்றாக்குறை காரணமாக முழுமையாக மறுபிரசுரம் செய்ய இயலாமல் போனதற்கு வருந்துகிறோம். இக்கட்டுரையை முழுமையாகப் பெற விரும்புவோர் பனிமலர் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியர் குழு.

இருதுருவ அமைப்புக்கொண்ட உலக ஒழுங்கமைப்பு முடிவுக்கு வந்தபிறகு ஒரு புதியபாணியிலான உலக ஒழுங்கமைப்பு தோன்றவில்லை என்றாலும் உலகின் பிரதான சக்திகளின் வலிமையின் சமநிலையில் (பலாபலனில்) துரிதமாக மாற்றங்கள் நிகழ்கின்றன. அம்மாற்றங்களில் பின்வருவனவற்றைக் குறிப்பானதாகக் கூறலாம்.

1. ஏகாதிபத்தியத்தின் சமநிலையில் மாற்றம் இருப்பினும் அமெரிக்காவின் தலைமைப் பாத்திரம் தொடர்கிறது.

அமெரிக்காவின் தலைமையின் கீழுள்ள ஏகாதிபத்தியக் கூட்டணியைச் சேர்ந்த நாடுகளின் பொருளாதார வலிமையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்கா பலவீனமடைந்துள்ளது. மேற்கைரோப்பா, குறிப்பாக ஜெர்மனி, மற்றும் ஜப்பான் ஒப்பீட்டளவில் பொருளாதார ரீதியில் முன்னேறியுள்ளது. முதலாளித்துவ வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வான போக்கு என்ற விதி தொடர்ந்து செயல்படுவதை ஒட்டி இம் மாற்றம் நிகழ்ந்துள்ளது. 1960 இல் மொத்த அந்நிய முதலீடு சொத்து மதிப்பில் அமெரிக்காவின் பங்கு 47 சதவீதமாக இருந்தது. 1989 இல் 28 சதவீதமாகக் குறைந்து விட்டது. அதேசமயம் ஜப்பான், ஜெர்மனி ஆகிய இரண்டின் பங்கு 1960 இல் 1.6 சதவீதம் இருந்தது. 1989 இல் 20.6 சதவீதமாக உயர்ந்துவிட்டது.

இவ்வாறு இம்மூன்று ஏகாதிபத்திய சக்திகளின் வலிமையில் மாற்றங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவற்றிற்கிடையில் போட்டியும் வளரத் தொடங்கியது. உற்பத்தி மற்றும் மூலதனத்தின் ஒன்று குவிப்பு சர்வதேச மயமாவது ஒரு புதிய மட்டத்திற்கு உயர்ந்துவிட்டதன் விளைவாக அந்நிய நேரடி முதலீடு அதிகரித்துள்ளது. 1980 ஆம் ஆண்டுகளில் மட்டுமே அது மும்மடங்காக அதிகரித்தது. இந்த அந்நிய நேரடி முதலீட்டின் அதிகரிப்பு முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் விகிதம் குறைந்துகொண்டிருந்த சூழலில் நடைபெற்றது. ஏகாதிபத்திய நாடுகளின் மூலதனம் அதிக லாபத்திற்கான வாய்ப்பைத் தேடி அந்நிய நாடுகளுக்குச் சென்றன. இவ்வாறு ஏகாதிபத்திய நாடுகளுக்கும் ஏகபோக மூலதனக் கம்பெனிகளுக்கும் இடையில் போட்டி வளரத் தொடங்கியது. குறிப்பாக அமெரிக்க ஜப்பான் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் போட்டி தீவிரமடைந்தது.

1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஜப்பானுடைய நேரடி மூலதனம் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் குவிக்கப்பட்டது. கம்பியூட்டர் தொழில்துறையில் அமெரிக்கக் கம்பெனிகளின் போட்டியைச் சமாளிப்பதற்காக அவற்றிற்கு எதிராக ஐரோப்பியக் கம்பெனிகள் ஜப்பானியக் கம்பெனிகளின் ஒத்துழைப்பை நாடின. மற்றும் பிற மின்னணுக் கருவிகளின் (Semi Conductor) போன்ற துறையில் ஜப்பானியக் கம்பெனி




களின் போட்டியைச் சமாளிப்பதற்காக ஐரோப்பியக் கம்பெனிகள் அமெரிக்கக் கம்பெனிகளுடன் ஒத்துழைத்தன. இவ்வாறு ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோக கம்பெனிகளுக்கிடையில் ஒரு சிக்கலான போட்டி ஏற்பட்டது. ஏகாதிபத்திய நாடுகளின் அரசுகள் தங்கள் நாட்டு ஏகபோக முதலாளித்துவக் கம்பெனிகளின் நலன்களுக்கு சேவை செய்யும் பொருட்டு வர்த்தகக் காப்புக் கொள்கைகளை தீவிரமாக அமுல்படுத்தத் தொடங்கின. இந்தப் பின்னணியில்தான் ஏகாதிபத்திய நாடுகள் தனிவர்த்தக (பொருளாதார) தொகுதிகளை அமைக்கத் தொடங்கின. 1985 - இலிருந்து பிரதேச ரீதியான வர்த்தகத் தொகுதிகளை அமைக்கும் போக்கு உலகம் முழுவதும் பரவிற்று. ஐரோப்பியப் பொதுச்சந்தை, தென்கிழக்கு மற்றும் கிழக்கு நாடுகளின் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் (ஆசியப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பசுபிக் பிரதேசத்தொகுதி) மற்றும் வட அமெரிக்க சுதந்திர வர்த்தக மண்டலம் ஆகிய மூன்று தனி வர்த்தக தொகுதிகள் அமைக்கப்பட்டன. இவ்வாறு மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் (ஜெர்மனி, பிரிட்டன், பிரான்சு) ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்று ஏகாதிபத்திய சக்திகள் பொருளாதார ரீதியில் இப்பிரதேசங்களைத் தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு இந்த தனி வர்த்தக தொகுதிகளை அமைக்கின்றன. சோவியத் சமூக ஏகாதிபத் தியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்காவிற்கும் பிற ஏகா திபத்திய நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பு அதிக ரிக்கவில்லை. அவற்றிற்கு இடையிலான முரண்பாடுகள் வலுவடைகின்றன. GATT உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தையில் அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடை யேயுள்ள வேற்றுமையும், வர்த்தக பற்றாக்குறை மற்றும் அரிசி சந்தைப் பிரச்சனையில் அமெரிக்காவிற்கும், ஜப்பா னுக்குமிடையிலுள்ள வேற்றுமையும், இந்த நாடுகள் ஒன்று மற்றொன்றின்மீது வெளிப்படையாக குற்றம் சாட்டுவதற்கும் சிலசமயங்களில் வெளிப்படையான மோதல்களுக்கும் இட்டுச்செல்கின்றன. மேலும் முதலாளித்துவ நாடுகளின் மொத்த உற்பத்தி வீதம் ( G.D.P.) 1988 இல் 4.5 சதவீதமாக இருந்தது. 1989 இல் 3.3 சதவீதமாகவும், 1990 இல் 2.6 சத வீதமாகவும் குறைந்துகொண்டே வந்தது. இப்போதும் பொருளாதார மந்தநிலை அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் ஆரம்பமாகி பிற நாடுகளில் பரவி வருகிறது. அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றில் நிச்சயமற்ற நிலை காணப்படுவதன் விளைவாக பல நாடுகளில் பங்கு மார்க் கெட்டுகளில் வியாபாரம் விழுந்துவிட்டது. பிரான்சு, இத் தாலி முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் மந்தநிலை நிலவி வருகிறது. 'ஐரோப்பிய நாணயங்கள் பரிவர்த்தனை அமைப்பு', நிலைகுலைந்து விட்டது. ஐரோப்பியப் பண்டங்கள் மார்க்கெட்டில் வர்த்தகம் குறைந்துகொண்டே போகிறது. இவ்வாறு முதலாளித்துவ நாடுகளை பொருளாதார மந்த நிலை தாக்கியுள்ளது. இதன் விளைவாக அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் ஜப்பானுக்கும் இடையில் ஒரு வர்த்தகப் போர் நடந்து கொண்டிருக்கிறது.

ஒருபுறம் ஏகாதிபத்திய நாடுகள் தங்களுக்குள் போட்டி யிட்டுக்கொண்டிருந்த போதிலும் மறுபுறம் ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் விஷயத்தில் அவை ஒன்றுபடுகின்றன. அவை 'நவீன தலையீட்டுவாதத்தை' (Neo Interventioinsm) ஆதரிக் கின்றன. 'G-7' (ஏழு வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடு கள்- ஏகாதிபத்தியங்கள்) நாடுகளின் உச்சிக்கூட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுக்குள் கருத்தொற்றுமையை உருவாக்கிக்கொள்கின்றன. புதிய விதிகளை உருவாக்கிக் கொள்கின்றன. இவ்வாறு தங்களுக்குள் உருவாக்கிக்கொண்ட கருத்தொற்றுமையையும், உருவாக்கிய புதிய விதிகளையும் பிறநாடுகளின்மீது திணிக்கின்றன. அவை பிறநாடுகளின் உள்விவகாரங்களில் "மனிதநேயத்துடன் தலையிடுவதை" நியாயப்படுத்துவதற்காக, "மற்ற நாடுகளின் உள்விவகா ரங்களில் தலையிடக்கூடாது என்னும் கொள்கை காலத்திற்கு ஒவ்வாததாக ஆகிவிட்டது" என்றும், "மனித உரிமைகளுக்கு நாடு எல்லைகள் கிடையாது" என்றும் வாதிடுகின்றனர். உதவியைத் தருவதாகக் கடன்பெறும் நாடுகளின்மீது "பல கட்சிமுறை", "மனித உரிமைகள்", தனியார் மயமாக்குதல், சந்தைப் பொருளாதாரத்தைக் கடைப்பிடித்தல், இராணுவச் செலவுகளைக் குறைத்தல் ஆகிய நிபந்தனைகளை விதிக் கின்றன. இத்துடன் அவை உருவாக்கும் நிறுவனங்களில் சேரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்றன.



லொஸ்ஏஞ்ஜெல்ஸ் எரிகிறது

யுத்ததந்திரக் கொள்கைப் (இரா ணுவப் பாதுகாப்பு) பிரச்சனையிலும் அமெரிக்காவுக்கும் ஜெர்மனி, பிரான்சு மற்றும் ஜப்பான் ஆகியவற்றிற்கும் இடையில் கருத்து வேற்றுமைகளும் முரண்பாடுகளும் வளர்ந்து வருகின்றன.

அமெரிக்காவின் யுத்ததந்திரம் சோவியத் அச்சுறுத்தலுக்கெதிராக படைகளைக் குவிப்பது என்பதி லிருந்து பிரதேச மோதல்களைக் கையாள்வதற்கு படைகளைக் குவிப் பது என்பதற்கு மாறியிருக்கிறது. இந்த மாற்றத்திற்கு ஏற்ப, இப்போது அமெரிக்கா ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் உள்ள தனது படைபலத்தைக் குறைத்து வருகிறது. மத்திய கிழக்கில் தனது இராணுவ வலிமையை (படைபலத்தை) அதிகரித்து வருகிறது. அமெரிக்காவின் யுத்ததந்திரக் கொள்கையின் மிக முக்கியமான அம்சம் மேற்கு ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டணிக்கு அதன் தலைமை ஏற்பட வேண்டும் என்பதாகும்.

அமெரிக்காவின் மேலாதிக்கத்தின்கீழ் ஒற்றைத் துருவம் கொண்ட ஒரு உலக ஒழுங்கமைப்பு ஏற்படுவதை பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் ஏற்கவில்லை. அமெரிக் காவின் தலைமை என்பதற்கு மாறாக, அமெரிக்காவின் பங் காளிகள் என்ற நிலைக்கு மாறவேண்டும் என்பது அவற்றின் நோக்கமாக இருக்கின்றது. அமெரிக்காவிற்கும் பிரான்சுக் குமிடையில் யுத்த தந்திரம் மற்றும் அணு ஆயுதப் பிரச்ச னைகளில் கடுமையான கருத்து வேற்றுமைகள் உள்ளன. பிரான்சு தனது படைகள் சுயாட்சி பெற்றிருக்கவேண்டும் என வலியுறுத்துகிறது. மேற்கு ஐரோப்பா சுதந்திரமாக தனது அரசியல் விருப்பங்களை செயல்படுத்த வேண்டும் என்பது பிரான்சு மற்றும் ஜெர்மனியின் நோக்கமாக இருக் கிறது. அணு ஆயுதங்களைப் பெற்றிருப்பதற்கு பிரான்சு நியாய உரிமை கோருகிறது. பிரான்சின் யுத்த தந்திரம் சுயேச்சையானதாக விளங்குவதற்கும், கெடுபிடிப்போருக்குப் பிந்தைய காலத்தில் முன்னிலை வகிக்கும் நாடாக இருப்ப தற்கும் அணு ஆயுதங்களைப் பெற்றிருப்பது இன்றிய மையாதது என்று பிரான்சு கருதுகின்றது. ஆயுத உற்பத் தியில் அமெரிக்கக் கம்பெனிகளின் போட்டியைச் சமாளிப் பதற்காக பிரான்சு நாட்டின் ஆயுதங்கள் தயாரிக்கும் கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெனிகள் பிற ஐரோப்பியக் கம்பெனிகளுடன் கூட்டு ஏற் படுத்திக்கொள்ள முயல்கின்றன.

ருசியா மற்றும் சுதந்திர நாடுகளின் காமன்வெல்த் (CIS) ஆகிய இரண்டும் மென்மேலும் தற்காப்புத்தன்மை வாய்ந்த இராணுவ யுத்த தந்திரங்களை மேற்கொண்டு வருகின்றன. "பாதுகாப்பின்மீது மையப்படுத்தல்" என்ற தனது பழைய இராணுவ யுத்த தந்திரத்துக்கு மாறாக, ஜப்பான் இப்போது தனது படைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பத் தொடங் கியிருக்கிறது.

இவ்வாறு அமெரிக்காவின் இராணுவ யுத்த தந்திரக் கொள்கையுடன் பிரான்சு, ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகியன முரண்பட்டிருப்பினும், NATO வின் யுத்ததந்திரக் கொள்கை இன்னும் அடிப்படையில் அமெரிக்காவின் யுத்ததந்திரக் கொள்கைகளுடன் ஒத்துப்போவதாகவே இருக்கி றது. NATO வின் யுத்ததந்திரம் "விவாதம், ஒத்துழைப்பு மற்றும் கூட்டுப்பாதுகாப்பு" என்ற மூன்று அம்சங்களுக்கு அழுத்தம் தருகிறது. இதன் மூலம் யுத்ததந்திரப் பிரச்சனையில் ஏற்படும் கருத்து வேற்றுமைகளை அவை சரி செய்து கொள்கின்றன. பிரதேச மோதல் களைக் கையாள்வதற்கு படைகளைத் திருப்ப வேண்டும் என்ற யுத்ததந்திரக் கொள்கையில் அவற்றிற்கிடையில் கருத்தொற்றுமை இருக்கிறது.

தொகுத்துக் கூறுவோமானால், அமெரிக்காவின் பொருளாதார வலிமை ஒப்பீட்டளவில் குறைந் துள்ளபோது, ஐரோப்பியப் பொதுச் சந்தை நாடுகளிடம் வலிமை – குறிப் பாக ஜெர்மனியின் வலிமையும், ஜப்பானின் பொருளாதார வலிமையும் அதிகரித்துள்ளன. பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்துள்ள ஐரோப்பியப் பொதுச்சந்தையைச் சேர்ந்த ஜெர்மனியும், பிரான்சும் மற்றும் ஜப்பானும் அவற்றின் வலிமைக்கேற்றவாறு உலகை மறுபங்கீடு செய்யவேண்டும் என்ற விருப்பத்துடன் தமது இராணுவ வலிமையை அதிகரித்துக்கொள்வதில் ஈடுபட்டுள்ளன. ஆகையால் ஒரு புதிய ஒழுங்கமைப்பு உருவாகவில்லை. அமெரிக்காவுக்கு எதிரான ஒரு யுத்ததந்திர ரீதியிலான ஏகாதிபத்தியக் கூட் டணியும் உருவாகவில்லை.

நிலைமைகள் இவ்வாறிருப்பினும் அமெரிக்கா இன்னும் தனது தலைமைப் பாத்திரத்தைத் தக்கவைத்துக் கொண்டிருப்பதை பின்வரும் தகவலிலிருந்து காணலாம். அண்மையில் சர்வதேச செலவாணி நிதியம் (IMF) தனது உறுப்புநாடுகள் வகிக்கும் அந்தஸ்தை (இடத்தை) அந்த நாடுகளின் தற்போதுள்ள வலிமைக்கு ஏற்றவாறு மாற்றி யமைத்திருக்கிறது. புதிய ஏற்பாட்டின்படியும், அமெரிக்கா தனது முதலாவதிடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் அமெரிக்கா மட்டும்தான் முக்கியமான பிரச்சனைகளில் ரத்துச் செய்யும் அதிகாரத்தை (Veto power) பெற்றிருக்கிறது. அமெரிக்கா தனது தலைமையை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருப்பதை இது தெளிவாகக் காட்டுகின்றது. சர்வ தேச செலவாணி நிதியத்தில் (IMF) ஒரு நாட்டிற்கு அளிக் கப்படும் பங்குகளின் (QUOTA) சதவீதமும், அத்துடன் இணைந்துள்ள அந்த நாட்டின் வாக்குகளின் எண்ணிக்கையும் அந்த நாட்டின் பொருளாதார வலிமையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வலிமை அந்த நாட்டின் (GDP) மொத்த பொருளாதார உற்பத்தி, அந்நாட்டின் அந்நிய வர்த்தகம் உட்பட பல கார ணங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டின்படி அமெரிக்கா 18.45 சதவீதம் பங்குகளையும், பிரிட்டன் 6.38 சதவீதம் பங்குகளையும், ஜெர்மனி 5.5 சதவீதம் பங்குகளையும், ஜப்பான் 4.35 சதவீதம் பங்குகளையும் பெற்றிருந்தன. இப்போது புதிய ஏற்பாட்டின்படி அமெரிக்கா 17.66 சதவீதம் பங்குகளையும், ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய இரண்டு நாடுகள் ஒவ்வொன்றும் 5.50 சதவீத பங்குகளையும் பிரிட்டன் மற்றும் பிரான்சு ஆகிய இரண்டு நாடுகள் ஒவ்வொன்றும் 4.95 சத வீதம் பங்குகளையும் பெற்றுள்ளன. தற்போது செய்யப்பட்டுள்ள மாற்றத்துக்கு முன்னர், பழைய ஏற்பாட்டின்படி அமெரிக்கா முதலாவதி டத்தையும், பிரிட்டன் இரண்டாவதிடத்தையும் வகித்து வந் தன. இப்போது புதிய ஏற்பாட்டின்படியும் அமெரிக்கா தனது முதலாவதிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. முக்கியமான பிரச்சனைகளில் ரத்துச் செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தும் உரிமையை பெற்றுள்ள ஒரே நாடு அமெ ரிக்காதான். எனவே ஏகாதிபத்திய நாடுக ளின் வலிமையில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் அமெரிக்காவின் தலைமைப் பாத்திரம் தொடர்வதைக் காணலாம்.



சோமாலியாவில் ஐ.நா.வின் அக்கிரமம்

## 2. சோவியத் யூனியனின் வீழ்ச்சியும் ருசியாவின் புதிய முயற்சியும்.

சோவியத் யூனியனின் சிதைவுக்குப் பிறகு, அதன் அங் கங்களாக இருந்த நாடுகள் சுதந்திர நாடுகளின் காமன்வெல்த் (CIS) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. இருப்பினும் ஐ.நா.பாதுகாப்பு குழுவில் முன்னாள் சோவியத் யூனியன் வகித்துவந்த இடத்தை இப்போது ருசியா வகிக்கிறது. மேற்கு ஏகாதிபத்திய நாடுகளுடன் ஒருமைப்பாட்டை அடைவதன் மூலம் ருசியா மீண்டும் ஒரு வல்லரசாக வேண் டும் என விரும்புகிறது. இதுவே அதன் அயலுறவுக் கொள் கையின் குறிக்கோளாக அமைந்திருக்கிறது. ஆகையால் அது மேற்கு ஏகாதிபத்திய அரசுகளுடன் ஒத்துழைக்கிறது. அது தொடர்ந்து மேற்கு ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஆதர வான ஒரு இராஜதந்திரக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமானால், அதற்கு மேற்கு ஏகாதிபத்திய அரசுகள் ஆதரவு தரவேண்டி இருக்கிறது. அரசியல் துறையில் பல கட்சியாட்சி முறைக்கும், பொருளாதாரத் துறையில் சந் தைப் பொருளாதாரம் மற்றும் தனியார்மயமாக்குதலுக்கும் மாறிச் செல்வதற்கு ருசியா எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு மேற்கு ஏகாதிபத்திய நாடுகளின் அரசுகள் முழுமையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதரவு தருகின்றன. ருசியாவிலும், சுதந்திரநாடுகளின் காமன்வெல்த்திலும் (C.I.S.) மார்க்சிய லெனினிய சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் மீண்டும் ஒரு கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்டியமைக்கத் தொடங்கியிருக் கிறார்கள். இருப்பினும் அங்கே ஒரு பாட்டாளிவர்க்க, சோசலிசப் புரட்சி உடனடியாக வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் ருசிய ஒரு சார்புநிலை நாடாக மாறிவிடுமா? அல்லது அது ஒரு சுதந்திரமான முதலாளித்துவ வல்லரசாக வருமா? என்பது பெருமளவு மேற்கு ஏகா திபத்திய நாடுகள் அதற்குத் தரும் உதவியைப் பொறுத்தே இருக்கிறது. மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் ருசியா வலிமை பெற்று ஒரு வல்லரசாக வருவதை விரும்பவில்லை.

ஒரு நவீன இராணுவத்தைப் பராமரிப்பது மீண்டும் ஒரு வல்லரசு அந்தஸ்தை அடைவதற்கான ஒரு உத்திரவாதம் என ருசியா கருதுகிறது. ஆனால் மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் ருசியாவை இராணுவத்துறையில் ஒரு பலமான எதிரியாகக் கருதுகின்றன. 1994 - 1999 ஆண்டுகளுக்கான 'பாதுகாப்புத்துறை வழிகாட்டிக் குறிப்பு' என்ற ஆவணத்தில், அமெரிக்கப் பாதுகாப்புத்துறை ருசியாவின் இராணுவம் வலிமை பெறுவதைத் தடுத்து நிறுத்துவது தனது யுத்ததந் திரமாகும் என வெளிப்படையாகவே கூறப்பட்டிருக்கிறது. பல்வேறு இராணுவ ஒத்துழைப்புத் திட்டங்களின் மூலம் மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் ருசியாவின் படைகளை மாற்றியமைப்பதற்கும் (படைபலத்தைக் குறைப்பதற்கும்) ருசியாவின் இராணுவத் தொழில்களைக் கலைத்து விடுவதற்கும் முயற்சி செய்கிறார்கள். மேலும் ருசியாவின் படைகளை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் முயற்சி செய்கிறார்கள். அமெரிக்காவும், ஜெர்மனியும் ருசியாவின் விண்வெளித் தொழில்நுட்ப நிபுணர்களை கொழுத்த சம்பளத்தைக் கொடுத்து விலைக்கு வாங்கவும் கவர்ந்திழுக்கவும் முயற்சி செய்கின்றன. அதேசமயம் ருசியாவின் விண்வெளி தொழில் நுட்பத்தை விலைக்கு வாங்குவதில் அமெரிக்கா எச்சரிக்கையாக இருக்கிறது. ஏனெனில் அதைக்கொண்டு ருசியா தனது ஆயுதப் படைகளை நவீனமயமாக்கிவிடுமென அது அஞ்சுகிறது. ருசியா சுதந்திர நாடுகளின் காமன்வெல்த்தை தனது ஆதிக்கத்துள் வைத்துக்கொள்ள விரும்புகிறது. ஆனால் சுதந்திர நாடுகளின் காமன்வெல்த்தில் கலகங்கள் ஏற்பட்டால் தடுத்து நிறுத்தும் பாத்திரத்தை மாத்திரமே ருசியா ஆற்றவேண்டுமென மேற்கு நாடுகள் கருதுகின்றன. சுதந்திர நாடுகளின் காமன்வெல்த்தின் அதிகார மையமாக ருசியா ஆகிவிடுவதை அவை விரும்பவில்லை. ருசியா வருங்காலத்தில் ஒரு வலிமைமிக்க நாடாக வருவதைத் தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் அவை சுதந்திர நாடுகளின் காமன்வெல்த்தைச் சேர்ந்த பெரிய நாடுகளுடன் தொடர்புகள் வைத்திருக்கின்றன. ஆயுதங்களை விற்பனை செய்வதன் மூலம் லாபம் பெறுவதற்காகத் தனது நாட்டின் ஆயுதங்களைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்யும் என ருசியா தெளிவாகக் கூறிவிட்டது. தனது வழக்கமான சந்தைகளிலல்லாமல், அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத் திய நாடுகள் ஆயுதம் விற்பனை செய்யும் மூன்றாவது உலக நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய ருசியா முயற்சி செய்கிறது. இவ்விஷயத்தில் ஏற்கனவே ருசியாவுக்கும் அமெரிக்கா வுக்குமிடையே வேறுபாடுகள் ஏற்படத் தொடங்கிவிட்டன. இந்தியாவுக்கு ருசியா ஏவுகணை தொழிட்நுட்பத்தை விற்பனை செய்வதற்கு தடைவிதித்திருப்பது இதற்கோர் உதாரணமாகும்.

எனினும், உடனடி எதிர்காலத்தில் ருசியாவிற்கும் மேற்கு ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஒத்துழைப்பே பிரதான அம்சமாக இருக்கும். இப்போது ருசியா மேற்கு ஏகாதிபத்திய நாடுகளுக்குச் சவாலாக இல்லை. ஆனால் நீண்டகால கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, அதன் உள்நாட்டு நிலைமைகளைப் பொறுத்தும் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் கூர்மையடைந்து அவற்றை அது பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்களைப் பொறுத்தும் ருசியா மீண்டும் ஒரு வல்லரசாக வருவது இருக்கிறது. அத்தகைய சூழ்நிலை ஏற்படுமானால் ருசியாவிற்கும் மேற்கு ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இடையிலுள்ள உறவுகள் மாறலாம்.

### 3. சீனா ஏகாதிபத்தியங்களுடன் சமரசப் பாதையைப் பின்பற்றுகிறது.

சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் அச்சுறுதலுக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் இணைந்து போராடுவது என்று சொல்லி சீனா அமெரிக்காவுடன் கொண்டிருந்த யுத்ததந்திர ரீதியான உறவு, சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. இப்போது 'நவீனமயமாக்குவது மூலம்' சீனாவை ஒரு வலிமைமிக்க முதலாளித்துவ நாடாக கட்டிய மைப்பதற்கு டெங் கும்பல் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. இந்த நோக்கத்திற்காக அது ஏகாதிபத்திய நாடு களிடமிருந்து மூலதனம் இறக்குமதி செய்யப்படுவதை சார்ந் திருக்கிறது. தற்போது சீனாவில் அந்நிய மூலதனத்துடன் நடத்தப்படும் 17,000 தொழில்நிறுவனங்கள் இருக்கின்றன. ஏற்கனவே 23 பில்லியன் டொலர்கள் அந்நிய முதலீடு செய் யப்பட்டுள்ளன. அந்நிய ஏகபோக முதலாளித்துவ மூலத னத்தையும், பன்னாட்டுக் கம்பெனிகளையும், அவற்றிடமிருந்து பெறும் உதவிகளையும் சார்ந்த சீன ஆளும் கும்பல் முத லாளித்துவ வளர்ச்சிக்குத் திட்டமிடுவதால், அமெரிக்கா, மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் ஜப்பான் ஆகிய நாடு களின் அரசுகளுடன் அது சமரசம் செய்து கொள்ளும் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது.

ஏகாதிபத்தியம் மற்றும் நவகாலனிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு மாறாக ஏகாதிபத்திய நாடுகளிட மிருந்து அதிகமான 'உதவியை'ப் பெறுவதற்காகவும், அந் நிய முதலீடு செய்வதை அதிகரிப்பதற்காகவும் ஏகாதிபத்திய நாடுகளிற்கிடையிலுள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் கொள்கையை சீன ஆளும் கும்பல் கடைப்பிடித்து வருகிறது. இக்கொள்கையை பிற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் போதித்து வருகிறது. ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் நிரந்தர உறுப்பினர் என்ற முறையில், ஏகாதிபத்திய நாடுகளின் அரசுகள் ஐ.நா.வை தமது கருவியாக பயன்படுத்திக்கொள்வதற்கு சீன அரசு துணை போகிறது.

### 4. சர்வதேச நிறுவனங்களின் ஆதிக்கம்.

இரண்டாம் உலகப் போரிற்குப் பிறகு, ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளின் நவகாலனித்துவ சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் ஏகபோக முதலாளித்துவ தொழில் நிறுவனங்கள் (நாடு கடந்த தொழில் கழகங்கள் (TNC), பன்னாட்டு தொழில் கழகங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் (MNC), மிக முக்கியமான பாத்திரத்தை ஆற்றி வருகின்றன). நவீன தொழில்நுட்பத்தையும், நவீன நிர்வாக முறைகளையும் பயன்படுத்திக்கொண்டு அவை இந்நாடுகளின் பொருளாதார உச்சிநிலையைக் கைப்பற்றிக்கொண்டன. மூலதனத்தையும் உற்பத்தியையும் சர்வதேசமயமாக்குவதிலும், சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட தாராளமயமாக்குவதிலும் அவை அதிமுக்கியமான பாத்திரத்தை ஆற்றுகின்றன.

ஏகபோக முதலாளித்துவக் கம்பெனிகள் (TNC,MNC) இந்நாடுகளின் பொருளாதாரத்தில் ஊடுருவுவதற்கும், விரிவு படுத்திக்கொள்வதற்கும், ஆதிக்கநிலை பெறுவதற்கும் வகைசெய்யும் பொருட்டு 1980 ஆம் ஆண்டுகளில் சர்வதேச செலவாணி நிதியம் (IMF), உலக வங்கி, மற்றும் வர்த்தகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காப்பு வரிகள் பற்றி பொது உடன்பாடு (GATT) ஆகியன அந்நிய முதலீடுகளுக்குத் தடைகளை அகற்றுதல், சந்தைப் பொருளாதாரத்தைக் கடைப்பிடித்தல், அரசுடமை அதிகாரவர்க்க முதலாளித்துவத் தொழில், நிதி மற்றும் சேவைத்துறைத் தொழில் நிறுவனங்களைத் தனியார் மயமாக்குதல், ஏற்றுமதி செய்வதற்கான உற்பத்திக்கு முன்னுரிமை அளித்தல், பொதுச்செலவுகளைக் குறைத்தல், இராணுவச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் பிற நிபந்தனைகளை விதித்தன.

## மூன்றாம் உலக நாடுகளின் அந்நியக் கூட்டுகளில் மாற்றம்

மூன்றாம் உலக நாடுகளின்மீது ஏகாதிபத்தியத்தின் நிபந்தனைகள்.

மூன்றாம் உலக நாடுகளில் நவகாலனித்துவ ஆதிக்கத்தைப் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள், அரசியல், இராணுவம், இராஜதந்திரம் மற்றும் பண்பாடு தழுவிய அனைத்துத் துறைகளிலும் பின்வரும் கொள்கைகளை வகுத்து அவற்றை அமுல்படுத்தின:

1. ஒடுக்கப்பட்ட நாடுகள் குறிப்பாக மூன்றாவது உலக நாடுகள் தங்களின் ஆட்சி உரிமையை (இறையாண்மையை) கைவிட்டு, சர்வதேச செலவாண நிதியம், உலகவங்கி மற்றும் GATT (அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோக முதலாளித்துவ நிறுவனங்களின்) ஆகியவற்றின் சொற்படி, தங்கள் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். தன்னிறைவு அடைவதை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத் திட்டமிடுதல்களைக் கைவிட வேண்டும்.


தென்கொரியா

2. இந்நாடுகளில் சட்டத்தின் ஆட்சியிலிருந்து விடுபட்ட சுதந்திரமான பிரதேசங்களை அந்நிய ஏகபோக முதலாளித்துவ நிறுவனங்களுக்கு வழங்கிவிட வேண்டும்.

3. அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளும் அவற்றின் ஏகபோக முதலாளித்துவ நிறுவனங்களும் உருவாக்கும் சர்வதேச ஒழுங்கமைப்பு மற்றும் சட்டதிட்டங்களை இந்த நாடுகள் ஏற்று அவற்றை அமுல்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அவற்றின்மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கவோ, முற்றுகையிடவோ அல்லது இராணுவ நடவடிக்கைகள் எடுக்க உரிமை உண்டு.

4. இந்நாடுகள் பிரதேச அல்லது உலக பாதுகாப்பையும் ஸ்திரதன்மையையும் குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்று கருதினால் அவற்றிற்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் எடுக்கவோ உரிமை உண்டு.

5. இந்நாடுகள், ஏகாதிபத்திய நாடுகள் குறிப்பாக அமெரிக்க வல்லரசு அனுமதிக்காத ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் தொழில் நுட்பத்தையும் வைத்துக்கொள்ளக் கூடாது.

6. ஒடுக்கப்பட்ட நாடுகள், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் எத்தகைய ஆயுதங்களையும் இராணுவத் தளவாடங்களையும் வைத்துக்கொள்ளலாம், எந்தளவுக்கு வைத்துக் கொள்ளலாம் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அவற்றிற்கு உண்டு.

இந்நாடுகளுக்குக் கடன் தருவதற்கு மேற்கூறப்பட்டவற்றை நிபந்தனைகளாக அவை விதிக்கின்றன.

ஒடுக்கப்பட்ட நாடுகளின்மீது, குறிப்பாக மூன்றாம் உலகநாடுகளின்மீது நவகாலனித்துவ ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கும், மூலதனமும் உற்பத்தியும் சர்வதேச மயமாவதில் புதிய கட்டத்தை அடைந்ததற்கு ஏற்ப, சுரண்டலைத் தீவிரப் படுத்துவதற்கும் வகை செய்யும் பொருட்டே அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள் மேற்கூறப்பட்ட உலக ஒழுங்கமைப்பை நிறுவுவதற்கு முயன்று வருகின்றன. தற்போது ஐரோப்பியப் பொதுச்சந்தையைச் சேர்ந்த ஏகாதிபத்திய நாடுகள் குறிப்பாக ஜெர்மனியும், பிரான்சும் மற்றும் ஜப்பானும் அமெரிக்காவின் தலைமையை (மேலாதிக்கத்தை) ஏற்க மறுத்தாலும் ஒடுக்கப்பட்ட நாடுகள்மீது குறிப்பாக மூன்றாம் உலகநாடுகள்மீது இந்த புதிய உலகமைப்பைத் திணிப்பதற்கு அமெரிக்காவுடன் ஒன்றுபடுகின்றன.

## மூன்றாம்உலக நாடுகளின் ஆளும் வர்க்கங்களின் தரகுவேலை.

இருப்பினும், இந்த நிபந்தனைகளில் பலவற்றை மூன்றாம் உலகநாடுகளின் அரசுகளும், ஆளும் வர்க்கங்களும் ஏற்று அமுல்படுத்தி வருகின்றனர். அவை பின்பற்றி வந்த, 'இறக்குமதிக்கு மாற்றாக உள்நாட்டில் உற்பத்தி செய்தல்' (Import substitute strategy), என்ற யுத்ததந்திரத்தைக் கைவிட்டு விட்டு, ஏற்றுமதி செய்வதற்கான உற்பத்திக்கு முன்னுரிமை அளித்தல், என்ற யுத்ததந்திரத்தை ஏற்றுக் கொண்டன. தங் கள் நாட்டின் பொருளாதாரத்தை அந்நிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏகபோக முதலாளித்துவத் தொழில் நிறுவனங்களுக்குத் திறந்துவிட்டன. இதன் விளைவாக இந் நாடுகளில் தரகு முதலாளித்துவம் வலுவடைந்தன.

இந்நாடுகளின் அரசியல் பொருளாதாரத் துறைகளில் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கமும் மேலும் வலுவடைந்தன. சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகளிலும்கூட அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளின் செல்வாக்கு அதிகரித்தது. இவற்றில் பல நாடுகள் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலிருந்து அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளின் மேலாதிக்கத்திற்குள் சென்றுவிட்டன. மேலும் 1970 வது 1980 ஆவது ஆண்டுகளில் மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள், ஏற்றுமதி செய்வதற்கான உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கையை அமுல்படுத்தியதின் விளைவாக இந்நாடுகள், ஏகாதிபத்திய நாடுகள் உருவாக்கும் தனிவர்த்தகத் தொகுதிகளில் சேர்ந்துவிடுவதற்கான நிலைமைகள் ஏற்பட்டுள்ளது.

## ஏகாதிபத்தியங்களின் வர்த்தகத் தொகுதிகள்.

1980 ஆவது ஆண்டுகளின், இடைக்காலத்திலிருந்து ஐரோப்பியப் பொருளாதார சமுதாயம், அமெரிக்கா, மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று ஏகாதிபத்திய சக்திகளும் தனி வர்த்தக (பொருளாதார) தொகுதிகளை அமைத்து வருகின்றன.

மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன் உள்பட 12 நாடுகளைக்கொண்ட ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கம் (European Free Trade Association) உரு வாகியுள்ளது. அதற்குப் போட்டியாக அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோவையும் தனது பங்காளிகளாகச் சேர்த்துக் கொண்டு வட அமெரிக்க சுதந்திரவர்க்க உடன்பாடு (North American FreeTrade Agreement)என்ற ஒரு தனி வர்த்தக (பொருளாதார) தொகுதியை உருவாக்குகிறது. இரண்டு அமெரிக்கக் கண்டங்களும் இந்த வர்த்தகத் தொகுதியில் அடங்கும். ஜப்பானும் தனக்குச் சொந்தமாக ஆசிய - பசுபிக் மண்டத்தில் ஒரு வர்த்தகத் தொகுதியை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறது. புதிதாகத் தொழில்மயமாகி இருக்கும் தென்கொரியா, சிங்கப்பூர், ஹாங்காங், தாய்வான் ஆகிய நாடுகளும்; தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா ஆகிய நாடுகளும்; சீனா, இந்தோசீனா, ஆஸ்திரேலியா, நியுசிலாந்து ஆகியனவும் ஜப்பான் அமைக்கவிருக்கும் வர்த்தகத் தொகுதியில் அடங்கும். இந்தியா மற்றும் வியட்நாமையும், தனது வர்த்தகத் தொகுதிக்குள் கொண்டுவருவதற்கு ஜப்பான் முயற்சி செய்கிறது.

அமெரிக்காவும் தனது தலைமையின்கீழ், அமெரிக்கா - ஜப்பான் கூட்டை மைய அச்சாகக் கொண்டு பல்வேறு நாடுகளுடன் இருதரப்பு உறவுகளின் அடிப்படையில் ஆசிய - பசுபிக் சமுதாயத்தை உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறது. அமெரிக்காவின் இந்தத் திட்டத்தை ஜப்பான் ஏற்குமா என்பது ஒரு பிரச்சனையாகும். உலகை பொருளாதார ரீதியில் பங்கீடு செய்துகொள்ளும் பொருட்டு, இவ்வாறு மூன்று ஏகாதிபத்திய சக்திகளும் தனித்தனியான வர்த்தகத் தொகுதிகளை உருவாக்கும் முயற்சிகள், ஒடுக்கப்பட்ட நாடுகளைக் குறிப்பாக ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளை வெவ்வேறு ஏகாதிபத்திய அணியில் சேர வேண்டிய நிலைமைக்கு இட்டுச் செல்லும்.

## சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியும் ஒடுக்கப்பட்ட நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களும்.

1980 ஆவது ஆண்டுகளின் இடைக்காலப் பகுதியில் சோவியத் யூனியனில் கோர்பசேவ் கும்பல் ஆட்சிக்கு வந்தது. அது அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூடிக் குலாவத் தொடங்கியது. சோவியத் சமூக ஏகாதிபத்தியம் அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்திய நாடுகளுடன் சேர்ந்து ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா, எத்தியோப்பியா, மேற்கு ஆசியா, எல் சல்வடோர் ஆகியவற்றிற்கான ஒரு 'அமைதி'த் திட்டத்தை உருவாக்குவதில் ஈடுபட்டது. இதன் விளைவாக இந்நாடுகளில்



பெருவிய சர்வாதிகாரி பிஜிமோரி

அதன் மேலாதிக்கம் முடிவுக்கு வந்தது. மேற்கு ஏகாதிபத்திய நாடுகளின் ஒத்துழைப்புடன் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலிருந்து வெளியேறிவிட்டன. கியூபாவுக்கு அளித்து வந்த 'உதவியை' சோவியத் யூனியன் நிறுத்திக் கொண்டது. மங்கோலியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் மீதிருந்த சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கம் அதன் வீழ்ச்சியுடன் முடிவுக்கு வந்தது. ஈராக்கின் மீது அமெரிக்காவின் தலைமையில் மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் கூட்டாகத் தொடுத்த தாக்குதலுக்கு சோவியத் யூனியன் துணை போனது. அதன் மூலம் சோவியத் யூனியன் அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்தியக் கூட்டணியின் ஒரு அங்கமாக மாறிவிட்டது. எத்தியோப்பியா, அங்கோலா மற்றும் மொசாம்பிக் ஆகியவற்றின் மீதிருந்த சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கமும் தகர்ந்து விட்டது. சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியுடன் இந்தியாவின் மீதிருந்த அதன் மேலாதிக்கமும் முடிவுக்கு வந்தது. சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த நாடுகளை தனது ஆதிக்கத்திற்குள் கொண்டுவருவதற்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளும் (குறிப்பாக ஜெர்மனியும் பிரான்சும்) மற்றும் ஜப்பானும் போட்டியிட்டுக்கொண்டிருக்கின்றன. அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த சில நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் அதன் இடத்தை நிரப்புவதற்காக வேறு ஏகாதிபத்திய அரசுகளை நாடிச் செல்கின்றன. இக்காரணத்தால் இந்நாடுகளின் அரசுகளே தமது அந்நிய நாடுகளுடனான கூட்டில் மாற்றம் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்திய நாடுகளின் அரசுகளின் யுத்ததந்திர ரீதியிலான அந்நிய நாடுகளுடன் கூட்டு இன்னும் நிச்சயமற்ற நிலையில் இருப்பதால், ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பல நாடுகளின் அரசுகளின் யுத்ததந்திர ரீதியிலான அந்நிய நாடுகளுடன் கூட்டும் நிச்சயமற்ற நிலையில்தான் இருக்கிறது.

உலக மேலாதிக்கத்திற்காகப் போட்டியிட்டுக் கொண்டிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரு மேல்நிலை வல்லரசுகளின் தலைமையிலான இரு ஏகாதிபத்திய கூட்டணிகளில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் அணி வீழ்ச்சியடைந்து விட்டது. இன்று சர்வதேச அரசியல் அரங்கில் பிரதான சக்திகளின் சமநிலையில் (பலாபலத்தில்) மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் தலைமையை (மேலாதிக்கத்தை) ஜெர்மன், பிரான்சு மற்றும் ஜப்பான் ஆகிய ஏகாதிபத்திய அரசுகள் ஏற்க மறுக்கின்றன. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான மறு அணி சேர்க்கையும் யுத்ததந்திர ரீதியிலான ஏகாதிபத்தியக் கூட்டணிகள் புதிதாக உருவாகும் சூழ்நிலைமையையும் உலகம் எதிர் கொண்டிருக்கிறது. ஆகையால் இன்று மாறும் நிலையில் உள்ள ஒரு கட்டத்தை கடந்து சென்று கொண்டிருக்கிறது.

## இக்காலப்பகுதியின் குணாம்சங்கள்

இக்காலப்பகுதியின் குணாம்சங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்:

1. அமெரிக்கா பொருளாதார ரீதியில் பலவீனமடைந்திருக்கும் அதேவேளையில் ஐரோப்பியச் சந்தையைச் சேர்ந்த ஏகாதிபத்திய நாடுகள், குறிப்பாக ஜெர்மனியும், பிரான்சும், மற்றும் ஜப்பானும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. இருப்பினும் அமெரிக்கா தனது தலைமைப் பாத்திரத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. உலகை மறுபங்கீடு செய்துகொள்வதற்கான போராட்டத்திற்கு ஜெர்மன், பிரான்சு மற்றும் ஜப்பான் ஆகிய ஏகாதிபத்திய நாடுகள் இன்னும் இராணுவ வலிமையை அதிகரித்துக்கொள்ள வேண்டிய நிலைமையில்தான் உள்ளது. ஆகையால் சிறிது காலத்திற்கு ஏகாதிபத்திய நாடுகள் ‘அமைதி’ வழியில் உலகை (பொருளாதார ரீதியில்) மறுபங்கீடு செய்து கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடும்.



ஈழம்

“அமைதி” வழியில் உலகை மறுபங்கீடு செய்வதற்கான செயல் போக்கில் எதிர் எதிரான ஏகாதிபத்திய யுத்ததந்திரக் கூட்டணிகள் உருவாகும்.

2. அமெரிக்கா, ஐரோப்பிய பொருளாதார சமுதாயம் (குறிப்பாக ஜெர்மனி மற்றும் பிரான்சு) ஜப்பான் ஆகிய மூன்று ஏகாதிபத்திய சக்திகள் தமக்குள் போட்டியிட்டுக் கொண்டிருப்பினும், ஒடுக்கப்பட்ட நாடுகளின்மீது குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின்மீது நவகாலனித்துவ ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காகவும் உலக முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியைத் திணித்து விடுவதற்காகவும் இந்நாடுகளுக்கெதிராக ஒன்றுபட்ட (கூட்டு) நடவடிக்கைகளில் ஈடுபடும். ஒடுக்கப்பட்ட நாடுகளின் உள் விவகாரங்களில் நவீன தலையீட்டுவாத நடவடிக்கைகள் மற்றும் கலகப் பிரதேசங்களை கையாள்வதற்குப் படைகளைக் குவிப்பது (கூட்டு இராணுவ நடவடிக்கைகள்) என்ற வடிவத்தில் ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டு நடவடிக்கைகள் அமையும் (இருக்கும்).

3. அமெரிக்காவின் தலைமையில் ஏகாதிபத்திய நாடுகள் ஐ.நா. அமைப்பை ஏகபோக முதலாளித்துவத்தின் அரசியல் ஒடுக்குமுறை கருவியாகப் பயன்படுத்தும்.

4. அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளின் அரசியல் ராணுவ தலையீட்டை எதிர்த்துப் போராடுவதற்கு மாறாக, ஒடுக்கப்பட்ட நாடுகள் - குறிப்பாக பெரும்பாலான ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் அரசுகளூம் ஆளும் வர்க்கங்களும் (ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாடுகளைா) அதிக “உதவி பெறுவதற்காக” ஏகாதிபத்தியங்களிற்கிடையிலான முரண்பாடுகளை பயன்படுத்தும் போக்கை மேற்கொள்ளும்.

5. எதிர் எதிராக ஏகாதிபத்திய யுத்ததந்திரக் கூட்டணிகள் உருவாவதைத் தொடர்ந்து ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பெரும்பான்மையான நாடுகளின் அரசுகள் பிளவுபட்டு வெவ்வேறு ஏகாதிபத்தியக் கூட்டணிக்குள் சேரும்.

6. ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்காவின் பலஇன அரசுகளின் ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சாதிகாரத் தன்மையின் காரணமாகவும் உலகை மறுபங்கீடு செய்து கொள்வதற்காக ஏகாதிபத்திய நாடுகள் பின்பற்றும் தந்திரங்களின் காரணமாகவும் இந்நாடுகளில் தேசியப்பிரச்சனை எழும்.

## ஏகாதிபத்திய - நவகாலனிய எதிர்ப்புப் போராட்டமே வழி.

ஆகையால் ஏகாதிபத்தியம் நவகாலனியத்தை எதிர்த்த போராட்டத்தில் இன்றைய கட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையின்கீழ் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் அதற்கு சேவை செய்யும் உள்நாட்டு ஆளும் வர்க்கத்தினருக்கும் எதிராக மக்கள் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விவாதம்

# சிவசேகரத்திற்கு ஒரு பதில்

அ. கௌரிகாந்தன்

'பிரிவினைவாதிகளினது முற்போக்குத் தோற்றம் பற்றி' தான் கூற விரும்புவதாக பகர்ந்துள்ளார். பிரிவினை கோரும் முற்போக்குவாதிகள் என்று இவர் தரம் பிரித்துப் பார்க்க விரும்பவில்லை. அதேபோல் பிரிவினை கோருபவர்களையும் பிரிவினைவாதிகளையும் இவர் வேறு படுத்திப் பார்க்கவும் விரும்பவில்லை.

பிரிவினை கோருபவர்கள்-பிற்போக்குவாதிகள்-பிரிவினை வாதிகள். இதுவே இவரின் சூத்திரமாகும். தமிழ் பிற்ப் போக்குவாதிகளின் சூத்திரம் என்ன தெரியுமா...?. தேசிய ஐக்கியம் கோருபவர்கள்-தேசிய, ஐக்கியவாதிகள்-சிங்களப் பெருந் தேசியவாதிகள். தமிழ் பிற்போக்குவாதிகளின் சூத்திரப்படி சிவசேகரமும், சிங்களப் பெருந் தேசியவாதிகளின் அணியில் ஜே.ஆர்., சிரிமா ஆகியோருடன் சமமாக நிறுத்தப்பட வேண்டியவர்தான். முதலில் அவரை தமிழ்ப் பிற்போக்குவாதிகளிடமிருந்து காப்பாற்றுவோம். தேசிய ஐக்கியம் கோருபவர்களும், தேசிய ஐக்கியவாதிகளும் வெவ்வேறு அணியினராகும். முதலில் தேசிய ஐக்கியம் கோருபவர்களை எடுத்துக் கொள்வோம். இவர்களை இருவகையினராகப் பிரிக்கலாம்.

1வது வகை: இவர்கள் எந்த தேசிய இனத்திலும் எதுவித விசேட சலுகையும் இல்லாத சகல தேசிய இனங்களும் சம உரிமையுள்ள, தேசிய இனங்களுக்கு அரசியல் ரீதியில் தனி அரசாகப் பிரிந்து போகும் உரிமையுள்ளஅதாவது சுய நிர்ணய உரிமையுள்ள, பல்தேசிய ஒற்றை அரசை(Multi-National Unitary State) கோருபவர்கள்.

2வது வகை: தனி ஒரு தேசிய இனத்திற்கு சகல உரிமையுள்ள(இது ஏனைய தேசிய இனங்களுக்கு தாம் விரும்பும் சலுகைகளை மாத்திரம் வழங்கும் உரிமையாகும்). தனது ஆட்சிக்குட்பட்ட பூகோளப் பரப்பினுள் பல தேசிய இன்ங்களையும் உள்ளடக்கிய ஒரு தேசிய இன ஒற்றை அரசை (Single National Unitary State) கோருபவர்களாகும். இவ்விரு சாராரும் முற்றிலும் வேறுபட்டவர்களாகும். முன்னையவர்கள் தேசிய இனங்களின் சமத்துவத்தைக் கோருகிறார்கள். சகல தேசிய இனங்களையும் நேசிக்கிறார்கள். இரண்டாவது வகையினர் தனி ஒரு தேசிய இனத்தின் உரிமையை வலியுறுத்துவதன் மூலம் மக்களின் வர்க்க ரீதியான ஐக்கியத்தையும், சகோதரத்துவத்தையும் துண்டாடுகிறார் கள். சிவசேகரமும் அவரைப் போன்றவர்களும் இரண்டாவது வகையைச் சர்ந்தவர்களல்ல. அவர்களை அங்கு கொண்டு போய் நிறுத்த முடியாது. அப்படியானால் அவரும், அவரைப் போன்றவர்களும் முதலாவது வகையைச் சார்ந்தவர்களா? அதுவுமில்லை, ஏன்...? முதலாவது வகையினர் பல்-தேசிய ஒற்றை அரசுக்கான வேலைத் திட்டம் ஒன்றை முன் வைக்கும் அதே வேளையில், சுய நிர்ணய உரிமைக்காக ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் நடாத்தும் இயக்கங்களுடன் தம்மை இணைத்துக் கொள்கிறார்கள். இலங்கையின் இன்றைய யதார்த்த நிலையில், அதாவது சிங்களப் பெருந்தேசிய வாதத்திற்கு எதிராக சிங்களத் தொழிலாளர்கள், விவசாயிகள் செயல் இழந்தது மாத்திரமல்ல, தாமும் அதன் கொள்கைகளை விளங்கியுள்ள இன்றைய யதார்த்தநிலையில், சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இடதுசாரிகள் தாம் தழைத்து வருவதற்குரிய சூழலைக் காணாத நிலையில், இலங்கை தமிழ் தேசிய இனம் சுயநிர்ணய உரிமைக்காக அல்ல, மேலும் ஒரு படி முன்னேறி தனி அரசுக்காக நடாத்தும் போராட்டங்களை (அதன் தவறுகளுடன்) இம்முதலாவது வகையினர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஆனால் சிவசேகரம் இதை ஏற்றுக் கொள்ள தயாராய் இல்லை. அவர் இன்னுங்கூட முழு இலங்கைப் புரட்சி பற்றித்தான் பேசுகிறார். முழு இலங்கைப் புரட் சிக்கு தயாரான நிலமை வரும் வரைக்கும் அதாவது சிங்களத் தேசிய இனம் புரட்சிகரமாகும்வரை ஏனைய தேசிய இனங்கள் கைகட்டி நிற்க வேணும் என்று கூறுகிறார். இவரையும் இவரைப் போன்றவர்களையும் முதலாவது அணிக்குள் சேர்க்க முடியுமா; முடியாது. அவ்விதமானால்.....? தொடர்வோம். தேசிய ஐக்கியவாதிகள் என்போர் யார்? அவர்கள் வேறுயாருமல்ல. என்ன நடந்தாலும், எது நடந்தாலும் பரவாயில்லை, தேசிய ஐக்கியம் வேண்டும் என்று வாதிடுபவர்களே அவர்களாகும். இவர்களில் இருவகையுண்டு. முதலாவது வகையினர், தமக்கு எதுவித நீடித்த சமூக, அரசியல், பொருளாதார நலன்கள் இல்லாமலிருந்தும் சிங்கள பூர்ஷ்வாக்களினதும், அவர்களின் அடிவருடிகளினதும் இனவாதப் பிரச்சாரத்தில் மயங்கி பிரிவினைக் கெதிராகச் செயற்படும் சிங்கள மக்கட் பிரிவினர். இவர்கள் பெருந் தேசியவாத அகங்கார வாதிகளல்ல. மாறாக அதனால் மயக்கப்பட்டவர்களாகும். ஜனநாயகவாதிகளினது மொழியில் சொல்வதானால் அப்பாவிச் சிங்களவர்கள். இரண்டாவது வகை, தேசிய ஐக்கியவாதிகள். தேசிய ஐக்கியம் சாத்தியம் இல்லாமல் இருக்கும் போதும், குறிப்பிட்ட ஒரு வரலாற்றுக் கட்டத்தின் போதும் 'தேசிய ஐக்கியம்' என்ற கோஷம் இலங்கையின் மொத்தப் புரட்சிக்குப் பாதகமானதாய், அதை மிகவும் பின் தள்ளுவதாய் அமையும் போதுகூட, யதார்த்த நிலைமைக்கு கண்ணை மூடிக்கொண்டு தேசிய ஐக்கியம் பேசுபவர்கள், நிச்சயமாக இவர்கள் சிங்களவர்களாய் இருந்தாலும்கூட பெருந்தேசிய அகங்காரவாதிகள் அல்ல. நல்ல நோக்கம் கொண்டவர்களேயாகும். ஆனால் இவர்களின் கருத்து இவர்களையறியாமல் பெருந்தேச அகங்காரவாதத்திற்கு தத்துவார்த்த ரீதியிலும், சித்தாந்த ரீதியிலும் சேவை செய்கின்றது. சிவசேகரமும் அவரைப் போன்றவர்களும் இந்த வகையறாவைச் சேர்ந்தவர்களேயாகும்.

பிரிவினை கோருபவர்களிலும் இருவகையுண்டு. முதலாவது வகை, இலங்கையில் மக்கட் பிரிவுகளை பிளவுபடுத்துவதையும், உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டத்தை பின் தள்ளுவதையும் அல்லது சிதைப்பதையும், இலங்கையின் சகல தேசிய இனங்களையும் ஏகாதிபத்தியத்தின் நலன்களுடன் இணைப்பதையும் அல்லது ஏற்கனவே உள்ள இணைப்புக்களை பலப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைப்பார்கள். இலங்கைத் தமிழர்களின் மேல் தட்டு வர்க்கத்தின் ஒரு பகுதியினர் இவ்வகையைச் சேர்ந்தவர்களேயாகும். இவர்கள் விரும்புவதெல்லாம் சிங்கள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய இனத்துக்கு தனி விசேட சலுகையுள்ள ஒரு தேசிய இன ஒற்றை அரசையேயாகும்.(Single National Unitary State) இதுவே இவர்களின் வர்க்க நலனுக்கு உகந்ததாகையினால் எவ்விதமான அரசு என்னும் விசயத்தில் இவர்களுக்கும் பூர்ஷ்வாக்களுடன் எதுவித முரண்பாடுமில்லை. இலங்கையின் சமூக உருவாக்கமானது சார்பு முதலாளித்துவ தன்மை பெற்றதொன்றாகையால் இங்குள்ள சகல தேசிய இனங்களைச் சார்ந்த பூர்ஷ்வாக்களினதும் வர்க்க நலனையும் இவ்வரசு பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அவ்விதமானால், தமிழ் பூர்ஷ்வாக்கள் உண்மையிலே விரும்புவது என்ன?

அ. உழைக்கும் மக்களுக்கும், சகலவிதமான புரட்சிகர இயக்கங்களுக்கும், ஜனநாயக இயக்கங்களுக்கும் எதிராக அடக்குமுறை பிரயோகிப்பதில சக்தி மிக்க அரசு ஒன்றை விரும்புகிறார்கள்.

ஆ. சிங்களப் பெருந்தேசியவாத வெளித் தோற்றங் கொண்ட (இது போலியானதல்ல. வெளிப்படையாகத் தெரியும் தோற்றமாகும்)தங்கி நிற்கும் பூர்ஷ்வா அரசின் தமக்கு மேலும் பிடிப்புகள் வேண்டுகிறார்கள். தற்போதைய நிலையில் அரசியல் பிடிப்புகளிலும் விட பொருளாதாரப் பிடிப்புகளிலேயே இவர்கள் கூடுதலான கவனம் செலுத்துகிறார்கள்.

தமக்கென்று தனியானதோர் அரசு இவர்களுக்கு இன்று அவசியமானதல்ல. இவ்விதமான ஓர் அரசை தமது சொந்த முயற்சியாலேயோ, தலைமையிலோ அமைக்கும் சாத்தியப்பாடும் இவர்களுக்கு இல்லை. ஏதாவதொரு வல்லரசுக்கு இவ்விதமானதொரு அவசியமும், சாத்தியப்பாடும் இருந்தால் இவர்கள் தமது நலனையும், அவர்களின் நலனுடன் இணைத்துக் கொண்டு (இவ்விதம் செய்வதன் மூலம் கூடியளவு ஏகாதிபத்திப உதவிகள் பெற முடியுமானால்) பிரிவினைக்காகப் போராட முன்வருவார்கள். மற்றப்படி முன்வரப் போவதில்லை. இவர்கள் பிரிவினைவாதிகளோ, தம்மட்டில் இனவாதிகளோ அல்ல. தமது சுரண்டும் வர்க்க நலனுக்கேற்ப இவற்றைப் பயன்படுத்துகிறார்கள். தாம் பிரிவினைவாதிகளாக இல்லாமல் இருந்துகொண்டு பிரிவினைவாதத்தை உருவாக்குகிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகியவற்றின 'அதிகார மையம்' (கொள்கையைத் தீர்மானிக்கும் நடு நிலையம்) இவ்வர்க்கங்களேயாகும். இவ்'அதிகார மைய'மும் இவர்களின் அடிவருடிகளும் சிலவேளைகளில் 'மார்க்சிசம்', 'சோசலிசம்', 'தொழிலாளி வர்க்கம்' என்றெல்லாம் பேசுவதுண்டு; இது நிச்சயமாக முற்போக்குத் தோற்றமேதான். தமது 'அதிகார மையத்தின்' வர்க்க சுபாவத்தை பாதுகாப்பதற்கு இவர்கள் எடுக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

இரண்டாவது வகையினர்: இலங்கைத் தீவின் இன்றைய அரசியல் நிலையில் தமிழ் மக்கள் தனி அரசாக பிரிந்து வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கருதுபவர்கள். இவர்கள் சிங்கள மக்களை தமது எதிரியாகக் கருதவில்லை. தனி அரசு கோரி தாம் நடாத்தும் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது என்று கருதாதவர்கள், மாறாக சிங்கள தேசிய இனத்தின் சுபீட்சமான அரசியல் எதிர்காலத்துக்கு இது சாதகமானது அல்லது அவசியமானது எனக்கருதுபவர்கள். இவர்கள் தமது தேசிய இனம் (தமிழ்) பூரண சுதந்திரமுள்ள ஒரு தேசிய இனமாக சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வதற்கு மறுப்பில்லாதவர்கள். இவர்கள் பல்வேறு குழுக்களாக உள்ளதுவும், குழுக்கள் மத்தியில் தந்திரோபாய பிரச்சினைகளிலும், நடைமுறைப் பிரச்சினைகளிலும், சித்தாந்தப் பிரச்சினைகளிலும் கருத்து வேறுபாடுகள் உள்ளதுவும் உண்மை. ஆனால் பொதுவான எல்லைக் கோட்டை வகுப்போமானால் இவர்களில் மிகப்பெரும்பான்மையினர் முற்போக்கு முகாமைச் சேர்ந்தவர்களேயாகும். பல குழுக்களின் தலைமையானது மார்க்சிய-லெனினிய அணுகுமுறையை நோக்கி நகர்ந்து வருகின்றது என்பதுவும் உண்மையாகும். இவர்களுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் பரவலான ஆதரவு உண்டு என்பதையும் மறுக்க முடியாது. இவ்வாதரவு இயக்க ரீதியாக ஸ்தாபனப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கான ஆதரவல்ல. மாறாக பார்வையாளர்கள் என்ற மட்டத்திலான ஆதரவேயாகும். சிங்களப் பெருந்தேச அகங்காரவாத அடக்கு முறையின் அதிகரிப்பும், போராட்டங்கள் மூலம் பெற்று வரும் அனுபவங்களும் மக்களையும், குழுக்களையும் இயக்க ரீதியாக ஸ்தாபனப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளினூடாக இணைக்கும காலம் வெகு தூரத்தில் இல்லை. அதேபோல் இக்குழுக்களும் படிப்படியாக நீண்ட வரலாற்றினூடாக மக்கள் ஸ்தாபனரீதியானதும், இயக்கரீதியிலுமான-ஐக்கியத்தை உருவாக்கிக் கொள்வது வரலாற்றுக்கு அவசியமானதும் வரலாற்றால் உருவாக்கப்படப் போவதுமாகும்.



சிவசேகரம் கூறுவது போல் இவ்வகையினரின் தன்மைகள் முற்போக்குத் தோற்றமல்ல, முற்போக்கானதேதான். இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியிலும் முழு இலங்கையிலும் மார்க்சிய-லெனினிய இயக்கம் மிகப் பலவீனமான நிலையில் உள்ளதன் காரணத்தால் இவர்களின் வளர்ச்சி பல வளைவு சுழிவுகளைக் கொண்டதாகவும் குறைபாடுகள் உள்ளதாகவும் உள்ளது உண்மையே. இக் குறைபாடுகளையும் பக்குவமின்மையும் காட்டி இவ்வியக்கங்களை தோற்றளவில் மாத்திரம் முற்போக்கானவை என வாதிடுவது வளர்ச்சிப் போக்கை அவதானிக்காமல் விடும் போக்காகும். இக்குறைபாடுகளுக்கும், பக்குவமின்மைகளுக்கும் எதிரான போராட்டம் தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்களுக்குள்ளேயே நடைபெறுகின்றன. இப்போராட்டங்களின் ஊடாக தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் நிச்சயமாக முற்போக்கை நோக்கி நகர்ந்து வரும். அது மாத்திரமல்ல, இலங்கைத் தமிழ் மக்களுக்கு அவசியமான மார்க்ஸிய-லெனிஸிய கட்சியினது தோற்றத்திற்கான காரணமாக எதிர்காலத்தில் திகழப் போவது இத்தேசிய விடுதலை இயக்கங்களேயாகும். அதே நேரத்தில் பிற்போக்குத் தமிழ்த் தேசிய வாதத்திற்கு சேவை செய்யும் பிரிவினரும் இங்கிருந்து தோன்றக்கூடும்.

தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்களுக்குள் ஏற்படும் கருத்து வளர்ச்சியையும் கருத்து மோதல்களையும் கொண்டு நான் இவற்றைக் கூறவில்லை. மாறாக, இவ் விடுதலை இயக்கங்களுக்குள் ஏற்படும் வர்க்க சேர்க்கையைக் கொண்டே இவ்விதம் கூறக் கூடியதாய் உள்ளது. இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் மேல்தட்டு வர்க்கத்தினருக்கெதிராக அரசியல் அடக்குமுறையாக ஆரம்பித்த சிங்களப் பேரினவாத அடக்குமுறையானது படிப்படியாகப் பல வடிவங்களை எடுத்து இன்று தமிழ் தேசிய இனத்தின் சகல வர்க்கங்களினதும் வர்க்கத் தட்டுகளினதும் மேலான அரசியல் அடக்குமுறையாக மாறியுள்ளது. அத்துடன் விவசாயிகளில் பெருமளவிலானவர்களும் சிங்கள பேரினவாதத்தின் பொருளாதார அடக்குமுறைக்கும் நேரடியாக முகங்கொடுக்கத் தொடங்கியுள்ளார்கள். இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் வளரும் போக்காகியுள்ளன. ஆகையினால், தமிழ் தேசிய இனத்தின் தொழிலாள-விவசாயிகளும், தமது சொந்த வர்க்க, இன நலனுக்காக தேசிய விடுதலை இயக்கத்தினுள் பிரவேசிக்கும் சகாப்தம் 70ம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்டுகளுடன் ஆரம்பமாகி விட்டது. இது மிக வேகமாக வளர்ச்சியடையப் போகும் ஒரு போக்காகும். சிங்களப் பேரினவாதம் இவ்வாறு தானாக தன்னை இல்லாதொழித்துக் கொண்டால் (இது பகல் கனவு) அலலது சிங்களத் தொழிலாளி-விவசாயிகள் சிங்களப் பேரினவாதத்தை இல்லாதொழித்தால் தவிர, அரசு அடக்குமுறை உட்பட வேறு எந்த நிலைமைகளாலும் இப் போக்கை தடுத்து நிறுத்தி விட முடியாது. தனி அரசு கோரும் இயக்கங்கள் இன்னமும் தம்மத்தியில் பிரிவினைவாதிகளை உள்ளடக்கியிருந்தாலும் கூட முழுமையாக எடுத்துப் பார்த்தால் இவர்கள் பிரிவினைவாதிகள் அல்ல. என்ன நடந்தாலும், எது நடந்தாலும் என்றும், எப்போதும் தமிழனும், சிங்களவனும் ஒரு நாட்டினில் வாழ முடியாது பிரிந்து வாழ்வதுதான் நித்தியமான தீர்வு என வாதிடுபவர்களே அதாவது பிரிவினைக்காக பிரிவினையை முன்வைப்பவர்களே பிரிவினைவாதிகளாகும். ஆரம்பத்தில்(சுமார் 10 வருடங்கள் முன்பாக) தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்களில் பெரும்பான்மையானவை இக்கருத்துக்களைக் கொண்டவையேயாகும்.ஆனால் இன்று நிலமை மாறி வருகின்றது. இலங்கையின் இன்றைய வரலாற்றுக் காலகட்டத்தில் தமிழர்கள் தனியான அரசாக அமைவதே இலங்கையின் சகல மக்கட் பிரிவுகளுக்கும் நன்மையளிக்கும். அப்போது மாத்திரம்தான் சிங்கள மக்கள் நமது வர்க்க எதிரியை இனங்காணக் கூடியதாக இருக்கும் என்ற கருத்தோட்டமே தனி அரசு கோரும் இயக்கங்கள் பொதுவானதாக அல்லாவிட்டாலும் வளரும் தன்மையுள்ள போக்காக மாறிவிட்டது. அதுமாத்திரமல்ல, சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கு இயக்கங்களுடனான தொடர்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து வளர்ந்து வருவதுடன் இது விடயத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவு வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இவ்விடுதலை இயக்கங்களில் பெலம், பலவீனத்தைப் பற்றியோ, பலமான அம்சம் எவ்வளவு தூரத்திற்கு வளர்ந்துள்ளது, எவ்விதம் வளர்கிறது, இதற்கான வர்க்க காரணிகளும் என்னென்ன என்பவற்றை அக்குவேறு, ஆணிவேறாக ஆய்வது இங்கு எனது நோக்கமல்ல.

தனி அரசு கோரும் இயக்கங்களின் பொதுவான போக்கு பிரிவினை வாதமல்ல என்பதையும் இவர்களின் பிரிவினை கோரிக்கை பிரிவினை வாதத்தை அடிப்படையாக கொண்ட நிலை தகர்ந்து வருகிறது என்பதையும், இப்பிரிவினரின் முற்போக்கானது தோற்றஅளவில் மாத்திரம் முற்போக்கானது அல்ல என்பதையும் கூறுவதற்கு அவசியமான அளவுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

தோற்ற அளவில் மாத்திரம் முற்போக்கல்ல என்று கூறுவதன் மூலம் இன்று முழுமையான முற்போக்கானது என்று கூற வரவில்லை. மாறாக முற்போக்கை நோக்கி வளர்கிறது என்பதே எனது முடிவாகும். பிரிவினைவாதத்தை இவ்வியக்கத்துள் புகுத்தி தமிழ் தேசியவாதத்தை சிங்கள மக்களுக்கு எதிரானதொன்றாகவும், ஏனைய தமிழ் பேசும் மக்கள் பிரிவினருக்கு இரட்சகரை போன்றதொன்றாகவும் மாற்றுவதற்கான முயற்சிகள் தேசிய அளவிலும் சர்வதேசளவிலும் நடைபெறுகின்றன. ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் வசிக்கும் அந்நாட்டு பிரஜா உரிமை பெற்ற உயர்தட்டு யாழ்ப்பாணத்தவர்களும், இந்திய பிற்போக்கு அரசியல்வாதிகளுமே பிரிவினைவாதத்தை தமிழ் விடுதலை இயக்கங்களுக்குள் புகுத்துவதற்கான முயற்சிகளுக்கு தலைமை தாங்குபவர்களாகும். இம்முயற்சிகள் எந்த அளவுக்கு வளர்ச்சி காண்கிறதோ அந்த அளவிற்கு விடுதலை இயக்கத்தின் முற்போக்குத் தன்மை வளர்ச்சி பெறும்.

பிரிவினை கோரும் இந்த இரண்டாவது வகையினரைப் பற்றி சிவசேகரம் வைக்கும் மற்றோர் குற்றச்சாட்டு அவர்கள் மார்க்சிய பாரம்பரியம் இல்லாதவர்கள் என்பதாகும். மார்க்சிய பாரம்பரியம் என்பது என்ன? மார்க்சுடன் இணைந்து மார்க்சியம் எனும் பொதுக்கோட்பாட்டை ஊருவாக்கிய பாரம்பரியமாக அதை அவர் கருத மாட்டார் என்று எண்ணுகிறேன். இலங்கையின் யதார்த்த நிலையில் மார்க்சியத்தை பிரயோகிப்பதில் ஏற்பட்ட பாரம்பரியத்தையே இங்கு கணக்கில் எடுக்க வேண்டும். மார்க்சிய பாரம்பரியம் என்பது இலங்கைமயப்படுத்தப்பட்ட மார்க்சிய பாரம்பரியமேயாகும். காலனியல் ஆதிக்கத்தின் கடைசி காலங்களில் உருவான மார்க்சிய கட்சிகளிலும், காலனிக்கு பின்னைய இலங்கை சமூக உருவாக்கத்தில் இக்கட்சிகளின் வாரிசுகளாக தோன்றிய புதிய கட்சிகளும், குழுக்களும் மார்க்சியத்தை இலங்கைமயப்படுத்தலில் தோல்வி கண்டுள்ளன. இன்று அவற்றில் ஏகப் பெரும்பானவையானவை இலங்கையின் உயர்வர்க்கங்களுக்கு எதிரியாகச் செயற்படும் சக்தி எதுவும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இடதுசாரிகள் இலங்கையில் தோல்வி கண்டுள்ளார்கள் என்பதை எல்லா இடதுசாரிகளும் ஒத்துக் கொண்டுள்ளார்கள்.ஆகவே இலங்கைமயப்படுத்தப்பட்ட மார்க்சிய பாரம்பரியம் என்பது தோல்வி கண்ட ஒரு பாரம்பரியமாகும். 60ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இருந்து இலங்கையின் இடதுசாரி இயக்கங்கள் புதிய சக்திகளை தனக்குள் உள்ளிழுக்கும் திராணி அற்றதாகிவிட்டது. தனக்குள்ளிருந்து நல்ல செயல்படும் சக்திகளை இழக்கவும் தொடங்கிவிட்டது. இதனது விளைவு அவ்வவ் கட்சிகளையும், குழுக்களையும் ஆரம்பித்த சில தனி நபர்களுடன் அவை இன்று மிஞ்சியுள்ளதேயாகும். அடுத்த புறத்தில் புதிய சக்திகள் தம்மை தனியாக ஸ்தாபனப்படுத்தியும் தமது அறிவிற்கும், தமது வர்க்கத்தின் குணாம்சத்திற்கும் ஒப்பவும், வெவ்வேறு வழிகளில் ஸ்தாபனப்படுத்தியும் உள்ளார்கள். சிங்கள மக்கள் மத்தியில் மக்கள் விடுதலை முன்னணியும், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தனி அரசு கோரும் இயக்கங்களும் இவ்விதமாக தோன்றியவையேயாகும்.

தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்களுக்கு மார்க்சிய பாரம்பரியம் ஒன்று இல்லைதான். ஆனால் இது அவர்களின் தவறல்ல. தோல்வி கண்ட மார்க்சியப் பாரம்பரியம் உள்ளவர்கள் தமது தவறுகளிலும், தோல்விகளிலும் இருந்து பாடம் படித்து மார்க்சியத்தை மேலும் செழுமைப்படுத்தும் மார்க்சியப் பாரம்பரியத்தை புதிய பரம்பரையினரிடம் கையளிப்பதில் ஈடுபட முடியும். அதேபோல் புதிய வழித் தோனறல்கள் பழைய அனுபவங்களை தொகுத்துக் கொள்வதன் மூலம் மார்க்சிய பாரம்பரியத்துடன் தம்மை இணைத்துக் கொள்வார்கள். இவ்விரண்டு நிகழ்ச்சிப் போக்குகளும் இன்று நடைபெறத் தொடங்கியுள்ளன.

தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்களுக்கு மார்க்சிய பாரம்பரியம் இல்லை என்பது புதினமானதாகவோ, கேலிக்குரியதோ அல்ல. மாறாக மார்க்சிய பாரம்பரியம் உள்ள கட்சிகளும், குழுக்களும் 70ஆம் ஆண்டுகளின் பின்பு வளர்ந்து வரும் புதிய வாரிசுகள் இல்லவே இல்லை என்பதே இங்கு புதினமானதும், வேதனைக்குரியதுமாகும். லங்கா சம-சமாஜக் கட்சியின் வாரிசாக உள்ள நவசம சமாஜக் கட்சி இதற்கு விதிவிலக்கானதாகும். இவர்கள் வளர்ந்து வரும் புதிய வாரிசுகளேயாகும். இவர்கள் தமிழ் மக்களின் சுய-நிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வதுடன், சிங்கள மக்கள் மத்தியில் வெளிப்படையாக தமிழ் மக்களின் பிரிவினைக் கோரிக்கையின் தவிர்க்க முடியாத தன்மையிட்டு பிரச்சாரம் செய்கிறார்கள். இன்று இலங்கையில் தேசிய இனப்பிரச்சனையே பிரதான அரசியற் பிரச்சனையாயிருப்பதுவும், அதையொட்டிய அரசியல் நிலைப்பாடே ஒரு அரசியல் இயக்கத்தின் அரசியல் பங்கையும், குணாம்சத்தையும், எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் ஒன்றாய் மாறியுள்ளதற்கு இது ஒரு எடுத்துக்காட்டலவா?

அடுத்ததாக, பரந்துபட்ட வெகுஜனங்களினது பிரச்சனைகளை முடிவைப்பதில் வெற்றி கண்டுள்ளார்கள் என்று கூறுகிறார். முதற் சொன்ன வகையினர் அதாவது தமிழ் பகுதியின் ஆளும் வர்க்கத்தினர் இதற்கு முயற்சி எடுத்து வருவது உண்மை. கணிசமானளவு தூரம் வெற்றியும் கண்டுள்ளார்கள். இரண்டாவது அணியினரும் இதையா செய்கிறார்கள், இல்லை. இலங்கைத்தீவு எங்கணும் வாழும் தமிழ் பேசும் மக்களின் பரந்துபட்ட வெகுஜனங்களினது பிரச்சனை சிங்களப் பெருந் தேசியவாத அடக்குமுறையாகும். இதற்கு எதிராக நிற்பதுவும், இதற்கு எதிராக போராடும் உணர்வை மக்கள் மத்தியில் வளர்ப்பதுவும் 'பரந்துபட்ட வெகுஜனங்களினது பிரச்சனைகளை முடிவைப்பது' ஆகுமா?

'பரந்து பட்ட வெகுஜனங்களினது பிரச்சனை' என்று சிவசேகரம் எதைக் கருதுகிறார்? சிங்களப் பேரினவாத அடக்குமுறையை அவர் அவ்விதம் கருதுவதாக தெரியவில்லை. ஏகாதிபத்தியத்திற்கெதிரான தேசிய விடுதலைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டங் களையே பரந்துபட்ட வெகுஜனங்களினது போராட்டமாக இருக்கும் என அவர் கருதுகிறார். காலனிக்குப் பின்பான மூன்றாம் உலக நாட்டு சமுக உருவாக்கங்களில் அதாவது நவ காலனிய சமுக உருவாக்கங்களில் ஏகாதிபத்தியத்திற் கெதிரான தேசிய விடுதலை யுத்தமானது சீனாவில் நடந் ததைப் போன்றதாகவோ அல்லது இந்தியாவில் நடந்த தேசிய விடுதலை இயக்கத்தைப் போன்றதாகவோ இருக்க மாட்டாது. அது அந்நாடுகளின் சொந்த அரசுக்கும் அந்நாடுகளின் சகல ஆளும் வர்க்கங்களுக்கும்,(தேசிய,விதேசிய என்ற தேவையற்ற நியாயங்கள் எதுவும் இங்கு இல்லை) எதிராக அரசியல் அரங்கில் நடை பெறும் ஒரு நீடித்த உள்நாட்டு யுத்தமாகும். பொருளாதார ரீதியில் மக்கள் ஏகாதிபத்தியத்தை எவ்வளவுதான் புரிந்து கொண்டாலும் கூட, இவ்விதமான ஒரு நீடித்த உள்நாட்டு யுத்தத்தின் மூலமே மக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் உணர்வு பெறுவதுடன் தமது நலனுக்காக தமது சொந்த ஸ்தா பனங்களையும் உருவாக்குகிறார்கள். இதுதான் உண்மையான அரசியல் உணர்வு. பிலிப்பைன்சிலும், லத்தின் அமெரிக்க நாடுகளும் இதற்கு சிறந்த உதாரணங்கள். வங்காள தேசமும், ஈரானும் எதிர்மறை உதாரணங்கள்.

மற்றோர் இடத்தில் "பிரிவினைவாதிகள் சோவியத், அமெரிக்க சார்பு சக்திகள்" என பகர்கிறார். அரசியல்ரீதியில் இது சாத்தியமா இல்லையா என்பதை அவதானிப்போம். தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களை தமக்குச் சார்பாக ஆக்கிக் கொள்ளும் அவசியம் சோவியத், அமெரிக்க வல்ல ரசுகளுக்கு உண்டா? எதற்காக அந்த அவசியம் உண்டு என்பதை முதலில் கவனிப்போம். தமிழ் ஆளும் வர்க்கத்தினை 'அதிகார மையமாக' கொண்ட இயக்கங்களையும் ஏனைய தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்களையும் தமது செல்வாக்குக் கீழ் கொண்டு வரும் அவசியம் இரு வல்லரசுகளுக்கும் உண்டு. இலங்கை இன்று அமெரிக்கப் பொருளாதார செல்வாக்கு மண்டலத்துள் பிரவேசித்து விட்டது. படிப்படியாக இது ஆசிய நாடுகளைப் போன்று இராணுவ செல்வாக்கு மண்டலத்துள்ளும் பிரவேசிக்கும். ஆகையினால் அமெரிக்க வல்லரசு பிரிவினையையும், அதை ஒட்டி வளர்த்து வரும் ஆயுதந்தாங்கிய விடுதலை இயக்கத்தையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் விரும்ப மாட்டாது. தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் எதிரானதாக-மாறுமானால் அமெரிக்க வல்லரசு அவற்றையும் எதிர்க்கும். அவ்விதம் இல்லாத பட்சத்தில் தமது செல்வாக்கிற்கு கீழ் வைத்திருக்கவே முற்படும். ஏனெனில் தொழிலாளர்களினது போராட்டங் களையும்-ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும் நசுக்குவதற்கு அவற்றைப் பயன்படுத்த முயற்சிக்கலாம் அல்லவா? தமிழ் ஆளும் வர்க்கத்தினை 'அதிகார மைய மாகக் கொண்ட'- இயக்கங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திகு துணை போவதாகவே உள்ளன. திறந்த பொருளாதாரத் துடனும் அந்நிய மூலதனத்துடனும் பங்குதாரர்களாகவும், அபிவிருத்தி நடவடிக்கையின் மூலம் தமது பைகளை நிரப்பும் வாய்ப்பு பெற்றவர்களாகவும் உள்ளதால் இவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நேசிக்கிறார்கள். இத்தமிழ் ஆளும் வர்க்கத்தினர் தொழிலாளர்களுடைய போராட்டங் களையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும் சிதைப்பதற்கு உதவி செய்வதால் அமெரிக்க ஏகாதிபத்தியமும் இவர்களை நேசிக்கின்றது. அதே நேரத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தமிழ் பூர்ஷ்வாக்களின் ஊடாகவும், சிங்கள பூர்ஷ்வாக்களின் ஊடாகவும் இனவாதத்தை(பிரிவினை வாதமாகவும், தேசிய ஐக்கியவாதமாகவும் செயற்படுத்துகின்றது என்பதையும் மறக்கக் கூடாது).

தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்களில் அநேகமானவை அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வைக் கொண்டதாக வளர்ந்து வருகின்றது. இதுவே விடுதலை இயக்கங்களின் பொதுவான போக்காக மாறும் சாத்தி யப்பாடுகள் உண்டு.

சோவியத் ஏகாதிபத்தியத்தைப் பொறுத்தவரையில் அமெரிக்க சார்பு பொருளாதார அரசொன்றைப் பலவீனப் படுத்துவதற்காவும் இராணுவ தந்திரோபாயத்தின் பக்கத்தில், தன்னை பலப்படுத்திக் கொள்வதற்காகவும் பிரிவினைக் கோரிக்கையை ஆதரிக்கக் கூடும். தான், நேரடியாக இல் லாவிட்டாலும் இந்திய அரசின் மூலம், இதை செயற்படுத்த முயற்சிக்கலாம். ஆனால் இந்திய அரசு சோவியத் வல்ல ரசின் கைப்பொம்மை அல்ல. இந்திய அரசுக்கும் இத் தேவை இருக்குமேயானால் தான் அது சோவியத் நலனுடன் தனது நலனையும் இணைத்துக் கொள்ளும். எவ்விதமானாலும் தமிழ் ஆளும் வர்க்கத்தினரின் இயக்கமானது சோவியத் சார்பாக இருப்பதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை. ஆகவே தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்களினூடாக சோவியத் வல்லரசு தனது செல்வாக்கை செலுத்த முற் படக்கூடும். அதனால் தனி அரசு கோரும் விடுதலை இயக் கங்களுக்கு சோவியத் வல்லரசைச் சார்ந்து நிற்க வேண்டிய அவசியம் உண்டா? இன்றைய நிலையில் இவற்றின் பெரும் பான்மையானவை தமிழ் ஆளும் வர்க்கத்தை 'அதிகார மையமாகக் கொண்ட' இயக்கங்கள் அல்ல. குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தை 'அதிகார மையமாக' கொண்ட இயக்கங் களேயாகும். ஆகவே சோவியத் வல்லரசையோ, வேறு வல் லரசையோ நாடி அவர்களின் எதிர்பார்க்கும் வர்க்கச் சேவை இவர்களுக்கு இல்லை. ஆகையினால் அவர்கள் சோவியத் வல்லரசின் சேவகர்களாக அவர்களிற் சார்ந்து நிற்பவர்களாக மாறுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஏனைய நாடுகளின் விடுதலை இயக்கங்களின் அனுபவங்களை கற்கும் போக்கு இவ்விடுதலை இயக்கங்களின் மத்தியில் உண்டு. இதன் காரணத்தால் இவர்கள் சோவியத் வல்ல ரசையிட்டும் விழிப்புணர்வு பெற்று வருகிறார்கள். அவர்கள் தமது அரசியல் வளர்ச்சியின் மூலம் எந்த வல்லரசுக்கும் சார்பில்லாத ஒரு நிலமையை நோக்கியும், வல்லரசுக் கிடையேயான முரண்பாடுகளை தமக்கு சாதகமாக பயன் படுத்தும் நிலையை நோக்கியும் வளர்ந்து வருவார்கள் என்ப தற்கான அறிகுறிகள் தற்போதே தென்படத் தொடங்கி விட்டன.



அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் வல்லரசும், அல்லது வேறு நாடுகளின் பூர்ஷ்சு வா அணிகளும் தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தை தமது நலனுக்கு சாதகமாக பயன்படுத்தி விடும் என்று பயந்து நடுங்கிய வண்ணம் உள்ளவர்கள், கம்யூனிஸ்ட் கட்சிகளும் அவைகளின் தலைமை யிலான இயக்கங்களும் அமைவதையிட்டு ஏன் பயப்படு கிறார்களில்லை. பெரும் நாடுகளின் தேசிய நலனுக்காக தமது சொந்த நாட்டினதும், அந்நாட்டின் தொழிலாளி வர்க்கத்தினதும் நலன்களை விட்டுக் கொடுத்த கம்யூனிஸ்ட் கட்சிகள் இல்லையா? சோவியத் நலனுக்காக தனது சொந்த நலனை மறந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும்(20 நூற்றாண்டின் முற்பகுதியில்), சீனாவின் தேசிய நலனுக்காக தனது சொந்த நலனை மறந்த கிழக்கு பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியும் உதாரணங்கள் இல்லையா? அப்படியானால் தமது தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நல னுக்காக ஏனைய வர்க்க, தேசிய இயக்கங்களை பயன்படுத்துபவர்கள் இருக்கும்வரை எதுவித இயக்கங்களையும் உருவாக்காது விடுவதா? சோஷலிச நாடும், சக்தி பெற்ற கம்யூனிஸ்ட் கட்சிகளும் கூட தமது நலனுக்காக ஏனைய இயக்கங்களைப் பயன்படுத்தும் தவறுகளை இழைக்கக்கூடும். ஆகவே தமது சொந்த நலனில் எதுவித தளர்ச்சியோ, விட்டுக் கொடுப்புமோ இல்லாமல் பரஸ்பரம் உதவி கொள்வதும், உதவி பெறுவதும் வலலரசுகள் பிற்போக்குக் கூட்டுக்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி முன்னேற முயல்வதுவுமே புரட்சிகர இயக்கங்களின் கடமையாகவும் தந்திரோபாயமாகவும் இருக்க வேண்டும். தனி அரசு கோரும் விடுதலை இயக்கங்களும் இந்த நிலையை நோக்கி வளரும்.

"இலங்கையின் புரட்சிகர இயக்கத்தை வளராமல் தடுப்பதில் பிரிவினைவாதமும் ஒன்று" என்று கூறுகிறார். இது உண்மையின் ஒரு பகுதியே அன்றி முழுமையான உண்மையல்ல, உண்மையின் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கூறுவது பொய் கூறுவதற்கு சமமானதே. எவ்விதம் என்பதைப் பார்ப்போம். பிரிவினைவாதம் எவ்விதம் தோன்றியது? அது தன் மட்டில் தான் தனித்து நிற்கக் கூடியதொன்றுமல்ல; தானாக தோன்றிய தொன்றுமல்ல. அது தேசியவாதத்தால் தோற்றுவிக்கப்பட்டு அதில் தங்கி நின்று அதனால் போஷிக்கப்பட்டு வளரும் ஒன்றாகும். அதே நேரத்தில், பிரிவினைவாதம் தன்னைத் தோற்றுவித்த தேசிய வாதத்தின் வளர்ச்சிக்கு அவசியமான சில அரசியல் சூழல்களை உருவாக்கிக் கொடுக்கின்றது. ஆகவே உண்மையான ??????? எவ்விதம் அமைய வேண்டும். இலங்கையின் புரட்சிகர இயக்கத்தை வளராமல் தடுப்பதில் பிரிவினைவாதமும் தேசிய ஐக்கியவாதமும் தமக்குள் வேறுபட்டதைப் போல் தோற்றமுள்ள ஆனால் பிரிக்க முடியாத ஒருமையாய் உள்ள பிரதான, உடனடி அரசியல் தடையாகும். இதுவே முழுமை பெற்ற தீர்வாகும். ஒன்றை விட்டு மற்றொன்றை மாத்திரம் எதிர்பார்ப்பவர்கள் உண்மையிலேயே இரண்டினதும் சேவகர்களாகுகிறார்கள். இந்நிலையில் இருந்து பார்த்தால், பாவம், சிவசேகரம் அவர் எதை எதிர்த்து கச்சை கட்டியுள்ளாரோ அதற்கு சேவகராக மாறிவிட்டர். ஆம் அவரை அறியாமல் தான் அவர் சேவகம் செய்கிறார்.

பிரிவினைவாதம், தேசிய ஐக்கியவாதம் ஆகிய இரண்டும் புரட்சிகர இயக்கங்களால் குறிப்பாக பாட்டாளி வர்க்க புரட்சிகர இயக்கங்களால் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியவையாகும். ஏனெனில் இவை இனவாதத்தையே தமது அடிப்படையாகக் கொண்டன. வர்க்க வேறுபாடுகளையும், வர்க்கரீதியாக ஐக்கியத்திற்கும் தீங்கு செய்வனவாகும்.

இவ்வரசியற் தடையை அகற்ற என்ன செய்ய வேண்டும்? சகல தேசிய இனங்களுக்கும் சம உரிமையுள்ள, சுய நிர்ணய உரிமையுடன் கூடிய முழு இலங்கைக்குமான சோஷலிச அரசொன்றை அமைக்க வேண்டும். இல்லையேல் சுய நிர்ணய உரிமையை பிரயோகித்து தனி அரசாகப் பிரிந்து போகும் புறநிலை சாத்தியப்பாடுகள் உள்ள(அகநிலை சாத்தியப்பாடுகள் சகலருக்கும் உண்டு) தேசிய இனங்கள் தனி அரசாகப் பிரிந்து செல்ல வேண்டும். இரண்டில் எது நடைமுறை பொருத்தமானது என்பது குறிப்பிட்ட வரலாற்றுக் கால கட்டத்தைப் பொறுத்தது. இன்றைய தீவின் யதார்த்த அரசியல் நிலைமையில் இலங்கைத் தமிழ் தேசிய இனம் தனி அரசாகப் பிரிந்து போவதே இத்தீவின் சகல தேசிய இனங்களினதும் புரட்சிகர இயக்கங்களின் வளர்ச்சிக்கு அவசியமானதாகும். இதுவே அரசியல் தடையை அகற்றும் அரசியல் தீர்வாகும்.

இவ்விதமாக மூன்றாம் உலக நாட்டு அரசு பல தேசிய இனங்களை உள்ளடக்கியதாக இருக்ககுமானால், அங்கு தேசிய அடக்குமுறை இருக்கவே செய்யும். இத் தேசிய இனங்கள் தம்மை அடக்கும் அரசுக்கெதிராக தேசிய உரிமைகளுக்காக போராடுவதன் மூலமே ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்துள் பிரவேசிப்பார்கள். தம்மை அடக்கும் அரசுக்கெதிரான நீடித்த உள்நாட்டு யுத்தமே அவர்களின் புரட்சிகரப் போராட் டமாகும். அதுதான் அவர்களின் பரந்துபட்ட வெகுஜனப் பிரச்சனை. இந்தோனீசியா, கிழக்கு திமோர், எதியோப்பியா, எரித்திரியா, பிலிப்பைன்ஸ்-மோரோ, இந்திய-நாகா,மிசோ ஆகியன இதற்கான உதாரணங்களாகும். சிங்கள மக்கள் தமது சொந்த இன அரசை(இலங்கையில் தற்போதைய அரசு) எதிர்க்கப்போவது, புரட்சிகரப் போராட்டத்தில், ஈடுபடப்போவது ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வில் நின்ற வண் ணமல்ல. ஆரம்பத்தில் அது அவ்விதமாக இருக்கமாட்டாது. அரசின் ஜனநாய விரோத தன்மைக்கெதிராகவே சிங்கள மக்கள் முதலில் புரட்சிப் போராட்டங்களில் அணி திரள்வார்கள். அதாவது நீடித்த உள்நாட்டு யுத்தம். இப் பாடசாலையில் அவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு பெறுவார்கள்.

படிகள் 16, 1982

37 ➡ சுகுணா

விதியின் அழிவுடனும் சம்பந்தப்பட்டது. இதைப்பற்றி தமிழ் மார்க்சியர்கள் ஆராய்வது அவசியம். பெண் விடுதலை என்பதையும் வர்க்கக் கண்ணோட்டத்திற்குட்படுத்தியே ஆராயவேண்டும் என்பதே என் நிலை.

பாரதிக்கும் புதுமைப்பித்தனுக்கும் எங்கே விளம்பரம் கிடைத்தது. அவர்கள் சந்திக்காத ஒதுக்கல்களையா இந்த 'நல்ல முளைகள்' சந்தித்தன. உண்மையில் விதையொன்று போட சுரையொன்று முளைக்குமா என்பதுதான் விடயம். இவர்களை பிறர் அழிக்கவில்லை. இவர்களின் உயரம் இவ்வளவுதான். ஒரு டால்ஸ்டாய், ஒரு பாரதி, ஒரு புதுமைப்பித்தன் மாதிரி இவர்களால் 'மகா' கலைஞர்களாக வரமுடியாது. அப்படி வர 1) சமூகத்தின் மீது ஆழ்ந்த ஈடுபாடு, பிரக்ஞை 2) ஆழ்ந்த கலை உணர்வு (கூரிய முனை மழுங்காத கலை ரசனை) 3) கடினமானதும், முழுமையான அர்ப்பணிப்புடையதுமான உழைப்பு என்பன தேவை. அதுவும் இன்றைய நமது சமுதாய அமைப்பில் மேற்கூறியவர்களைப் போலவே எதிரோட்டம் போட்டு சாகவும் வேண்டியிருக்கும். நானறிந்த நல்ல முளைகளுக்கெல்லாம் எழுத்துக்காக தம்முடைய வாழ்வை அர்ப்பணித்து துன்பப்படத் துளியும் மனமில்லை. ஆனால் 'மகா' என்ற அங்கீகாரம் தேவை. அதற்கு வழி பொய்யான விளம்பரங்கள், ஜால்ரா ஒலிகள் - சொப்னா லோகம்தான். யாரும் உண்மைநிலையைச் சுட்டிக்காட்டி நீங்கள் 'மகா' இல்லை 'சின்ன' ரகந்தான் (நல்ல என்றாலும்கூட) என்றாற்போதும் பாய்ந்து பிடுங்கி விடுவார்கள். பிறகு ஜன்மப்பகை வேறு.

சூரியன் வருவதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் இன்று நமது சமூகம் மொத்தமுமே ஒரு தாழ்வைச் சந்தித்திருக்கிறது என்பதுதான் உண்மை. இதுவரை காலமும் கடிபட்ட காயமும் வலியும் போதுமென்பதால் இனியும் இலக்கியம் பற்றிப்பேச பிரியமில்லை. இத்துடன் விட்டுவிடுவோமே. விடுவது இந்த இலக்கியத்தைப் பேசுவதைத்தான். 'குடை' பற்றிப் பேசுவதை அல்ல.

செ.ஈஸ்வரன்
21.5.93

பின்குறிப்பு: ஒரு கட்டுரையைக்கூட ஒழுங்காக எழுத முடியவில்லையா என்று நான் எழுதியபோது இந்த ஒரு கட்டுரையை ஒழுங்காக எழுதவில்லை எனவே எண்ணி எழுதினேன். அவர் தம் வாழ்வில் ஒரு கட்டுரையைக்கூட சரியாக எழுதவில்லை என்ற அர்த்தத்தில் அல்ல. பேச்சு வழக்கிலே கூறுவதை எழுத்தில் அப்படியே தந்ததால் பொருள் திரிந்துவிட்டது. அதனால் சி.சி.யும் குழம்பி தன்பற்றிய மதிப்பீடு, புதுக்கவிதை கவிதை கட்டுரை எனது கடந்தகால வாசிப்பு எல்லாவற்றையும் அநாவசியமாக ஆராய்வதில் நேரம் செலவிட நேர்ந்து விட்டது. மன்னிக்கவும். ஒரு வசனத்தை ஒழுங்காக எழுதாததால் வந்த வினை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சோசலிசமும் முதலாளிய மீட்சியும்

கோ.கேசவன்

2



முதலாளியப் புரட்சிக்கும் சோசலிசப் புரட்சிக்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. முதலாளியப் புரட்சி நடைபெறுவதற்கு முன்னரே அந்த நாட்டில் முதலாளியப் பொருளாதாரக் கூறுகள் காணக் கிடைக்கும். அவற்றை தொகுத்து விரிவாக்கம் செய்தலும் அதற்குரிய அதிகார அமைப்பை நிறுவுதலும் முதலாளியப் புரட்சியின் பணிகளாகும். ஆனால் சோசலிசப் புரட்சியில் அரசதிகாரமே முதலில் புரட்சியாளர்களின் கைக்கு வருகிறது. பின்னரே பொருளாதார நிர்மாணப் பிரச்சனை எழுகிறது. லெனின் சொல்வதுபோல் முதல் வெற்றி அரசியல், இராணுவ ரீதியிலாகும்; இரண்டாவதாகவே பொருளாதாரப் பணி தொடங்குகிறது. இரண்டாவது முழுமையடைவதைத் தொடர்ந்தே அந்தச் சமூகம் பொதுவுடமைக்குச் செல்லும்.

இதில்கூட லெனினியத்தின் நுட்பமான பங்களிப்பைக் காண இயலும். சோசலிசப் புரட்சிக்கான முன்நிபந்தனையாக முன்னேறிய நாடுகளின் தொழில்வளர்ச்சியை மார்க்சு கண்டறிந்தார். ஆனால் ஏகாதிபத்திய சகாப்தத்தில் பின்னடைந்த நாடுகளில்கூட சோசலிச அரசியல் புரட்சி சாத்தியம் என்பதைக் கண்டறிந்து அந்நாடுகள் புதிய வகைப்பட்ட ஜனநாயகப் புரட்சியின் ஊடாக சோசலிச பொருளாதார நிர்மாண காலத்திற்கு சென்றடைய முடியும் என லெனின் கூறினார். 1905 இல் லெனினியக் கண்டுபிடிப்பு 1940 களில் **மாசேதுங்கின்** புதிய ஜனநாயக கோட்பாட்டுக்கான அடிப்படையாகும். இங்கு லெனின், மார்க்சிய நிலைப்பாட்டை வளர்த்தெடுத்தார். பொதுவுடமைக்கு மாறிச் செல்வதற்கு உரிய இடைக்கட்டம் சோசலிசம் என்ற மார்க்சிய நிலைப்பாட்டை, **சோசலிசத்திற்கு மாறிச் செல்வதற்குரிய ஓர் இடைக்கட்டமும் தேவை** என்று வளர்க்கிறார். சோசலிசம் குறித்த கோட்பாட்டுப் பங்களிப்புகளில் முதன்மையான இதைத் தொடர்ந்து இன்னமும் இரண்டு அம்சங்களில் லெனினிய நிலைப்பாட்டைக் காண்பது பொருத்தமாகும்.

1. ஒரு நாட்டில் சோசலிசப் புரட்சி சாத்தியமெனில், அந்த நாட்டில் சோசலிசப் பொருளாதாரப் புனர்நிர்மாணம் முழுமையடைவது சாத்தியமா?

2. ஒரு சோசலிச சமூகம் வரலாற்று விதிகளின்படி முன்னோக்கித்தான் செல்லுமா? இல்லை, பின்னடைவுக்கு உள்ளாகும் சாத்தியம் ஏற்பட்டுவிடுமா? அதாவது சோசலிசத்திற்கு அடுத்து பொதுவுடமைக்குச் செல்லாமல் முதலாளிய மீட்சி நடைபெறுவது சாத்தியமா? அதாவது சோசலிசமும் அல்லாமலும் முதலாளியமும் அல்லாமலும் ஒரு நிலையை உருவாக்குதல் சாத்தியமா?

இதைக் குறித்து லெனின், மாவோ ஆகியோர் கருத்துரைத்துள்ளனர். ரசிய, போல்சிவிக் கட்சிக்குள் எழுந்த கருத்து மோதல்களின்பொழுது ஸ்டாலின், டிராஸ்க்கி ஆகியோர் இது குறித்து பங்காற்றியுள்ளனர். இது குறித்த ஆய்வுகளில் பலநாடுகளில் பல அறிஞர்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. புரட்சிக்குப் பிந்தைய சமூகங்கள் குறித்து ஆய்வு செய்த **ஜார்ஜ் தாம்சன், பால் எம்.சுவீசி, சார்லஸ் பெத்தலஹீம், சு.சவோஜி** ஆகியோர் இது குறித்து தம் ஆய் வுகளை வெளியிட்டுப் பங்களித்துள்ளனர். இவற்றைக் காண்போம்.

ஒரு தனிநாட்டில் சோசலிசப் புரட்சி சாத்தியம் என்றும் அங்கு சோசலிசத்தைத் தொகுத்துக்கொள்வதும் பராமரிப்பதும் சாத்தியம் என்று லெனின் குறிப்பிட்டார். ஆயின் உலக முதலாளிய அரசியல் பொருளாதார இராணுவச் சூழலில் பெரும்பாலான நாடுகள் சோசலிசக் கட்டமைப்புக்குள் வராத வரையில் ஒரு தனிநாட்டில் சோசலிசத்தின் இறுதி வெற்றி சாத்தியமில்லை என்றும் குறிப்பிட்டார். லெனினுக்குப் பிறகு முதன்மை பெற்ற விவாதங்கள் இன்றளவும் செல்வாக்குச் செலுத்து கின்றன. டிராஸ்க்கி பின்னடைந்த ஐரோப்பாவை வைத்துக் கொண்டு ரசியாவில் சோசலிசத்தை பராமரிக்க எண்ணுதல் நம்பிக்கையற்றதாகும் என்றார். லெனினுக்குப் பிறகு அதி காரத்திற்கு வந்த ஸ்டாலின், ஏனைய நாடுகளின் பாட் டாளிவர்க்கப் புரட்சிகளின் பூர்வாங்க வெற்றி எதுவுமின் றியும்கூட ஒரு நாட்டில் சோசலிசம் வெற்றி பெறக்கூடிய சாத்தியத்தைக் காண்பதாகக் குறிப்பிட்டார்(Problems of Leninism, p 212). சோசலிச நாட்டின் உள் முரண்பாடுகளையும் சோசலிச நாட்டிற்கும் உலக முதலாளித்துவத்துக்கும் உள்ள முரண்பாடுகளையும் **பகுக்கவியலாத ஒன்றின் இரட்டை நிலைகளாக ஒருங்கிணைத்து** லெனின் கண்டறிந்தார். ஸ்டாலின் ஒரு சோசலிச நாட்டின் இறுதி வெற்றிக்கு, அதன் உள் முரண்பாடுகளை மட்டுமே கண்டார். ஆகவே பெரும்பாலான நாடுகளில் புரட்சிகளின்றிக்கூட ஒரு நாட்டில் சோசலிசம் இறுதி வெற்றி பெற இயலும் என ஸ்டாலின் முடிவுக்கு வந்தார். டிராஸ்க்கி அவையின்றி புரட்சியின், பயன்களை பராமரிக்க இயலாது என்றார். இவையிரண்டும் முரண் பாடுகளின் அனைத்தும் தழுவிய தன்மையைக் (Universality of Contradictions) கணக்கிலெடுக்கவில்லை. ரசிய சோசலிச அமைப்புக்கு ஸ்டாலினியத்தின் மகத்தான பங்களிப்புகளுக்கூடே இதையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாவது அம்சம் - ஒரு சோசலிச நாட்டின் முதலாளிய மீட்சியின் சாத்தியம். இது முதல் அம்சத்தோடு தொடர்புடையதாகும். **பாட்டாளி வர்க்கம் தாம் வென்றெடுத்த அதிகாரத்தைக்கொண்டு முதலாளிவர்க்க எதிரிகளை அமுக்கி வைக்கவில்லையெனில் மொத்த வெற்றியுமே தோல்வியில் முடியு**மென ஏங்கெல்சு (12-5-1883) கருதினார். ரசியப் புரட்சிக்கு முன்னரே இத்தகைய முதலாளிய மீட்சி குறித்து லெனின் குறிப்பிட்டுள்ளார்



(10:280;26:172). **சிறு முதலாளிய முறை, குலாக்குகளின் எழுச்சி, அதிகாரிகளாக உருவெடுத்த கம்யூனிஸ்டுகள், உலக முதலாளிய இராணுவ அபாயம்** ஆகியவற்றால் பின் னடைவு - முதலாளிய மீட்சி (இது லெனினின் சொல்) சாத்தியமென்பதை லெனின் இறுதிவரை(27:337-338 ;28:172; 31:493-95) வலியுறுத்திக் கொண்டே இருந்தார். இதைத் தடுத்து நிறுத்தக்கூடிய சாத்தியமான அம்சங்களெனக் கீழ்க் கண்டவற்றைத் தொகுத்தார்.

1. வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளர் - விவசாயிகள் இணைவு. குலாக்களுக்கு எதிராக ஏழை விவசாயிகள் ஒருங்கிணைதல். அதிகாரவர்க்க தவறுகளை சரிசெய்தல். தொழிலாளர் - விவசாயிகள் பண்பாட்டு அளவை உயர்த்தல்.

2. நேர்மையான பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் (a jenceine - 27:394)

சுருக்கமாகச் சொன்னால் ஒரு பாட்டாளிவர்க்க சர்வாதிகார அரசின்கீழ் வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளர்கள் - விவசாயிகள் தொடர்ந்து நடத்தும் வர்க்கப் போராட்டமே முதலாளிய மீட்பைத் தடுக்கும்; உருவான சோசலிச அமைப்பை பராமரிக்கும். இது **தற்காப்புநிலை** ஆகும் (Defensive). உலக முதலாளிய அமைப்புக்குள் சோசலிச அமைப்பு நடத்தும் ஊடுருவலையும், விரிவாக்கத்தையும் பொறுத்து இது மாறிச்செல்லும். எனவே பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் வர்க்கப் போராட்டம் என்ற இரண்டு ஆயுதங்கள் இல்லையெனில் - அல்லது அவற்றை அலட்சியப் படுத்தினால் லெனின் குறிப்பிட்டதுபோல் முதலாளிய மீட்சிக்குரிய நம்பிக்கை, முதலாளிய மீட்சிக்குரிய முயற்சிகளில் போய் முடியும்; முயற்சி, உறுதியாகவும் (surely) தவிர்க்க வியலாத வகையிலும் ( inevitable) தொழிலாளர் அதிகாரத்தைத் தூக்கி எறிந்துவிடும்.(27:337 ; 28:254) **இந்த நிபந்தனைகளின்றி வரலாற்றின் பின்னடைவு தவிர்க்கவியலாது.** சோசலிசம் குறித்த இத்தகைய லெனினிய புரிதல்களோடு, சீனப் புரட்சிக்குப் பிந்தைய மாவோவின் அனுபவத்தைக் காண்போம்.

மாவோ இதில் லெனினியத்தைப் பின்பற்றி ரசியா மற்றும் யூகோஸ்லேவியா ஆகியவற்றின் அனுபவங்களைத் தொகுத்துக்கொண்டு சீன நடைமுறையை விமர்சித்தார். லெனின் ஒருமுறை குறிப்பிட்டார்:

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், வர்க்கப் போராட்டம் முடிந்துவிட்டது என்பதைக் குறிக்கவில்லை. ஆனால் அதைப் புதிய வடிவங்களில் தொடர்ந்து நடத்துதலாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது பாட்டாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டமாகும்; தோல்வியடைந்த ஆனால் அழிந்துவிடாத முதலாளியத்தை - இன்னும் மறைந்துவிடாத முதலாளியத்தை - எதிர்ப்பை இன்னும் கைவிட்டு விடாமல் மேலும் ஆழப் படுத்தியுள்ள முதலாளியத்தை எதிர்த்து அரசதிகாரத்தைக் கையில் எடுத்துள்ள பாட்டாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டமாகும். (விடுதலை மற்றும் சமத்துவம் ஆகிய முழக்கங்களை வைத்து மக்களை ஏமாற்றுதல் என்ற பேச்சுரையின் முன்னுரை).

சோசலிச சமூகத்திலும் முதலாளித்துவத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டம் நடத்துதலை வற்புறுத்திய லெனினியத்தைக் கவனமாகப் பின்பற்றிய மாவோ சீன சமூகத்திலும் இதன் தேவையை உணர்ந்தார்.

ஐரோப்பாவில் நடைபெற்ற முதலாளியப் புரட்சிகள் ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருந்தன. நிலப்பிரபுத்துவம் தூக்கியெறியப்பட்ட பின்னர், நிலப்பிரபுத்துவ மீட்சி பல முறை நிகழ்ந்தன. அதிஷ்டம் மாறி மாறி அடித்தது. இத்தகைய பின்னடைவு, சோசலிச சமுகங்களிலும் சாத்தியமாகும். எடுத்துக்காட்டாக யூகோஸ்லேவியா தன் இயல்பை மாற்றிக்கொண்டு, திருத்தல் வாதமாக மாறிவிட்டது. தொழிலாளர் - விவசாயிகள் நாடு, பிற்போக்கான தேசியவாத சக்திகளால் ஆளப்படும் நாடாக மாறி விட்டது. ....வர்க்கப் போராட்டத்தின் இருப்பை நாம் அங்கீகரிக்க வேண்டும். பிற்போக்கு வர்க்கங்களின் மீட்சிக்குரிய சாத்தியம் உண்டு என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும்(24-9-1962 எட்டாம் மத்திய குழுவின் பத்தாவது பிளீனத்தில் ஆற்றிய உரை).

புரட்சிக்குப் பிந்தைய சீனாவில் பிற்போக்கு வர்க்கங்களின் மிச்ச சொச்சம் இருக்கின்றது என்றும் அவர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றும் மாவோ கட்சியினரை எச்சரித்தார்(30-1-1962). இந்தப் போக்கின் பிரதிநிதித்துவம் கட்சிக்குள்ளே உள்ளது என்பதையும் குறிப்பிட்டார். சோசலிசப் புரட்சியை நடத்தியுள்ளோம் என்றும் முதலாளியம் எங்குள்ளது என்பதைக் கண்டறியவில்லை. அவர்கள் பொதுவுடமைக் கட்சிக்குள்ளே-முதலாளியப் பாதைக்கு இட்டுச் செல்லும் சிந்தனையாளர்களாக இருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார் (ஜனவரி 1965). இதன் சமூக வேர்களையும் மாவோ குறிப்பிட்டார்.

ஜனநாயகப் புரட்சி முடிந்த பின்னர் தொழிலாளர்களும் வறிய மற்றும் கீழ்நிலை நடுத்தர (lower middle) விவசாயிகளும் அத்தோடு நின்றுவிடாமல் **புரட்சியைத் தொடர்ந்து நடத்த விரும்பினர்.** அதற்கு மாறாக கட்சி உறுப்பினர்களில் பலர் **முன்னேறிச் செல்ல விரும்பவில்லை;** சிலர் பின்னோக்கியும் திரும்பத் தொடங்கி **புரட்சியை எதிர்த்தனர்.** ஏன்? அவர்கள் உயர் அதிகாரிகளாக மாறி, உயர் அதிகாரிகளின் நலன்களைப் பாதுகாக்க விரும்பினர். (மேற்கோள், Vanguard, June 1985)

கட்சி அரசாங்கம், இராணுவம் ஆகிய துறைகளிலும் பண்பாட்டுத் துறையின் பல பிரிவுகளிலும் ஊடுருவியுள்ள இவர்களை **முதலாளியப் பாதையாளர்கள்** என்றும் **எதிர்ப் புரட்சிவாதிகள்** என்றும் மாவோ வரையறை செய்தார். 'நிலமைகள் சாதகமாகக் கனிந்தவுடனே இவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளிய வர்க்க சர்வாதிகாரமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றிவிடுவர்' என்றும் மாவோ முன்னுணர்ந்து கூறினார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறு அறைகூவல் விடுத்த



மாவோ, பிற்போக்கு வர்க்கங்களின்மீது சர்வாதிகாரத்தைப் பயன் படுத்தும்பொழுது கட்சியையும் மக்கள் திரளையும் சார்ந்திருக்க வேண்டியது அவசியம் என்பதையும் வலியுறுத்தினார் (30-1-1962). பாட்டாளிகள் தம் தலைமையைப் பொதுவுடமைக் கட்சியின் வழியாகச் செலுத்த முடியும் எனக் குறிப்பிட்ட மாவோ கட்சித் தலைமையில் உள்ள சிலர் தவறான பாதையைப் பின்பற்றும்பொழுது அவர்களைத் திருத்தும் வழிமுறைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறார். கட்சிக்கும் மக்கள் திரளுக்கும் இடையிலான உறவுமுறையில் கட்சியின் தவறுகளை விமர்சிக்கவும் திருத்தவும் ஆன உரிமைகளை மக்கள் திரள் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். தவறு செய்யும் கட்சித் தலைமையினர், விமரிசனம் செய்யும் மக்களைக் கண்டு அஞ்சக் கூடாதென்றும் மக்களை வெளிப்படையாகப் பேச அனுமதிக்க வேண்டும் என்றும் மாவோ விரும்பினார் ( ஜனநாயக மத்தியத்துவம் குறித்து, 30-1-62). கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் நடைபெற்றாக வேண்டிய வர்க்கப் போராட்டத்தில் மக்கள் திரளின் முன் முயற்சியைக் கட்டவிழ்த்துவிட்டு மக்களை ஈடுபடுத்தும் இத்தகைய போராட்ட வடிவம், சோசலிசத்தைத் தொகுத்துக் கொள்வதற்கும் முதலாளியப் பாதையை எதிர்ப்பதற்கும் உரியதாகும். இது **மாவோ சிந்தனையின் பங்களிப்பு**. இந்தப் போக்கு பிரதானப்படுத்தப்படாமல் போனால் முதலாளிய மீட்சி சாத்தியம் என்பதைக் குறிப் பிட்ட மாவோ, அதுவே நிரந்தரமாகிவிடும் எனக் குறிப்பிட வில்லை. புரட்சியை நேசிக்கும் மக்களால் மீண்டும் தூக்கியெறியப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

> நமது அடுத்த பரம்பரைத் திருத்தல்வாதத்தில் மூழ்கி இப்போதைய நிலைக்கு எதிர்மறையாகத் திரும்பினால் - அதாவது அவர்கள் **பெயரளவில் சோசலிசத்தையும் வாய்மையில் முதலாளியத்தையும்** கொண்டிருப்பினும் - அதற்கு அடுத்த பரம்பரையினரான நம் பேரக்குழந்தைகள் அதில் நிறைவுறாமல் புரட்சியில் உறுதியாக எழுந்து நின்று **தம் தந்தையரைத் தூக்கியெறிவர்.** ( எட்டாம் மத்தியக்குழுவின் பத்தாம் பிளீ னம், 24-9-62)

**நிலைமறுப்பின் நிலைமறுப்பு** என்ற இயங்கியல் கோட் பாட்டின் அடிப்படையில் வரலாற்றின் நிகழ்வுகளை விளங் கிக்கொண்ட மாவோ முதலாளிய மீட்சியின் தோற்றத்தை மட்டுமின்றி அது அழியும் சாத்தியத்தையும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மாவோவின் கருத்தே சீனத்தின் ஆளுகை பெற்ற கருத்தாக எப்போதும் இருந்ததில்லை. டெங். தியோபிங் காலத்தில் (1978 தொடங்கி) ஏற்பட்டு வரும் பல மாற்றங் களினால் முதலாளிய மீட்சி குறித்த இந்தக் கருத்துங்கூட மாற்றப்பட்டு விட்டதைக் காண்கிறோம். பெய்ஜிங் நகரில் உள்ள சமுக விஞ்ஞானக் கழகத்தின் மார்க்சிய லெனினிய மாசேதுங் சிந்தனை நிறுவன இயக்குனர் சுசோவாஷி அவர்களின் பேட்டியொன்றில் முதலாளிய மீட்சி குறித்த பல கருத்துக்கள் மாவோவின் கருத்துக்களோடு முரண்கொள்கின்றன ( Monthly Review Vol. 38 Sept. 1986). சோசலிச சமுகத்தில் முதலாளிய மீட்சிக்கான அபாயம் குறித்த கேள்விக்கு அவர் பதிலளிக்கிறார்.

> சோசலிச சமுகத்தில் முதலாளிய மீட்சிக்கான அபாயம் உள்ளதென்பது தவறு என நாங்கள் கருதுகிறோம். நாம் நமது கொள்கையைக் கவனமாகப் பரிசீலித்து தனிப்பட்ட தொழில் முனைவர்கள் மேலும் முதலாளிமயமாவதை அனுமதிக்கக் கூடாது. சில இலட்சாதிபதிகள் தோன்றினாலும் அவர்களால் முதலாளிய அமைப்பை மீளக்கொண்டு வர முடியாது. இதற்கு முன்பு சோவியத் ஒன்றியத்தில் முதலாளிய மீட்சி நடந்தது எனச் சொன்னோம். ஆனால் அவ்வாறு சொன்னது தவறு என நாங்கள் கருதுகிறோம். அது "இடதுசாரிக் கருத்தின்" செல்வாக்காகும் (பக்.22).

இன்றைய நவீன சீனா, சோசலிச சமுகத்தில் முதலாளிய மீட்சி சாத்தியமில்லை எனக் குறிப்பிடுகிறது. மாசேதுங்கின் சிந்தனை 1957 க்குப் பின் பெரும்பாலும் தவறானவை என்



றும் குறிப்பாக **சோசலிச சமுகத்தில் வர்க்கப் போராட்டமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் தொடர் புரட்சியும்** என்ற அவரது கருத்துக்கள் முழுமைக்கும் தவறானவை எனக் கருதப்படுகிறது (மேற்படி பேட்டி, பக்.24). லெனின், மாசேதுங் ஆகியோரது கருத்துக்கள் நவீன சீனத்தில் முற்றாக மறுக்கப்பட்டுள்ளன. இது குறித்துப் பின்னர் காண்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெனின், மாவோ ஆகியோரின் சிந்தனை களையொட்டி சோசலிசத்தில் முதலாளிய மீட்சி குறித்த கருத்துக்களைக் கோட்பாட்டளவில் தொகுத்தளித்தவர்களில் முதன்மையாளராக சார்ள்ஸ் பெத்தலஹீம் அவர்களைக் குறிப்பிடலாம். சோசலிசப் புரட்சி நடந்து முடிந்தபின் உற் பத்தி சாதனங்களில் தனியுடைமையை ஒழித்தால் முதலாளி வர்க்கம் மறைந்துவிடும் என எண்ணுவது தவறு என்றும் அரசுடமை என்னும் திரைக்குள் சுரண்டல் உறவுகள் ரசியாவில் பேணப்பட்டு வருகின்றன என்றும் கண்டறிந்து அரசுடமைப் பொருளாதாரத் துறைகளில் முதலாளிய உறவுகளே பேணப்பட்டன என்றும் இந்நிலையில் கட்சியிலும் ஆட்சியிலும் உள்ள அதிகாரத்துவப் பிரிவினர் **ஒரு புதிய முதலாளிய வர்க்கமாக** உருவெடுக்கின்றனர் என வரையறை செய்கிறார். **சோவியத் நாட்டில் வர்க்கப் போராட்டங்கள்** என்ற நூலில் பெத்தலஹீம் விரிவு படுத்திய இந்தக் கருத்துக்களை **மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை புரட்சிகர இயங்கவியல் பற்றிய ஓர் ஆய்வு** என்ற தன் படைப்பில் **ஜார்ஜ் தாம்சன்** மேலும் பல விளக்கக் குறிப்புகளுடன் எழுதியுள்ளார். (தமிழில் மொழிபெயர்ப்பு; எஸ்.வி.ராஜதுரை மற்றும் இன் குலாப். பக். 172 - 180; 198 - 202). சார்ள்ஸ் பெத்தலஹீம் மற்றும் **ஜார்ஜ் தாம்சன்** ஆகிய இருவரும் லெனினிய மாசேதுங் வழியில் முதலாளிய மீட்சிக்குரிய சாத்தியம் பற்றிய கோட்பாட்டை ஒத்துக் கொண்டவர்கள். **பால்.எம்.சுவீசி,** மாவோயிசத்தின் முதன்மைப் பங்களிப்புகளை ஏற்றுக் கொண்டவர். குறிப்பாக சோசலிச சமூகத்தில் வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் தொடர்புரட்சி என்ற மாவோவின் கருத்துக்களை ' இருபதாம் நூற்றாண்டின் யதார்த்தத்திற்குப் பொருந்தும் விதத்தில் மார்க்சியத்தை நடத்திச் செல்லும் மிக முதன்மையான பங்களிப்பு' என சுவீசி வரையறை செய்துள்ளார். (Monthly Review Sept. 1986. p27). எனினும் இவர் முதலாளிய மீட்சி குறித்த கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. இந் நாடுகள் முதலாளியத்திற்கும் (அல்லது முதலாளியத்திற்கு முந்திய நிலை) பொதுவுடைமைக்கும் இடைப்பட்ட இடைநிலைச் சமூகங்களாக இல்லாமல் ஒரு புதிய வகைப்பட்ட சமூகமாக (அல்லது உற்பத்திமுறையாக) இருக்கிறது என்றும் குறிப்பிட்டு இந்த சமூகங்களை **புரட்சிக்குப் பிந்தைய சமூகங்கள்** என்பதே பொருத்தம் என்கிறார். இந்த புதிய சமூகம் **வர்க்க சமூகம்** என்றும் இதில் அரசே ஆளுமை பெற்ற அரசியல், பொருளாதார நிறுவனம் என்றும் அரசைக் கட்டுப்படுத்துபவர்களே புதிய ஆளும் வர்க்கம் என்றும் குறிப்பிடுகின்றார். அதாவது ஒரு சோசலிசப் புரட்சி நடந்த நாட்டில் **'முதலாளியமும் அல்லாத சோசலிசமும் அல்லாத ஒரு புதியவகைச் சமூகத்தைக்'** காணமுடியும் என்பதே இவரது கருத்து (Monthly Review Sept. 1986, p.27). புரட்சிக்குப் பிந்தைய சமூகம், (மொழிபெயர்ப்பு. பக். 209). மரபு வழிபட்ட முதலாளியப் பொருளாதார அம்சங்களை அவற்றின் இயல்பிலேயே சீரழிந்த சோசலிச சமூகங்களிலும் காணவிரும்பும் போக்கை இவரிடம் நாம் காண்கிறோம் எனினும் (புரட்சிக்குப் பிந்திய சமுதாயம், பக். 212 - 215), சோசலிச நாட்டில் வர்க்கம் பற்றிய வரையறையில் சுவீசி குறிப்பிடும் சில கருத்துக்கள் முதன்மையாக உள்ளன. (மேற்படி நூல். பக். 114). மரபு வழிப்பட்ட முதலாளிய பொருளாதார அம்சங்களிலிருந்து புதிய வகைப்பட்ட முதலாளியம் எந்தெந்த வடிவங்களில் மாறுபடுகின்றது என்பதையும் அத்தகைய மாறுபாடு இருப்பினும் முதலாளிய உற்பத்தி முறையின் அடிப்படையான அம்சங்களுடன் எவ்வெவ்வாறு புதிய வகைப்பட்ட முதலாளியம் இணைகின்றன என்பதையும் பின்னர் காணலாம். இவை முதலாளிய சமூகமா இல்லையா என்பதில் வேறுபாடு கொண்டிருப்பினும் சுவீசி, **இன்றைய உலகில் சோசலிசத் தளங்கள் இல்லையென்பதில் உடன்பாடு கொள்கிறார்.**

ஏங்கெல்சு தொடங்கி ஜார்ஜ் தாம்சன் ஈறாக ஒரு சோசலிச நாட்டில் முதலாளிய வர்க்கத்தின் மீட்சி குறித்த கோட்பாடுகளை தம் வரலாற்று அனுபவங்களோடு சுட்டிக் காட்டியுள்ளனர் எனக் கண்டறிந்தோம். அதே நேரத்தில் டெங், சாவோசி ஆகியோர் தம் திருத்தல்வாதத்தையும் முதலாளியப் பாதையையும் நியாயப்படுத்துவதற்காக சோசலிசத்தில் முதலாளிய மீட்சிக்கான சாத்தியமே யில்லையெனக் குறிப்பிட்டுள்ளனர்; அல்லது இன்றைய சீனத்தில் அத்தகைய மீட்சி ஏற்பட்டு விடவில்லை என நிரூபிக்க முயன்று கொண்டிருக்கின்றனர். ஆனால் சோசலிச வரலாறு, லெனினியத்தையும் மாசேதுங் சிந்தனையையும் நிரூபித்துள்ளது. புதிய முதலாளியத்தைக் கோட்பாட்டளவில் முதலில் கண்டுணர்ந்து வரையறை செய்தவர் லெனின் ஆவார். முதலாளிய வர்க்கத்தை சர்வாதிகாரத்தைக் கொண்டு அமுக்கி வைக்கவில்லையெனில் புரட்சி தோல்வியில் முடியும் என்று ஏங்கெல்சு, ஒரு தோல்வியை மட்டுமே முன்னுணர்ந்து கொள்ள முடிந்தது. தோல்விக்குப்பின் அங்கு உருவாகும் வெற்றிடத்தை இட்டு நிரப்புவது எது என்பதை ஏங்கெல்சு எடுத்துரைத்திருக்கவியலாது. லெனின் ஒருபுரட்சிக்கு முன்பும், புரட்சிக்குப் பின்பு சில ஆண்டுகளும் வாழும் வாய்ப்பைப் பெற்றதாலும் புரட்சியில் வீழ்ச்சியடைந்த வர்க்கங்களையும் கட்சியின் புதிய வர்க்கத் தன்மையையும் **ஓரளவே** கண்டுணரும் வாய்ப்பைப் பெற்றதாலும் லெனின் காலத்தில் இத்தகைய நிகழ்வுப் போக்கு யதார்த்தமாகாததாலும் முதலாளிய மீட்சி குறித்த தொடக்கப் புரிதலோடும் வரையறையோடும் மட் டுமே இருக்க நேர்ந்தது. எனினும் ரசியாவின் பழைய வர்க்கங்களிலிருந்து ஒரு புதிய முதலாளி வர்க்கம் தோன்ற இயலும் எனத் தெளிவாக லெனின் குறிப்பிட்டார் (LCW 29. 189). 'விந்தையாகத் தோன்றக்கூடிய இந்த உண்மை சரக்கு உற்பத்தியிலும் சிறு உற்பத்தியிலும் புதைந்து கிடப்பதாகவும் **இது சாதாரண முதலாளியம் வரை கொண்டு வந்துவிடும்'** எனவும் ஸ்டாலின் குறிப்பிட்டார் (ஸ்டாலின் தொகுப்பு நூல் 11:235, 7:350). ஒரு சோசலிசப் புரட்சிக்குப் பிந்தைய சமூகத்தின் சோசலிசப் பொருளாதார நிர்மாணத்தில் ஏறத்தாழ இருபதாண்டுகள் (1956 - 1976) நடைமுறை அனுபவங்கொண்ட மாசேதுங், இடையறாத இருவழிப் போராட்டத்தின் ஊடாக முதலாளியச் சிந்தனையாளர்களால் முன்மொழியப்பட்ட முதலாளியப் பாதையை அரசியற் தளத்தில் வெகுவாக அம்பலப்படுத்தியுள்ளார். மாவோவின் படைப்புகளின் (புரட்சிக்குப்பின் வந்த) சோசலிச உருவாக்கம் குறித்த பொருளாதாரப் பிரச்சனைகள் நிரம்ப விவாதிக்கப்பட்டிருக்கின்றன. ரசிய அனுபவங்களை விமர்சிக்கும் பொழுது (ரசியப் பொருளாதாரம் - ஒரு விமர்சனம், மாசேதுங்) சீன அனுபவத்தையும் சீன யதார்த்த நிலைகளையும் மட்டுமே பெரிதாக மாவோ மனதில் கொண்டிருந்தார். ரசியாவின் சோசலிச உருவாக்கத்திலிருந்து சீனா எந்தெந்த விதங்களில் வேறுபட வேண்டியுள்ளது என்பதையும் அந்நூலில் மாவோ தொகுத்துக்கொடுத்துள்ளார். இதில் முதலாளிய மீட்சி குறித்த ஆய்வு இல்லையெனினும் சீனாவில் சோசலிச உறவின் வடிவங்கள் குறித்த ஆய்வு காணப்படுகின்றது. ஆனால் முதலாளிய மீட்சி குறித்த பொருளாதார, அரசியல் விளக்கங்களை சீன பொதுவுடமைக் கட்சி **யூகோஸ்லேவியா** குறித்து ரசியப் பொதுவுடமைக் கட்சிக்கு எழுதிய கடிதத்தில் (மக்கள் தினசரி 26-9-1963, மாபெரும் விவாதம், தமிழ் மொழிபெயர்ப்பு பக்.342-360; 365 - 366; 384) காணலாம். சீனாவில் லியோசோஷி தலைமையிலான முதலாளியப் பாதையை எதிர்க்கும் காலத்தில் மாவோவின் தலைமையிலான சீன பொதுவுடமைக் கட்சி எழுதிய இக்கடிதத்தில் விவசாயத்திலும் தொழிற்துறையிலும் முதலாளிய உறவுகள் மீண்டும் கொண்டு வரப்படும் வடிவங்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய மீட்சி நிலைக்கு மாவோக்குப் பிந்தைய சீனமும் பலியானதையும் வரலாற்றில் காண்கிறோம். முதலாளிய மீட்சி குறித்த இத்தகைய புரிதல்களோடு முதலில் ரசிய அனுபவத்தைக் காண்போம்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எது உயிரோட்டமானது? எது கிணற்றுத் தவளைத் தனமானது?

–ஈஸ்வரன்

உங்கள் இதழ்கள் பார்த்து வருகிறேன். நன்றாக உள்ளது. இதழுக்கு இதழ் நன்றாக வளர்ந்தபடி செல்வதைக் காண்கிறேன். கடைசி இதழில் எனது கடிதம் பற்றி திரு.சிவசேகரம் எழுதிய கடிதம் கண்டேன்.

1. தமிழில் அயற்பேர்கள் தொடர்பான கருத்துக்களுக்கு (பாராட்டுக்கும், சிவசேகரத்தின் திட்டுக்கும்) உரியவர் நானல்ல. வேறு ஒரு நண்பர். அவர் கூறியவற்றையே நான் எழுதியிருந்தேன். அவர் தனது பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்பதால் குறிப்பிடவில்லை, அவ்வளவே!

சி.சி.கடிதம் பற்றி:

D க்கு ஒலி என்ன என்பதை சரியாகவே ஊகிக்க முடியும் என்கிறார். கேள்வி ஒரு எழுத்துக்கு இருவேறு ஒலி இருக்கையில் வாசிப்பில் தேர்வு செய்வது எமது முன்னறிவை வைத்து அல்லவா! இதே வாய்ப்பு தமிழ் எழுத்துக்கள் விஷயத்தில் மட்டும் எப்படி பொருந்தி வராது போகிறது என்பதே. ஊகித்தே உச்சரிக்க வேண்டுமெனில் அந்தப் பிறமொழி எழுத்துக்களைத் தேர்வு செய்ய வேண்டிய அவசியம் என்ன? அடுத்தது, மொழியின் வளர்ச்சியென்பது இயல்பானதாக அமைய வேண்டுமென்பது. பிறமொழி எழுத்துக்களைப் புகுத்துவது அபத்தமானது. அத்தகைய செருகல்கள் புறந்தள்ளப்படும். மொழியுடன் அவ்வெழுத்துக்களால் கலக்க இயலாது. ஆரம்ப காலத்தே விளக்கக் குறிப்புடனேயே பாவிக்க வேண்டியனவாயினும் மொழியுடன் இயல்பாகப் பிணைந்து கலந்துவிடக்கூடிய 'யோசனை' களே பயனுள்ளவை என்பதே என் அபிப்பிராயம்.

2. சிவசேகரத்தின் கட்டுரை ('மதராஸில் மழை பெய்தால்') ஒழுங்காக ஒரு கட்டுரையென்று சொல்லக்கூட முடியாதளவிற்கு மோசமாக உள்ளது என்று கூறியதற்காக இப்படிப் பாயவேண்டுமா? "என்னால் ஒரு வசனம் கூட எழுத முடியவில்லையா" என்று சிவசேகரம் கேட்டதற்கு நான் ஆத்திரப்பட மாட்டேன். இப்போது எழுதுவது என்பது எனக்கு மிகவும் painful ஆக உள்ளது. நிறையப் பிரச்சனைகளையும் குறைபாடுகளையும் என்னால் உணர முடிகிறது. ஆனால் சி.சி. விவகாரம் வேறு, அவரது இந்தக் கட்டுரை ஓரே உளறலாக உள்ளது! பொருட் குற்றம் இருப்பினும் கூட ஒழுங்காக எழுத முடியும் என்பதால் இக் கட்டுரை மோசமாக வந்ததற்கு என்ன காரணம், அதை அவர் கூறியிருக்கலாமே!

சி.சி. இக்கட்டுரை ஈழத்தமிழர் பிரச்சனைக்கு ஜெயலலிதாவா, கருணாநிதியா, ராஜீவா, வி.பி.சிங்கா என பதில் தேடிய போக்கை மனதில்கொண்டு எழுதியதாகச் சொல்கிறார். குடை பிடிப்பவர்கள் என்ற கூற்று 'தாம் முகம்கொடுக்கும் சமூக யதார்த்தங்களைப் பற்றிய சுரணை, அக்கறையில்லாமல் பிறநாட்டு இயக்க யதார்த்தங்களை காபன் கொப்பி எடுப்பதைக் குறிப்பிட்டது. ரஷ்ய, சீன போராட்ட வடிவங்களை சுயசிந்தனையற்ற விதத்தே பிரதி பண்ணுவதும், தமது சமூகப் பிரச்சனைகள் பற்றிப் பிரக்ஞையற்றிருப்பதும் 50,60 களில் கம்யூனிஸ்ட் கட்சியினரின் குறைபாடாக இருந்தது என்பது உண்மை. ஆனால் சி.சி.சொல்வது இதுவல்ல. தமது சமூகப் பிரச்சனைக்கு தம் சுயபலத்தில் சார்ந்து நிற்கும் வழியை விடவும் அந்நிய சக்திகளைச் சாரும் போக்கையே அதிகமதிகம் நாடுவதை, இது குடை பிடிப்பதாகாது. தவிர தமிழ்த் தேசியவாதிகள் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும் வழிகாட்ட இயலாது போனதற்கான காரணம்......'எனவும் எழுதுகிறார். தமிழ்த் தேசியவாதிகள் செல்லாக் காசாகி கம்யூனிஸ்டுகள் தலைமையில் போராட்டம் நடக்கிறதா? சி.சி. எந்த உலகில் இருக்கிறார்? விடுதலைப் புலிகள்தான் தமிழ் மண் முழுக்கக் கால்பதித்து நிற்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். காரணம் குறுகிய தேசியவாத அரசியலின் செல்வாக்கு அவ்வளவு பலமாக இருப்பதுதான். நிலைமைக்குச் சம்பந்தமில்லாமல் தம் நினைப்புக்களையே நம்பியிருப்பது நல்லதல்ல. தாம் சர்வதேசக் கண்ணோட்டத்தில் அணுகுவதை எம்போன்ற கிணற்றுத் தவளைகளால் புரிந்து கொள்ள முடியாதாம், மெதுவாக ஒருதடவை சிரித்துவிட்டுப் போகலாம். ஆனால் சி.சி.ஐ நினைக்கப் பரிதாபமாக உள்ளது. (எந்த சர்வதேசக் கண்ணோட்டம் 'டெங் இசமா? க.கட்சிக்காரர்களுக்கு அரசியல் பற்றி ஏதாவது தெரியுமா?) எது உயிரோட்டமானது எது கிணற்றுத் தவளைத்தனம் என்பதை பனிமலரின் விவாத அரங்கிலேயே(தமிழீழம் பற்றிய) முடிவு செய்வோமே!

## பெண் விடுதலை பற்றி......

3. சித்ரலேகா விவகாரம் தொடர்பாகவும் சி.சி. எழுதியிருக்கிறார். அதில் இரண்டு விடயங்கள் குழப்பப்பட்டுவிட்டன போலும். ஒன்று சித்ரலேகா பெண் விடுதலை பேசுவது பற்றிய என் அபிப்பிராயம்.

அடுத்தது, பெண் விடுதலை பற்றியவை:

சித்ரலேகா பந்தம் பிடித்து பதவி சம்பாதிப்பார், கொள்கைகளில் பற்றேதும் அற்றவர் என்பது எனது அபிப்பிராயம். க.கைலாசபதி உயரோடிருந்தவரை இவர்கள் மாக்ஸிசவாதிகள். அதன்மூலம் பெற்ற லாபம், 'பட்டம், பதவிகள்'. இப்போது குமாரி ஜெயவர்த்தனாவின் சீடராம். புதிய தத்துவம் - பெண்ணிலைவாதம். இதன் மூலம் லாபமாக Ph.D பெற வாழ்த்துவோம். இந்த ஜால்ராப் பேர்வழிகள் தமது லாபங்களுக்காக தத்துவங்களையே மாற்றிக் கொள்கிறார்கள். கலை இலக்கியத்துறையில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு தேவை எனும்போது என் காதில் அது 'எனக்கு அங்கீகாரம் வேண்டும்' என்பதாக ஒலிக்கிறது.

நான் வர்த்தக இலக்கியத்தைப் பற்றிப் பேசவில்லை. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பிரசுர வாய்ப்பு சிறு சஞ்சிகைகளில் உள்ளது. ஆனால் பொதுவான ஏற்புடமை இல்லை. ராஜம் கிருஷ்ணனைப் பற்றிப் பேச முடியாது, இந்துமதி சிவசங்கரி பற்றி பேச முடிவது - இப்படியெல்லாம் பேசுவது சரியான ஆய்வுமுறை இல்லை. உள்ளத்துள் உள்ள முடிவைப்பற்றி நிற்பதையே காட்டுகிறது. இவர் பற்றிய எனது அபிப்பிராயம் சி.சி.க்கு அயோக்கியத்தனமாகத் தெரியலாம். ஆனால் அவரது பேட்டியைப் படித்தபோது எனக்கு இப்படித் தோன்றியது சத்தியம். அடுத்தது சி.சி. பெண்களுக்கு, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு, வடமராட்சியினரல்லாதோருக்கு(?), கறுப்பர்களுக்கென, ஒடுக்கப்பட்டோருக்கென வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன - ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் என்கிறார். எனது கேள்வி ஒடுக்கப்பட்டவர்களின் பிரச்சனை வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதா அல்லது அது பிரச்சனையின் வெளிப்பாடு மட்டும்தானா? அதுதான் பிரச்சனையெனில் இட ஒதுக்கீடுதான் தீர்வாக அமையும் - 1) இது குட்டி முதலாளிய வர்க்கப் பார்வை 2) இது சீர்திருத்தவாதத்திற்கு இட்டுச் செல்லும். தாழ்த்தப்பட்ட சாதியினர், பெண்கள் ஆகிய இரு தரப்பினரின் (கறுப்பர் பற்றி எனக்குத் தெரியாது) பிரச்சனையிலும் சமூகத்திலிருந்து அந்நியமாக்கப்படல் பொதுவாக இருப்பினும் இரண்டும் தனித்தன்மை வாய்ந்த இருவேறு பிரச்சனைகள். சாதி நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவு, மேற்கட்டுமானம் என்பவற்றுடன் பிணைந்தது. பெண்களின் பிரச்சனை சமூக அந்நியமாதலுக்கு எதிரான போராட்டத்துடனும் மதிப்பு

➡ 32



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீன்களுக்காகப் பாடப்போன குயில்

என்னை நான் எறிந்தேன்,
ஒரு மரத்தில்.
நான் வெடித்துச் சிதறிய துண்டுகளில் இருந்து
மீன் குஞ்சுகள் உயிர்த்தன.

என் அழகிய குயில்
பூக்களில் எனக்கு
கடிதம் எழுதிவிட்டுப் போயிருக்கிறது,
கடலுக்குள் இருக்கும்
மீன்களுக்குப் பாட.

பூக்களில் எனக்கு கருங்குயில் எழுதிய புதிய பாஷையை
வாசித்துத் தெளிவாக விளங்க
பறந்த இளைய வண்ணத்துப் பூச்சிகளை
அழைத்தேன்.
ஆயிரத்திப் பதின்மூன்று மலர்களிலே மொத்தமாய்
கானக்குயில்
அந்த நெடிய கடிதத்தை
மிகவும் துயருடனே எழுதியிருக்கிறது.

"தலைக்குமேலே போகிறது வெள்ளம்.
எறும்புகள் புல்லுத் தின்னுகின்றன.
போகின்ற போக்கைப்பார்த்தால் வருமநாளில் நாம்
எறும்புப்பாலே பருக நேரிடும்.
இங்கிருக்க
விருப்பமில்லை எனக்கு.
கடலுக்குள் விழுந்து மீன்களுக்காய் பாட
முடிவுசெய்து போகின்றேன்.
ஒருகோடியே இருபத்திநாலுலட்சத்தி முப்பத்திநாலாயிரம்
தடவைகள் பாடும் அளவுக்கு
எனது குரலில் சிறிதளவை
உனக்காக ஒரு போத்தலில் ஊற்றி இந்த மரத்தின் குருத்தில்
வைத்துள்ளேன் எடு.
கழுதையின் வாய்க்குள் ஊற்றினால் கூட
என் பாட்டு வரும்."

வாசித்த வண்ணத்துப் பூச்சிகளும்
தங்கள் இறகுகளில் இருந்த புள்ளிகளை அழித்தன
அழுது.

சோலைக்கிளி
16.6.1993

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்